கல்கி

KALKI
27.3.2005
ரூ.6.00



கிராமிய
சிறப்பிதழ்!



"நான்
'மதாஸ்
கட்சி!"

"விஜயகாந்த் எங்களை
வீழ்த்த முடியாது!"

– வைகோ சேலஞ்ச்

கல்கி

27.3.2005









இவர்களெல்லாம் யார்?
என்ன செய்கிறார்கள்?

பார்க்க 17,44,68,89



ஜெயேந்திரர் அரசியலுக்கு வரலாமா?
கூடாதா?
சர்ச்சை சர்வே முடிவுகள்
10ம் பக்கம்

"இங்கிலாந்திலும் சத்துணவ



இளங்கோ ●

தி ருவள்ளூர் மாவட்டம், கூத்தம்பாக்கம் பஞ்சாயத்துத் தலைவர் இளங்கோ, வித்தியாசமான இளைஞர். அரசு நிறுவனத்தில் பார்த்து வந்த விஞ்ஞானி வேலையை ராஜினாமா செய்துவிட்டு, கிராம வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருபவர். அண்மையில் இங்கிலாந்து அரசாங்கம், கிராம நிர்வாகம் பற்றிய மாநாட்டில் கலந்து கொள்ள இவரை அழைத்தபோது "லண்டன் மாநாட்டில் கலந்து கொள்வதை விட, உங்கள் நாட்டின் கிராமங்களுக்குச் சென்று, அங்கே கிராம நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்று பார்க்க விரும்புகிறேன்" என்று இவர் தெரிவிக்க, உடனடியாக இங்கிலாந்து அரசாங்கம், அதற்கு ஏற்பாடு செய்தது. தமது இங்கிலாந்து 'கிராம அனுபவங்களை இளங்கோ நம்மிடம் விவரித்தார்...

"அங்கேயும் கிராமங்களை, கிராமங்கள் என்று குறிப்பிட்டாலும், கிராமப் பஞ்சாயத்து, பாரிஷ் கவுன்சில் என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு கிராமத்தில் சுமார் ஐயாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். விவசாயம், மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, பன்றி, ஆடு வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களும், தொழிலாளர்களும்தான் கிராமங்களில் வசிக்கிறார்கள். நிறைய வீடுகள் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. விசாரித்த போது, அவர்கள் நகரங்களில் வேலை பார்ப்பவர்கள், வார இறுதி நாட்களில், கிராமத்துக்கு வந்து தங்கிவிட்டுப் போவார்கள் என்று தெரிந்தது.

பாரிஷ் கவுன்சிலுக்கு, கிராமத்தின் பல்வேறு வார்டுகளிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அங்கே, கட்சி அடிப்படையில் வாக்களித்து, கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. கவுன்சிலர் தேர்தலில் நிற்பவர்கள், வயதானவர்களாக, ரிடையர்ட் நபர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. மற்றவர்களுக்காக நேரம் செலவழிக்கத் தயாராக உள்ள அனுபவசாலிகள், கவுன்சிலர்களாகப் பணியாற்ற வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

மாதம் ஒருமுறை கவுன்சில் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் பொதுமக்கள் எவரும் கலந்து கொள்ளலாம். கூட்டத்தின்போது, விவாதிக்கப்படவுள்ள விஷயங்கள் குறித்து, கலந்துகொள்ள வருகிற பொதுமக்கள் முன்னதாகவே கருத்துக்கள் சொல்லலாம். ஆனால் வோட்டளிக்கவோ, விவாதத்தில் பங்கேற்கவோ முடியாது."

"இங்கிலாந்து கிராமங்களில் வசதி, வாய்ப்புகள் எப்படி?"

"ஒவ்வொரு கிராமத்திலும் சிற



ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், சர்ச் தவிர நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை உள்ளன. தெருவிளக்கு, தண்ணீர் சப்ளை, ஆஸ்பத்திரி போன்றவை நன்கு பராமரிக்கப்படுகின்றன. அனைத்தையும்விட, பள்ளிக்கூடத்தை சிறப்பாக நடத்துவதே கிராம சபையின் நோக்கமாக உள்ளது. பள்ளிக் குழந்தைகள் மீது அவர்கள் காட்டும் அக்கறை என்னைப் பிரமிக்க வைத்தது.

பள்ளிக்கூடங்களில் வெள்ளை, கறுப்பு இன பேதம் கிடையாது. மதியம் ஆவி பறக்க சத்துணவு தருகிறார்கள். பெரும்பாலும் அனைவரும் பள்ளிக்கூடத்தில் தரப்படும் உணவையே சாப்பிடுகிறார்கள். பள்ளிக்கூடங்களில் அனைத்து விதமான வசதிகளும் உள்ளன. குழந்தைகள் முகத்தில் சந்தோஷம் கண்கூடாகத் தெரிகிறது.

மேலும் கிராமங்களில் பார், ஹோட்டல், சினிமா தியேட்டர், இசை நிகழ்ச்சிக்கான அரங்கம், ஜிம், விளையாட்டுத் திடல், நீச்சல் குளம் அனைத்தும் சுத்தமாய் பராமரிக்கப்படுகின்றன. வீடுகள் பூட்டிக் கிடந்தாலும், திருட்டு பயம் இல்லை என்று அங்கே சொன்னார்கள். மக்களிடம் பொதுவாகவே, இது எங்கள் கிராமம் என்ற பற்று காணப்படுகிறது. முதலாளிகளும், தொழிலாளிகளும் இருந்தாலும், அவரவர் தமது தொழிலை மதிக்கிறார்கள். ஏழை, பணக்கார

போடுகிறார்கள்!"

பேதமின்றி, அனைவரையும் மனிதர்களாக நினைத்துப் பழகுகிறார்கள்" என்றவர்,

"நிர்வாகத்தில் வெளிப்படையான தன்மையைக் காண முடிகிறது. அதையும் மீறி ஓரிரு தவறுகள் நடைபெறுவது உண்டாம். அப்போது இங்கிலாந்து மகாராணியால் நியமிக்கப்படும் 'ஓம்புட்ஸ்மன்' அமைப்பு தவறை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்களைக் கண்டித்து, தவற்றைச் சரி செய்யுமாம். இல்லாது போனால் இன்ன தண்டனை என்று அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்ய, அரசு தண்டனை வழங்குமாம்" என்றார்.

- மானஸா

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522, 22250823,
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

"விஜயகாந்த் எங்களை வீழ்த்த முடியாது!"



வேடசந்தூர் விவசாயிகள் மாநாட்டை நடத்தியதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் பம்பரமாகச் சுழன்று தொண்டர்களைச் சந்தித்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வருகிறார் வைகோ. பரபரப்பான சுற்றுப் பயணத்துக்கிடையில் தஞ்சையில் வைகோவைச் சந்தித்தோம்.

கலிங்கப்பட்டி என்றவுடன் பளிச்சென்று நினைவுக்கு வருவது எது?

"நான் படித்த துவக்கப் பள்ளி, கூரைக் கொட்டகை உயர்நிலைப் பள்ளி, நீந்தி விளையாடிய கண்மாய், மாசு மருவற்ற ஆரோக்கியமான காற்று, கிராமத்து கூட்டு வாழ்க்கை... இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். கலிங்கப்பட்டி ஒரு மாதிரி கிராமம். ஜாதி வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் ஒரே மயானம். என் மனத்தில் அவ்வப்போது ஓடும் தவிப்பு என்ன தெரியுமா? ஊரோடு தங்கியிருந்து, மனதுக்கு இனிய இலக்கியங்களைப் படித்துக்கொண்டு, பொதுப் பணிகள் செய்து காலத்தைக் கழிக்க வேண்டும். இது எப்போது நடக்குமோ?"


இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் இருப்பதாக காந்தியடிகள் சொன்னார்! இப்போதும் அந்த ஆன்மா உயிரோட்டத்துடன் இருக்கிறதா?

"ஆன்மாவின் குரல்வளை நெரிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் விவசாயிகளின் சோகமயமான வாழ்க்கைதான்."

மத்திய - மாநில அரசுகள் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கிராமப்புற வளர்ச்சிக்கென்று ஆயிரக்கணக்கான கோடிகளை ஒதுக்குகின்றன. அந்தப் பணமெல்லாம் எங்கே போகிறது?

"மோசடிகள் அதிகம் நடக்கிறபடியால் யாருக்கு போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு ஒழுங்காக நிதி போய்ச் சேருவதில்லை. ஓர் உதாரணம் சொல்கிறேன். வேலைக்கு உணவு என்ற திட்டத்தில், கிராமத்து மக்களை மராமத்து வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு பணமும் அரிசியும் ஊதியமாகக் கொடுக்க வேண்டும். இப்போது என்ன நடக்கிறது? அந்தப் பணியை ஒப்பந்தம் போன்று விட்டுவிட்டு, இவ்வளவு ஆட்கள் பணியாற்றியதாக பொய் விவரங்களை எழுதி, பணம் கையாடுகிறார்கள்."

விவசாயிகளுக்குக் கடன் வட்டி தள்ளுபடி செய்தும், மானியங்கள் கொடுத்தும், அவர்கள் வாழ்க்கை சோகமயமாக என்ன காரணம்?



"அவர்கள் உற்பத்தி செய்கிற பொருளுக்கு நல்ல விலையும், உரம் போன்ற இடு பொருள்களுக்குக் குறைந்த விலையும் நிர்ணயிக்க வேண்டும். நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டும். தென்னக நதிகளை இணைப்பதே ஒரே விமோசனம். மற்றபடி நீங்கள் சொல்லும் கடன் தள்ளுபடி, மானியங்கள் ஆகியவை போதாது. மற்ற தொழில்களை ஒப்பிடும் போது விவசாயிகளுக்கு அரசு செய்வது மிகக் குறைந்த பட்ச உதவியே... வங்கிகள் கணக்குப்படி சுமார் 54000 கோடி ரூபாய் வராக் கடன் . இதில் 13 சதவிகிதம் தான் விவசாயத்திற்குக் கொடுத்தது. 54 சதவிகிதம் பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுத்தது! 'மானியங்கள் கொடுக்காதே' என்று உலகத்துக்குக் கட்டளையிடும் அமெரிக்கா, வருடத்துக்கு 4000 மில்லியன் டாலர், விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கிறது. எனவே விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லாத் தொகையையும் அரசு செலவுக் கணக்காகவே வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்வு செழிக்கும்."

சுனாமிக்குப் பிறகு கடல் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால், சேது சமுத்திர திட்டத்தின் சாத்தியங்களைப் பற்றி பிரதமர் அலுவலகம் கேள்விகளை எழுப்பியிருப்பதாகச் சொல்கிறார்களே!

"சேது சமுத்திர திட்டம் என்பது எங்கள் ரத்தத்தோடு கலந்துவிட்ட ஒன்று. எப்படிப்பட்ட தடை வரினும் அவற்றைத் தாண்டி, திட்டத்தைச் செயல்படுத்துவோம். நீங்கள் சொல்வது குறித்து அமைச்சர் டி.ஆர்.பாலுவிடம் கேட்டேன். 'பிரதமர் அலுவலகம், திட்டத்துக்கு தடை போடுவது போன்ற எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை' என்று சொன்னார். விழிப்புடன் இருந்து திட்டத்தை அமல்படுத்துவோம்."

மத்தியிலும் பல மாநிலங்களிலும் கூட்டணி அரசுகள் இருக்கும்போது, தமிழகத்துக்கு மட்டும் அது ஏற்புடையது அல்ல என்று சொல்லியிருக்கிறீர்களே!

"மற்ற மாநிலங்களோடு தமிழ்நாட்டை ஒப்பிடாதீர்கள். இங்கு நிலவும் சூழல் வித்தியாசமானது. கூட்டணி என்றால் குழப்பமும், ஸ்திரமற்ற தன்மையும் மேலோங்கும். மத்தியில் காங்கிரஸ் மெஜாரிட்டி பெறாததால், அங்கு கூட்டணி ஆட்சி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. பீகார் போன்று தமிழகம் ஆகக் கூடாது. வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை பெற்று கலைஞர்

– வைகோ சேலஞ்ச்

முதல்வராவார்.

சாதாரணப் பொதுமக்கள் உட்பட உயர் அரசியல் வட்டாரம் வரை எழுப் பப்படும் சந்தேகம், தி.மு.க கூட்டணி இதே உறுதியுடன் தேர்தல் வரை நீடிக் குமா என்பதே! இதுபோன்ற வதந்தி களைப் பற்ற வைப்பதே ஆளும்கட்சி வட் டாரமும், மாநில உளவுத்துறையும்தான். இது எதிர்மறையான செய்தி என்பதால், ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுக் கின்றன. தமிழ்நாட்டுக்குச் சொல்ல வொணா தீங்கை விளைவித்துக் கொண்டி ருக்கும் ஜெயலலிதாவை அகற்ற வேண்டும் என்ற ஓர் உணர்வே தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை இணைக்கும் cementing factor ஆகும்."

'கூட்டணி ஆட்சிக்கு நான் தயார்' என்று ஜெ. குரல் கொடுத்தால் தி.மு.க. அணியில் சலசலப்பு ஏற்படுமா?

"நிச்சயம் ஏற்படாது. கண்ணைக் கட்டிக்கொண்டு தண்ணீர் இல்லாத பாழும் கிணற்றில் குதித்தால் என்னாகும்? ஜெ.வுடன் சேர்ந்தால் அந்த கதிதான்."

விஜயகாந்த் அரசியல் கட்சி துவங்கு வது எந்த வகையில் உங்கள் கூட்டணி யின் செல்வாக்கை - வெற்றி வாய்ப்பை பாதிக்கும்?

"எங்கள் கூட்டணி ஒரு இரும்புக் கோட்டை. ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி துவங்கலாம். ஆனால், ஒன்று மட்டும் உறுதி. விஜய காந்த் உட்பட யாரும் எங்கள் கூட்டணிக் கோட்டையில் எந்த சேதத்தையும் ஏற் படுத்த முடியாது, வீழ்த்தவும் முடியாது."

உங்கள் கூட்டணியில் தொகுதி ஒதுக்கீட்டின் போது சிக்கல் ஏதும் வர வாய்ப்பிருக்கிறதா? 2001 தேர்தலின் இறுதி நிலையில் ம.தி.மு.க. இந்தப் பிரச்னையில் கூட்டணியை விட்டு வெளியே வர வேண்டியிருந்ததே!

"நடந்தவற்றைப் பற்றி மீண்டும் பேசு வதில் ஒரு பயனும் இல்லை. எதிர்மறை யாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆக்கபூர்வமான சிந்தனையுடன், நம்பிக்கையுடன் நடைபோடுகிறோம். கூட்டணியின் உறுதிப்பாட்டிலும், கலைஞரின் தலைமையிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. அது போன்றே கலைஞருக்கும் எங்கள் மீது அக்கறையும், பாசமும் உண்டு."

உங்களுக்கும் கலைஞருக்கும் உள்ள உணர்வுபூர்வமான பந்தம், சமீபத்திய திண்டுக்கல் தி.மு.க. மாநாட்டில் பிரதி பலித்தது. எதிர்காலத்திலும் தி.மு.க. தலைமையுடன் இதுபோன்ற பந்தம் தொடருமா?

"கலைஞர் நூறு ஆண்டுகள் வாழ்வார். அவரது நெடிய அனுபவமும், முதிர்ந்த பட்டறிவும், நிர்வாக ஆற்றலும் திராவிட இயக்கத்துக்கு மேலும் வலுவைச் சேர்க் கும். 80 வயதுக்குப் பிறகே சீனப் பெருந் தலைவர் டெங்-சியோ-பிங் நவ சீனத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டார். அவரைப் போன்றே கலைஞரும் பணிசிறு வார். 'பொடா' சிறையில் இருந்தபோதே மிஞ்சிய நாட்களை திராவிட இயக்கத் துக்காக உழைக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டினை எடுத்துள்ள நான், கலைஞருக்குத் துணையாக, தொண்ட னாக, குன்றாத பாசத்துடன் தோள் கொடுப்பேன்."

- ப்ரியன்

ஆனந்த வெள்ளம்!

ஆனந்தி என்ற பெயருக்கு விளக்கமாக வாழ்ந்தார் கல்கி கிருஷ்ணமூர்த்தியின் மகள். ஒரு நல்ல தோடி ஆலாபனையைக் கேட்பதில் எவ்வளவு ஆனந்தமோ, அதே ஆனந்தத்தை தோட்டத்துக் குருவிகள் கூவக் கேட்டும் அடைந்தார். திருத்தமாக நாட்டியம் செய்வதில் எவ்வளவு ஆனந்தமோ, அவ்வளவு ஆனந்தம் அதைத் திருத்தமாகப் பயிற்றுவிப்பதிலும் கண்டார். குழந்தைகளுக்குக் கதை சொல்வதில் ஆனந்தம்; அவர்கள் தங்கள் கதைகளைச் சொல்லக் கேட்பதில் ஆனந்தம். எழுதுவதில் ஆனந்தம்; விதவிதமான இலக்கியங்களைப் படிப்பதிலும் ஆனந்தம். கோயில்களைத் தேடிச் சென்று ஏற்கெனவே அறிந்த வரலாற்றுக் குறிப்புகளையும் ஆகம, புராண விவரங்களையும் பொருத்திப் பார்ப்பதில் ஆனந்தம்; அந்தந்த கோயில்களின் ஸ்தல விவரணையான பாடல்களையும் கவிதைகளையும் தேடியெடுத்துப் படித்து, லயித்து, தமது ஆலய தரிசன கட்டுரைகளில் புகுத்தி எழுதிப் பகிர்ந்துகொள்வதில் ஆனந்தம். தனியொருத்தியாய் உலகெங்கும் பலமுறை பயணம் செய்து 'கவதேசோ புவனத்ரயம்' என்று சகல தேசங்களின் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் ஏற்று, சிறந்தவற்றைப் பின்பற்றுவதில் ஆனந்தம். இவ்வளவு ஆனந்தமயமான வாழ்க்கை அவருக்கு அமையும் என்று, ஆனந்தி என்று பெயர் சூட்டிய ராஜாஜிகூட எதிர்பார்த்திருக்க முடியாது.

• பேச்சாளர் ஆனந்தி



கடந்த மார்ச் 16ம் தேதி காலை, ஆனந்தி தமது எழுபத்திரண்டாவது வயதை எட்டும் முன்னரே மறைந்தார். இறுதி மரியாதை செலுத்த வந்தவர்களுள், நெருங்கிய நண்பர் ஒருவர் சொன்னார்: "வடதுருவத்துக்குப் போனால்கூட, அங்கே ஆனந்திக்கு ஒரு எஸ்கிமோ நண்பர் இருப்பார்."

அனைத்து நண்பர்களுமே ஆனந்திக்கு மிக நெருக்கமானவர்கள்தாம். சராசரி பரிச்சயம் என்பதைத் தாண்டி, தாம் அனுபவித்த சின்னதும் பெரியதுமான ஆனந்தங்களை அவர் எப்போதும் பரிமாறிக் கொள்ளத் தயாராயிருந்தது மட்டுமே, இதற்குக் காரணமாக இருந்திருக்க முடியும்.

பிறந்து வளர்ந்த சூழல் இந்தப் பண்பை அவருக்குள் உருவாக்கியதில் ஆச்சரியமில்லை. கல்கியின் செல்வ மகளாக, சி.ஆர். அண்ணாவின் (ராஜாஜி) நேரடி மேற்பார்வையிலும் வழிகாட்டலிலும் வளர்ந்தார். டி.கே.சி மாமாவின் (ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்) உயர் ரசனை, கல்கி சதாசிவம் - எம்.எஸ். தம்பதியின் பொதுநல நோக்கு, அப்பாவின் மன விசாலம், அம்மா ருக்மிணியின் திடசித்தம் என்று, சூழ்ந்திருந்த பெரியவர்களுடைய பாங்கான இயல்புகளின் அரிய கலவையாக ஆனந்தி உருவானார். படிப்பதிலும் பயணம் செய்வதிலும் இருந்த தணியாத ஆர்வம் அவரை மேலும் வளர்த்தது.

படித்தது பள்ளியிறுதி வரைதான் என்றாலும், ஆங்கிலத்திலோ தமிழிலோ அவர் படிப்பதற்கு ஒரு இறுதி இருந்ததில்லை.

சிறுமி ஆனந்தி, வழுவூர் ராமையா பிள்ளையிடம் பரத நாட்டியம் பயின்று, சதாசிவம் -



• ஆனந்த நடனம்

எம்.எஸ்.ஸின் மகள் ராதாவுடன் நாட்டிய நிகழ்ச்சிகள் வழங்கியபோது, தமிழ்நாடே பரதக் கலையின் மேன்மைகளை உணர ஆரம்பித்தது. பின்னர் கலாக்ஷேத்ராவில் சேர்ந்து, நாட்டிய சாஸ்திரமும் கலாக்ஷேத்ரா பாணி நுணுக்கங்களும் கற்றுத் தேர்ந்து, நாட்டியம் பயிற்றுவிக்கும் நல்லாசிரியராக நீண்ட நெடுங்காலம் பணியாற்றினார். ருக்மிணி தேவியின் பேரன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார்.

கல்கி சதாசிவத்தின் சகோதரி மகன் ராமச்சந்திரனை மணந்து, மூன்று குழந்தைகளை சமுதாய நலன் போற்றும் நன்மக்களாக உருவாக்கியுள்ளார். முதல் மகள் கௌரி ராம்நாராயண், தி ஹிந்துவில் பணியாற்றும் பத்திரிகையாளர். மகன் சங்கர் ராமச்சந்திரன், அமெரிக்காவில் பொறுப்பான பதவியில் இருக்கிறார். கடைசி மகள் ருக்மிணி, சென்னையில் நவதிஷா மான்டிஸோரி பள்ளியை நடத்தி வருகிறார்.

கலாக்ஷேத்ராவில் மாணவியாக இருந்த காலத்தில், ருக்மிணி தேவியின் சிந்தனைகள், செயல்பாடு, மனோபலம் யாவும் ஆனந்தியைப் பெரிதும் ஈர்த்தன. ருக்மிணி தேவி ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்த கலைகள், தியாஸஃபி, இயற்கையைப் பேணுதல், விலங்குகள் நலன் காத்தல், சைவ உணவுப் பழக்கத்தைப் பரப்புதல் போன்ற அனைத்திலும் ஆனந்திக்கும் பற்று ஏற்பட்டது.

குறிப்பாக, ருக்மிணி தேவி மிகவும் நம்பிக்கை கொண்டிருந்த மான்டிஸோரி கல்வி முறையில், ஆனந்திக்குத் தீவிர ஈடுபாடு விளைந்தது. தமது குழந்தைகளை அக் கல்வி முறையில் ஆரம்பக் கல்வி பெறச் செய்தார். தமது குடும்ப முயற்சியாக ஒரு மான்டிஸோரி பள்ளி நிறுவ, அறக்கட்டளை அமைத்து அதன் அறங்காவலராகவும் தமிழாசிரியராகவும் உழைத்தார். அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை, கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை ஆகியவற்றிலும் பொறுப்பு வகித்து, அவற்றின் மூலமாகவும் சமுதாயத்துக்குப் பணியாற்றி வந்தார்.

'தெய்வ தரிசனம்' கட்டுரைகள் மூலமாக சிறந்த எழுத்தாளராகவும் இந்தப் பத்திரிகை வாசகர்களிடம் அங்கீகாரம் பெற்றார். கல்கியின் 'அமர தாரா' நாவலை, அவர் மறைவுக்குப் பிறகு ஆனந்தி நிறைவு செய்தார் என்பதும், 'மலைச் சாரல் மாதவி' என்ற நாவலை எழுதியுள்ளார் என்பதும், இளைய தலைமுறைக்குத் தெரியாதிருக்கலாம்.

கடற்கரை அருகே அமைந்த 'அலை ஓசை' என்ற பெயரையுடைய தமது வீட்டில் ஆனந்த வெள்ளத்தினிடையே ஆரோக்கியமாக வாழ்ந்தார். திடீரென்று தோன்றி வருத்திய நோய், அவர் உற்சாகத்தைத் துளியும் பாதிக்கவில்லை. அறுவைச் சிகிச்சைக்குத் தனியார் மருத்துவமனையில் சேர்வதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, சத்தியம் திரையரங்கில் 'பிளாக்' திரைப்படத்தைப் பார்த்தே தீருவது என்று பிடிவாதமாய்ச் சென்று ரசித்துத் திரும்பினார்! அதுவே அவர் பார்த்த கடைசித் திரைப்படமாகி விட்டது.

ஆனந்தியின் மறைவினால் அவரது குடும்பம் மட்டுமின்றி, கல்கி வாசகர்கள் குடும்பமும் துயருற்றிருக்கிறது. இத்துயரிலிருந்து மீள, அவரது ஆனந்தமான மனநிலையை அடிக்கடி நினைவு கூர்ந்து பார்க்கும்போது, நமது வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாகும்.

- சீதா ரவி



சர்ச்சை சர்வே ரிசல்ட்!

சர்ச்சை சர்வே - 1 முடிவுகள்


ஜெயேந்திரர் அரசியலுக்கு வரலாமா, கூடாதா?

ரூ. 100 பரிசு பெறும் வாசகர் கருத்துகள்:

வரட்டும்!

'கோட்டையில் புனிதர்களைப் பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது!'

- நாமக்கல் பாலு



கூடாது!

அரசியல் 'தண்டம்' (சாம, தான, பேத)' ஆன்மிக தண்டம் (காஷாயம், கமண்டலம்) இரண்டும் வெவ்வேறு துருவங்கள். துருவங்கள் இணைந்தால் பூமி இல்லாது போகும்.

- சுமித்ரா கல்யாணராமன், சென்னை - 90

பிரசுரத்துக்குத் தேர்வானவை...

வரலாம்!

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்; வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும். அரசியலால் நேர்ந்த சோதனைகளை, சாதனைகளாக்க அரசியல் மூலம்தான் முடியும்.

- நீலா சந்திரசேகரன், சென்னை -4

பதவியில் இருப்பதால் எதையும் செய்யலாம், எப்படியும் வாழலாம் என்று வாழும் நேர்மையற்றவர்களை, ஜயேந்திரர் போன்றவர்களே அகற்றி நல்லன செய்ய முடியும்.

- பி. பத்மா, கோவை

அரசியல்வாதிகளைப் பற்றியும் தெரிந்திருக்கும்; மக்களுக்கு என்ன வேண்டுமென்றும் நன்றாக உணர்ந்திருப்பார். இது போதாதா அவர் அரசியலுக்கு வர!

- இளங்கோ, கோவில்பட்டி

வேண்டாம்!

தெரிந்த தொழிலை விட்டவன் கெட்டான். தெரியாத தொழிலைத் தொட்டவன் கெட்டான்.

- ஆர். அனந்தகிருஷ்ணன், தொட்டியம்

காய், கனி ஆகலாம். ஆனால் கனி, காயாக முடியுமா?

- சு. சீனிவாசன், சென்னை - 24

அரசியல்வாதியாகும் துணிவு சுவாமிகளுக்கு இருக்கலாம். அதை ஏற்கும் துணிவு சாதாரண பக்தனுக்கு நிச்சயம் இருக்காது!

- ஸ்ரீவித்யா ராமன், சென்னை - 4



அன்பு மகளின் திருமண நேரத்தில் தந்தையின் தலை சாய்ந்தது.

தடுமாறிய குடும்பம் தலையெடுத்தது எப்படி?

திரு. கணேசமூர்த்தி . சென்னையைச் சேர்ந்த வர்த்தகர். தன் மகளின் திருமண நிச்சயதார்த்த விழாவை கோலாகலமாக மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடி விட்டு. திருமண ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது திடீரென தாக்கியது மாரடைப்பு.

இரவு நேரத்தில் யாரும் எதிர்பாராத வகையில் அவரது உயிர் பிரிந்தது. இவரை மட்டுமே ஆதாரமாகக் கொண்டிருந்த குடும்பம் செய்வது அறியாமல் திகைத்து நின்றது.

நேர்ந்து விட்ட துயர நிகழ்ச்சியால் துவண்டு போனார் அவரது மனைவி. நிச்சயம் செய்யப்பட்ட மகளின் திருமணத்தை நடத்தும் வகையறியாமல் கலங்கி நின்றார்.

அச்சமயத்தில் ஆறுதல் அளிக்கும் வகையில், குடும்பத் தலைவர் கணேசமூர்த்தி செய்திருந்த இன்சூரன்ஸ் காப்பீட்டுத் தொகை ரூ.6 லட்சம் கை கொடுத்தது. மிக விரைவாக இத்தொகை கணேசமூர்த்தி மனைவிக்குக் கிடைக்க ஸ்ரீராம் சிட்ஸ் கிளை உதவியது.

இன்சூரன்ஸ் காப்பீட்டுத் தொகை, தக்க சமயத்தில் கிடைத்ததால், தத்தளித்துக் கொண்டிருந்த குடும்பம் சற்று நிதானித்து, திருமணத்தை நிறைவேற்ற முடிந்தது. இத்தொகை கிடைத்திருக்காவிட்டால், அக்குடும்பம் துயரத்தில் மூழ்கித் துவண்டு போயிருக்கும்.


கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வரும் ஸ்ரீராம் சிட்ஸ், சந்தாதாரரின் பொருளாதார வளர்ச்சியுடன், அவர்களது குடும்பத்தின் எதிர்காலப் பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் 2,60,000 குடும்பங்கள் ரூ.5,700 கோடிக்கு மேல் இன்சூரன்ஸ் காப்பீடு பெறவும், நெஞ்சை உருக்கும் துயரச் சம்பவங்கள் நேரிட்ட பல குடும்பங்களுக்கு உரிய இன்சூரன்ஸ் காப்பீட்டுத் தொகையை விரைவாகப் பெற்றுத் தரவும் ஸ்ரீராம் குரூப் உதவி செய்துள்ளது.

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

கிரீம்ஸ் துகார், 149 கிரீம்ஸ் சாலை
சென்னை 600 006. போன்: 52236000

வருங்காலப் பாதுகாப்புக்கு வழிகாட்டும் துணைவன்



எங்கே படித்தனர் எம்.பி.ஏ?

ஷருவும் சச்சினுமா சேர்ந்து பாகிஸ்தானை வீழிட்டாங்கன்ற சந்தோஷத்துல இருப்பீங்களே! ப்ளஸ், அஃப்கோர்ஸ், பாலாஜியோட அட்டகாசமான ரீ-என்ட்ரி. அவர் வீட்டு வாசல்ல இப்பவே கர்ல்ஸ்லாம் பூங்கொத்தோட நீள வரிசையா நிக்கறாங்கன்னு மிஸ் மைனா (அதான் மிஸ்டர் கழுகோட செகன்ட் கஸின்) நியூஸ் குடுத்துட்டு, இப்பத்தான் போறாங்க... (இரண்டு ரூபாய்க்கு மசாலா பாப்கார்ன் வாங்கித் தந்தேன்.)

மிஸ் மைனாவை விட யாராவது ஃபாஸ்ட்னா, நம்ம காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்தான். பாருங்களேன்; கோவைல நிறைய காலேஜஸ்ல காம்பஸ் ரேடியோ ஆரம்பிச்சுதூள் கிளப்பிட்டிருக்காங்க! இங்கே சென்னைல எம்.ஓ.பி. வைஷ்ணவா கர்ல்ஸ் ஒரு எஃப்.எம். பிராட்காஸ்டே தொழில் ரீதியா ஆரம்பிச்சுட்டாங்க... எல்லாமே மிர்ச்சி சுச்சி ஆரம்பிச்சு வைச்ச டிரென்ட்தான்... ரேடியோன்னாலே வயசானவங்களுக்குத்தான்னு இருந்த ஒரு இமேஜ் எப்படி தூள் தூளா யிடுச்சு பாருங்க...!

இந்தப் புரட்சி ஒரு பக்கம்னா, அமெரிக்காவில ஆரோக்கியமில்லாத ஒரு 'புரட்சி'யை அவசர யுகத்து மாணவர்கள் நடத்திக் காட்டியிருக்காங்க... ஹார்வர்ட் பிஸினஸ் ஸ்கூல், எம்.ஐ.டி.யின் ஸ்லோன் ஸ்கூல் ஆஃப் மானேஜ்மென்ட் போன்ற முதல்தர யூனிவர்ஸிடிகள்ல, எம்.பி.ஏ படிக்க அப்ளை பண்ணியிருக்காங்க. அஃபிஷியலா இவங்களுக்கு பதில் வரவரைக்கும் காத்திருக்க வேண்டியதுதானே... அதுக்குப் பொறுமை இல்லாம, சம்பந்தப்பட்ட யூனிவர்ஸிடி வெப்ஸைட்களுக்குள்ள திருட்டுத்தனமா நுழைஞ்சு, செலக்ஷன் லிஸ்டைப் பார்க்க முயற்சி பண்ணியிருக்காங்க! ஹார்வர்ட் வெப் ஸைட்ல மட்டும் 119 பேர் நுழைய முயற்சி பண்ண, அவங்களையெல்லாம் கல்லூரி நிராகரிச்சுடுச்சு; ஸ்லோன்'ஸ் இதே காரணத்துக்காக 32 பேரை நிராகரிச்சிருக்கு.

உழைச்சு, போராடி முயற்சி பண்ண வேண்டிய வயசுல, இளைஞர்களுக்கு ஏன் இப்படி குறுக்கு வழியில கெட்டுப் போகற புத்தி வரணும்?


முதியவர்களும் ஒண்ணும் சளைச்சவங்க இல்லை. தினமணி லெட்டர்ஸ் டு தி எடிட்டர்ல, எம்.எஸ்.நளினி ஒரு அதிர்ச்சி தர்ற தகவலை எழுதியிருக்காங்க, பாருங்க:

'போடாக்ஸ்'ன்ற ஊசியைச் செலுத்திக்கிட்டா, முகத்தில் தளர்ந்து சுருக்கம் விழுந்த தசைகள் மறையுமாம். 'அது எப்படி மறையும்'?னா, முகமே இலேசா உப்பறதால மறையும். இந்த இஞ்சக்ஷனை ஒரு அழகியல் சாதனமா, வித்துப் பணம் பண்ணிக்கிட்டிருக்கு அமெரிக்க நிறுவனம் ஒண்ணு. போடாக்ஸ் கொடிய விஷம்ங்கறதால, பாதுகாப்புக்கான காரன்டியே இல்லை. இதைத் தயாரிக்கற நிறுவனம், எலிகள் மேல மட்டும் பரிசோதனை பண்ணிப் பார்த்திருக்கேயொழிய, நவீன முறைல சந்தேகமற இந்த போடாக்ஸைச் சோதிக்கலை... நம் ஊர் நடுத்தர வயது மாமிகள், அமெரிக்க நிறுவனத்து எக்ஸ்பெரிமென்ட்டுக்கு வெள்ளெலிகளா மாறிக்கிட்டிருக்காங்க...! (இளமை ஆசை - அதுவும் ஷார்ட் கட்டில் - யாரை விட்டது?)

போடாக்ஸ் தயாரிக்கும் அமெரிக்க நிறுவனத்து நிர்வாகிகள், எங்கே படிச்ச எம்.பி.ஏ. டிகிரி வாங்கியிருப்பாங்கன்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்!



—சுமி



சோம்நாத் சாட்டர்ஜியின் பிடிவாதம்!

முப்பத்தாறு, இருபத்தாறு - இரண்டு எண்களுள் எது பெரியது என்று கேட்டால், சின்னக் குழந்தைகூடச் சொல்லி விடும். ஆனால் ஜார்கண்ட் ஆளுனர் இருபத்தாறுதான் பெரியது என்று முடிவு செய்து, யு.பி.ஏ கூட்டணியை ஆட்சி அமைக்க அழைக்கிறார்!

அரசியல் சாசனத்தை அலட்சியம் செய்து, ஆளுனர் பாரபட்சமாக நடந்து கொள்ளும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் உச்ச நீதின்றத்தில் அர்ஜுன் முண்டா முறையீடு செய்ய, உச்ச நீதிமன்றமும் வேறு வழியின்றி, ஜார்கண்ட் அரசு அமைக்கும் முயற்சியில் அழுகுணியைத் தவிர்ப்பதற்காகத் தலையிட்டது.

உச்சநீதிமன்றம் தானே வந்து இந்த விவகாரத்தில் மூக்கை நுழைக்கவில்லை. 'அநீதி நடக்கிறது' என்று, தமது அணிக்கு வாக்களித்த பொதுமக்கள் சார்பில் அர்ஜுன் முண்டா முறையிட்ட பிறகுதான் தலையிட்டது. அப்படி ஒரு முறையீடு செய்யப்பட்ட பிறகும் உச்சநீதிமன்றம் பேசாமல் இருந்தால், அதுதான் ஜனநாயக விரோதம்.


சட்டமன்றமும் நீதிமன்றமும், ஒன்று மற்றதன் உரிமைகளில் தலையிடாமல் இயங்க வேண்டும் என்று அரசியல் சாசனம் விதித்திருப்பதே, ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குத்



கல்கி



2005 மார்ச் 27
தாரண பங்குனி 14
மலர் : 63
இதழ் : 35




தான். அவ்வாறிருக்க, கட்சி அரசியல் என்னும் குறுகிய பார்வை காரணமாக, ஜனநாயகம் ஒரு சட்டமன்றத்தில் பகிரங்கமாகப் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க உச்சநீதிமன்றத்தைத்தானே அணுக முடியும்?

உண்மையில், மத்திய அரசோ காங்கிரஸ் தலைமையோ மனம் வைத்திருந்தால் ஜார்கண்ட் ஆளுனரின் அபத்தமான செயல்பாட்டுக்குத் தடை போட்டிருக்கலாம். ஆனால், காங்கிரஸ் தலைமை, ஒரு கட்சி அபிமானியை கவர்னராக நியமித்ததும் அல்லாமல், அவர் இழைத்த அநீதிக்குத் தூண்டுதலாக இருந்தது.

உச்சநீதிமன்ற - சட்டமன்ற மோதலைத் தவிர்க்கத் தவறிவிட்டு, 'உச்சநீதிமன்றம் இந்த விஷயத்தில் தலையிடுவது, அரசியல் சாசன ரீதியான நெருக்கடியை ஏற்படுத்துகிறது' என்று, யு.பி.ஏ கூட்டணிக் கட்சிகள் கூப்பாடு போட்டதுதான் இன்னும் வேதனை.

பிற கட்சிகள் இது விஷயத்தில் தங்களின் எதிர்ப்பு நிலையை இப்போது அடக்கி வாசித்தாலும், சி.பி.ஐ (எம்) மட்டும் இன்னமும் இதனைப் பெரிய பிரச்னையாக்க உறுதி கொண்டிருக்கிறது. அக்கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜியும், சட்டமன்ற அதிகார எல்லைக்குள் நீதிமன்றம் தலையிடுவதைக் கடுமையாக எதிர்த்து வருகிறார்.

"ஜார்கண்டில் நடந்தது அரசியல்தான்; ஆனால் எனது நோக்கம் அரசியல் பண்ணுவதல்ல... சட்டமன்றங்களின் மேலாண்மையைக் கட்டிக் காக்கும் நோக்கில்தான் சொல்கிறேன். உச்சநீதிமன்றம், சட்டசபையோ மக்களவையோ எப்படி நடத்தப்பட வேண்டும் என்று கூறுவது தவறுதான்" என்கிறார். ஜார்கண்டில் நடந்தது அரசியல் (சூழ்ச்சி) என்று ஒப்புக் கொள்ளும் அவர், அதற்குப் பரிகாரம் என்ன என்பதைத் தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்காமல், நீதிமன்றத் தலையீடு கூடாது என்று மட்டும் சொல்வது, சட்டமன்றத்தில் என்னதான் அநீதிகள் நடந்தாலும் எல்லோரும் சும்மா பார்த்துக் கொண்டு கைகட்டி நிற்க வேண்டும் என்பதுபோல் உள்ளது. இதை ஏற்கவே முடியாது.



உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட தேதியில், ஜார்கண்ட் சட்டமன்றம் கூடிய போதிலும் அன்று சிபு ஸோரன் தமது மெஜாரிட்டியை நிரூபிக்க முடியவில்லை. அவையில் குழப்பம் நிலவியிருக்கிறது. வேறு வழி இன்றி, சிபு ஸோரன் "மனசாட்சிப்படி செயல்படுகிறேன்" என்று 'காதிலே பூ' விளக்கத்துடன் ராஜினாமா செய்திருக்கிறார்!

அத்தனைக் காலமும் அவரது மனசாட்சி எங்கே போய்த் தொலைந்தது என்பதுதான் பெரிய புதிர்!

அதைவிடப் பெரிய புதிர் ஒன்று இருக்க முடியுமானால், அது ஜார்கண்ட் ஆளுனர் சையத் சிப்தே ராஜியின் கணித ஆற்றல்தான்! 'முப்பத்தாறைவிட இருபத்தாறு பெரிது' என்று முதலில் அடம் பிடித்தவர், அதனை நிரூபிக்க சிபு ஸோரனுக்குக் கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் அவகாசம் கொடுத்தார்.

ஆனால், அர்ஜுன் முண்டா தமது மெஜாரிட்டியை நிரூபிக்க, இந்த ஆளுனர் பத்து நாட்களே அவகாசம் தந்தார்! ஜார்கண்ட் ஆளுனர் ஒரு வடிகட்டிய அரசியல்வாதி என்பதற்கு இதைக் காட்டிலும் வேறென்ன சான்று வேண்டும்?

இப்படிப்பட்ட அசாதாரணச் சூழ்நிலையில், உச்சநீதிமன்றம் தலையிட்டு, மக்களின் உரிமைகளை, ஜனநாயகத்தைக் காக்க முற்பட்டதில் எந்தத் தவறும் இல்லை.

சோம்நாத் சாட்டர்ஜி இந்தத் தலையீட்டை சட்டமன்ற - நீதிமன்ற மோதலாகக் கருதுவதும், அதைப் பெரிதுபடுத்த முயல்வதும்தான் அபாயகரமானது.

"ஜனநாயகத்தில், அமைப்புகளைக் காட்டிலும் அரசியல் சாசனம்தான் முக்கியம். அதைக் கட்டிக் காக்க வேண்டும்" என்று சாட்டர்ஜி சொல்வது முற்றிலும் சரியே. ஆனால், அந்த அரசியல் சாசனம் அளிக்கும் உரிமைகளைக் கட்சி அரசியல் சூழ்ச்சிகள் பறிக்க முயன்றால், மக்களின் உரிமைகளைக் காக்க நீதிமன்றத்தைத்தான் அணுக வேண்டும். அவ்வாறு அணுகும்போது, நீதிமன்றம் தன் கடமையைச் செய்துதான் ஆக வேண்டும். ○

வலைபாயுதே



என் இனிய மாடர்ன் மக்களே..!

இன்றைக்கும் கிராமிய மணம் மாறாமல் இருக்கிற மாவட்டமாக, தமிழ்நாட்டில் எதைச் சொல்லலாம்? 'என்னடே யோசிக்கிற? நம்ம தின்னவேலிதாம்ல அது!' நெல்லை மற்றும் அதைச் சுற்றியுள்ள அழகிய கிராமங்கள், சுற்றுலாத் தலங்கள் பற்றி 'அல்வா' மாதிரி சொல்லும் தளம் www.nellai. tn.nic.in இதேபோல் நெல்லையின் பெருமை கூறும் இன்னொரு வலைத் தளம் tirunelveli.com. நெல்லையிலுள்ள சில ஊர்களுக்கென தனி வலை முகவரி இருக்கிறது. www.vanamamalai.com நாங்குநேரி பக்கத்தில் உள்ள வைணவத் தலமான வானமாமலை பற்றிய தகவல்களை வாரி வழங்குகிறது. அதேபோல் நெல்லையிலுள்ள ஏர்வாடி கிராமம் பற்றிய தளம் nellaieruvadi.com. தன் ஊர்ப் பாசத்தில் அவ்வூர் பிரமுகர் ஒருவரே நிறுவியிருக்கிறார் இத்தளத்தை. ஆஹா! நாற்று நடும் மக்கள், டாட் காம்களில்! மக்கா, பாக்கவே சந்தோஷமா இருக்குல!



• எஸ்.ஜே.சூர்யா

ஊர் ஊராகச் சுற்றிப் பார்த்து உற்சாகம் காண்பவரா நீங்கள்! அதுவும் இந்தியாவிலுள்ள விதவிதமான இடங்களுக்கு, கிராமங்களுக்குப் போய் நிறைய மனிதர்களை, பழக்க வழக்கங்களை, வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொள்ள ஆசையா உங்களுக்கு? www.yatraindia.com/village-tourismக்கு வலை யாத்திரை போங்க. விவரங்களைத் தட்டிக்கிட்டு, மூட்டை முடிச்சைக் கட்டிக்கிட்டு டூர் கிளம்பலாம் ஜாலியா! கேரளச் சோலை கிராமங்கள் முதல், ராஜஸ்தான் பாலை கிராமங்கள் வரை, ரகம் வாரியாக ரகளையான தகவல்கள் கிடைக்கின்றன.

"என் இனிய மாடர்ன் மக்களே, பாரதிராஜாவுக்கு கிழக்குச் சீமையிலே, இந்த எஸ்.ஜே.சூர்யாவுக்கு நெல்லைச் சீமையிலே"ன்னு கிளம்பப்போறாராம் பெஸ்ட் ஃப்ரெண்ட். தன்னோட அடுத்த படமான 'திருவிழா'வை தன் சொந்த மண்ணான நெல்லை சுற்றுவட்டாரங்களில் எடுத்து கொண்டாடப் போறாராம். சொல்வது in.movies.yahoo.com. அதெல்லாம் சரி... பி.எஃப் படத்தோட தமிழ்ப் பெயரை யோசிக்க வச்சுட்டுதான் போட்டிய அறிவிச்சீங்களாமே, உண்மையா?

- ப்ரௌஸர்



தேங்க்ஸ் நந்தினி!

டெப்போவிலேயே அந்த மாநகரப் பேருந்தில் கூட்டம் அதிகமிருந்தது.

தனது மூன்றரை வயதுப் பெண்ணை தோளில் சுமந்தபடி ஏறிய நந்தினி, அங்குமிங்கும் நோட்டமிட்டாள். ஒரு இருக்கையும் காலியாக இல்லை. நின்று கொண்டிருப்பவர்களைத் தாண்டுவதே பெரும்பாடாய் இருந்தது. மெல்ல நகர்ந்து பஸ்ஸின் மையத்துக்கு வந்தவள், ஒரு பெண்மணியும் நான்கு வயதுச் சிறுமி ஒருத்தியும் சீட் ஒன்றில் உட்கார்ந்திருப்பதை கவனித்தாள்.

“அம்மா... உங்க பொண்ணை மடியில வைச்சுக்கிட்டு எனக்குக் கொஞ்சம் இடம் கொடுங்களேன்... நான் ரொம்ப தூரம் போகணும்... ப்ளீஸ்...” என்றாள் நந்தினி கெஞ்சலாய்.

“நான் குழந்தைக்கும் முழு டிக்கெட் தான் எடுத்திருக்கேன். சாரி” என்றாள் அந்தப் பெண்மணி.

அமைதியாகிவிட்ட நந்தினி, ஒரு கையால் குழந்தையை அணைத்துக் கொண்டு, மறு கையால் கம்பியைப் பிடித்துக்கொண்டு அலங்க மலங்க விழித்தாள். இருக்கை கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை.

அப்போதுதான் அது நடந்தது. பஸ்ஸில் ஏறிய கண்டக்டர், “இந்த பஸ் போகாது. எல்லோரும் போய் பக்கத்துல நிக்கற வண்டியில ஏறிக்குங்க” என்றார்.

அவ்வளவுதான்... பயணிகள் அடித்துப் பிடித்துக்கொண்டு அடுத்த பஸ்ஸுக்கு ஓடினார்கள். இதில் நின்று கொண்டிருந்த துரதிருஷ்டசாலிகளில் பலர், அடுத்த பஸ்ஸில் அதிர்ஷ்டசாலிகளானார்கள். நந்தினியும் அவள் மகளும் ஜம்மென்று சீட் கிடைத்து அமர்ந்தார்கள்.

பஸ் புறப்பட ஆயத்தமாக, குழந்தையைத் தூக்கிக்கொண்டு தாமதமாய் வந்து ஏறினாள், முந்தைய பேருந்தில் நந்தினிக்கு இடம் தர மறுத்த பெண்மணி.

அவளைப் பார்த்த மாத்திரத்தில் நந்தினி யோசிக்கவேயில்லை... தனது பிள்ளையைத் தூக்கி மடியில் உட்கார வைத்துக்கொண்டு, அந்தப் பெண்மணி அமர இடம் கொடுத்தாள்.

நன்றி சொல்லி உட்கார்ந்தவளின் முகத்தில் ஈயாடவில்லை. ○

திருநள்ளாறிலிருந்து இ.ஜே.தீன்

குறும்பு அடிச்சீங்க!

இன்றைக்கு காஸ்மோபாலிட்டன் சிட்டிகளில் ஜொலிக்கும் வி.ஐ.பிக்கள் பலர் கிராமத்திலிருந்து வந்தவர்கள்தான். அவர்களுள் சிலரிடம் தங்களது இளமைக் கால கிராமத்துக் குறும்புகளை எடுத்துவிடச் சொன்னோம்...


பா.விஜய் (பாடலாசிரியர்):

''கும்பகோணம் பக்கத்துல உட்கோட்டை கிராமத்துல இருக்கும் பெரியப்பா வீட்டுக்கு லீவு விட்டாப் போறதுண்டு. அங்க போய் வாடகை சைக்கிள்ல சுத்தறது, வாய்க்கால்ல நீச்சல் அடிக்கறதுன்னு ரொம்ப அடாவடி பண்ணுவோம். திடீர்னு எங்க பெரியப்பா அதுக்குத் தடை போட்டுட்டாங்க. கடுமையான கோபம் வந்துடுச்சு. அப்போ எல்லா வீட்லயும் ஏகப்பட்ட பானைகளை கவிழ்த்து அடுக்கி வச்சிருப்பாங்க. எங்களை விளையாட விடலைங்கற கோபத்துல, வில் - அம்பு செய்து, எல்லாப் பானைகளையும் ஒண்ணு விடாம ஓட்டை போட்டுட்டு



• அறந்த வால்

வந்துட்டேன். அடுத்த வருஷம்தான் எல்லாப் பானையையும் எடுத்துப் பார்த்திருக்காங்க போல... எல்லாப் பானைகளும் ஓட்டை போடப்பட்டிருந்ததால, கிராமமே இதை ஏதோ 'சாமி குத்தம்' ரேஞ்சுக்கு ரொம்ப பரபரப்பா பேசியிருக்கு... ஆனா கடைசி வரைக்கும் நான் இதைப் பத்தி மூச்சுக் கூட விடல... அதை இப்ப நினைச்சாலும்



• சூப்பர் பரிசு

சிரிப்பா இருக்கு.''

நிர்மலா பெரியசாமி (செய்தி வாசிப்பாளர்):

''நான் நல்ல வாயாடி மட்டுமில்ல... அதிரடி ராணியும் கூடன்னு எங்க பெரியம்மா அடிக்கடி சொல்வாங்க... ஒரு தடவை லீவுக்கு கோபிச்செட்டிப்பாளையம் பக்கத்துல தூக்கநாயக்கன்பாளையம் கிராமத்துக்குப் போயிருந்தேன். அப்போ அந்தத் தெருவுல இருக்குற என் வயசுப் பொண்ணு ஒண்ணு ரொம்பவும் அடாவடி பண்ணுமாம்... யாருக்குமே அடங்காம இருக்குமாம். ஊருக்குப் போன என்கிட்ட இதைச் சொல்ல, நான் போய் அவளை பளார்னு ஒரு அறை விட்டேன் பாருங்க... அவ்ளோதான்- அதோட அந்தப் பொண்ணு அமைதியா விட்டா... அப்புறம்தான் தெரியும், அந்தப்

பொண்ணு அந்த ஊர் கிராம அதிகாரி யோட பொண்ணுன்னு. அதன் பிறகு நான் ஊருக்கு வரேன்னு சொன்னாலே, அந்தப் பொண்ணு 'நான் அத்தை வீட்டுக்குப் போறேன்'னு கிளம்பிடு வாளாம். 'ஹீரோயிசம் மாதிரி ஹீரோ யினிசம் பண்ணிட்டியே'ன்னு எங்க பெரியம்மா சொல்லிச் சொல்லிச் சிரிப் பாங்க."


• சாமி குத்தம்

எஸ். திருநாவுக்கரசு (பா.ஜ.க எம்.பி):

"ஒரியூர்ங்கற கிராமத்துலதான் நான் ஏழாவது, எட்டாவது படிச்சேன். அப்போ இந்தி எதிர்ப்பு ரொம்ப சூடா இருந்த நேரம். எங்க ஸ்கூல்ல இந்தி கிளாஸ் உண்டு. அப்போ கிளாஸ் ரூம்ல இருக்குற போர்டுல 'இந்தி ஒழிக... இந்தி ஆசிரியர் வெளியேறுக'ன்னு யாரு


• அதிரடி ராணி

எழுதறதுன்னு டிஸ்கஷன். நாமதான் துறுதுறுப்பான ஆளாச்சே! சரின்னு போய் போர்டுல எழுதிட்டேன். இந்தி ஆசிரியர் வந்து 'யாரு எழுதினது?'ன்னு அதட்ட, நான் போய் நெஞ்சை நிமிர்த்திக் கிட்டு நின்னேன். கையை நீட்டச் சொல்லி பிரம்பால வச்சார் பாருங்க அடி... அப்பா...! இடி மாதிரி இருந்தது. கை பழுத்திடிச்சி... இதெல்லாம் பத்தா துன்னு கிளாஸை விட்டு வெளில தள்ளி முழங்கால் போட வச்சிட்டாரு. நம்ம ளோட அவசரத்துக் கும், குறும்புக்கும் கிடைச்ச அந்த சூப்பர் பரிசை இப்ப நினைக்கிறப்போ சிரிப்பா இருக்கு... ஆனா அப்போ... *(ஒரு முறை கையை தடவிப் பார்த்துக் கொள்கிறார்.)*"

சீர்காழி சிவசிதம்பரம் (பாடகர்):

"எங்க கிராமத்துல பூவரச மரம் அதிகமா இருக்கும். அந்த இலைல 'பீப்பி' செஞ்சு ஊதறது ரொம்பப் பிர பலம்... எல்லோரும் எப்படின்னா, 'பீப்பி' செஞ்சு உடனே ஊதுவாங்க... கொஞ்ச நேரத்துல தூக்கி வீசிடுவாங்க. ஆனா நானும் என் நண்பர்களும் என்ன செய் வோம் தெரியுமா? மதியம் சாப்பிட்டுட்டு எல்லோரும் அசந்து தூங்கற நேரமான மூணு மணிக்கு, என் வீட்டிலிருந்து விசில் அடிப்பேன். இதைக் கேட்டு பக்கத்து வீட்டுப் பையன் விசிலடிப்பான். இப்படி ஒருத்தருக்கொருத்தர் 'விசில்' சிக்னல் கொடுத்து, ஒரே இடத்துல கூடி, அப்போ ஹிட்டான பாட்டுகளை வாசிப்போம். தூங்க விடாம தொந்தரவு பண்றதுதான் எங்களோட நோக்கம். இந்த மாதிரி ஏகப்பட்ட குறும்புகள் செய்ததுண்டு. அதனாலயே எங்க ஊர்ல என் பேரே 'அறுந்த வால்'தான்னா பார்த்துக்கோங்க."

- இரா. முத்துக்குமார்

படங்கள் : **ராஜன்**

தமிழ் சினிமாவுக்கு மண் வாசனை எனும் ஆக்ஸிஜன் தந்த பாரதிராஜா ஒதுங்கியிருப்பது ஏன்? அவரிடமே கேட்டோம்.

மண், மண் சார்ந்த அடையாளங்கள் தமிழ் சினிமாவுக்கு அந்நியமாகி வருவதை கவனிக்கிறீர்களா?

''எனக்கே பயமாக இருக்கிறது! என்னுடைய படங்களைத் திரும்பிப் பார்த்தால்தான், தமிழ் கிராமத்தின் தடயங்கள் தெரியுமோ என்ற கவலை வாட்டத் தொடங்கியிருக்கிறது. 'ஆட்டோகிராஃப்', 'காதல்' போல ஒன்றிரண்டு படங்கள் கொஞ்சம் ஆறுதல் தருகின்றன. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, தமிழன் - தனது அடையாளங்களை ஒவ்வொன்றாகத் தொலைத்துக் கொண்டிருக்கிறான், அவனது கலாசாரம் முற்றாக மாறிவிட்டது என்பதைத்தான் இப்போதைய தமிழ் சினிமா பிரதிபலிக்கிறது.''



காதல் கதை என்ற பெயரில், நமது கலாசாரத்தில் இல்லாத பாலியல் வக்ரங்களைப் படம் பிடித்து, பாராட்டு பெறுவதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?


''என்ன சொல்ல? 'தமிழா! மேற்கத்திய நாகரிகத்தின் தாக்கம் அதிகமாகி, நீ டி.வி.டியில் மேய்ந்துவிட்டு வரும் விஷங்களையெல்லாம் இங்கே வாந்தியெடுப்பதற்கு, உன் தாய்நாடுதான் கிடைத்ததா? தலைமுறைகளின் முதுகில் தட்டிக் கொடுப்பதற்கு பதிலாக, குப்பைக் கூளங்களை கட்டி விடுகிறாயே! வரலாறு ஒரு போதும் உன்னை மன்னிக்காது' என்று அரற்றுவதைத் தவிர, வேறு என்ன செய்வது?''

இப்படியொரு சூழ்நிலையில் மீண்டும் மண் வாசனைப் படமெடுக்கும் தைரியமிருக்கிறதா?

''இங்கே நடந்த ஒரு விஷயத்தை மிக யதார்த்தமாகச் சொன்னால், கட்டாயம் வெற்றி உண்டு என்பதற்கு 'காதல்' படம் ஓர் எடுத்துக்காட்டு. 'காதலை'யே கூட நான் சொல்லியிருந்தால், ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. காரணம், எனது முப்பதாண்டு கால பாரம்பரியத்தைப் பற்றி ரசிகன் யோசிக்கிறான். இல்லாத ஒன்றை, இதுவரை பதிவு செய்யாத புதிய ஒன்றை என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். அது என்ன என்று தேடியலைந்ததில் ஒரு விடை கிடைத்திருக்கிறது. வரலாற்றின் ஏடுகளிலிருந்து எடுத்து விட முடியாத, ஒரு வரலாற்றுச் சம்பவத்தை, அதன் பிரம்மாண்டத்தோடு சொல்ல வேண்டும் என்பது. அதுதான் 'குற்றப்பரம்பரை'. நவீன தமிழ் வரலாற்றில் நீறுபூத்த நெருப்பாக இன்னும் கனன்று கொண்டிருக்கும் ஓர் இனத்தின் வரலாறு. உலகளவில் பேசப்படும் 'யூனிவர்செல் ஃபீல்' கொண்ட மாபெரும் சினிமா ஆவணமாக குற்றப் பரம்பரை இருக்கும். தமிழில் ஒரு 'சின்ட்லர்ஸ் லிஸ்ட்' என்று கூடச் சொல்லலாம்.''

'குற்றப் பரம்பரை'க்கான திரைக்கதை, நடிகர்கள், நிதி எல்லாம் தயாரா?

''ஸ்கிரிப்ட் முடிந்துவிட்டது. புதுமுகங்கள் நடித்தால் யதார்த்தமாக இருக்கும். பிரபல நடிகர்களையும் பயன்படுத்தலாம். ஒரு கிழவன்தான் படத்தின் கதாநாயகன். அந்தப் பாத்திரத்தை என் நண்பர் கமல் மட்டும்தான் ஏற்று நடிக்க முடியும். இன்னொரு ஆள் நான். இருவரில் யார் என்று இப்போது சொல்ல முடியாது. எனது திட்டமிடல் படி, ஏழு கோடியில் எடுத்து விட முடியும்.''



“நான் ராமதாஸ் கட்சி!”

–பாரதிராஜா அதிரடி

திரையுலகை எச்சரித்து வருவது சரி தானா?

“இந்த விஷயத்தில் நான் ராமதாஸ் கட்சி. துரதிஷ்டவசமாக, இவர்கள் இருவரும் அரசியல் சார்புடையவர்களாக ஆகிவிட்டார்கள். இல்லையென்றால், அவர்களது தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தில் முதல் ஆளாக நான் இருந்திருப்பேன். ஏனென்றால், அவர்களது மொழி உணர்வு மிக்க நியாயமானது. எனக்குத் தெரிந்து, பெரியாருக்குப் பிறகு தமிழையும், தமிழனையும் மீட்க வேண்டும் என்பதில் ராமதாஸ் உணர்வுபூர்வ மனிதர். திருமாவளவன் ஆத்மார்த்தமாகப் போராடுகிற இளைஞன். கட்சியை வளர்க்க இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்வதெல்லாம் அபத்தம். அதற்கு வேறு உத்திகளை அவர்களால் பயன்படுத்த முடியும்.''

டாக்டர் ராமதாஸ் - திருமாவளவன் தலைமையில் இயங்கும் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம், தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலத் தலைப்பு வைப்பதைத் தடுத்து விடுவதால் மட்டும் என்ன மாற்றம் நிகழ்ந்து விடும்?

''படிக்காத பாமரனுக்கும் போய்ச் சேருகிற மிகப்பெரிய ஊடகம் சினிமா. அப்படிப்பட்ட ஊடகத்தில் ஓர் ஓட்டை விழுந்தால் இந்தச் சமுதாயத்தில் ஓட்டை விழும். தமிழர்கள் சினிமாவை அடிப்படையாக எடுத்துக் கொள்கிறார்கள். Based on cinema, they elected their Government! அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வரை வந்துவிட்டோம். அரசியலும் சினிமாவும் பின்னிப் பிணைந்திருக்கும் இந்தச் சமுதாயத்தில், தெரிந்தோ தெரியாமலோ ஆங்கிலக் கல்வி முறை நுழைந்து விட்டது. தமிழ் தடுமாறுகிறது. பெரிய மொழி ஆராய்ச்சியாளர்கள், இன்னும் நானூறாண்டு காலத்தில் இந்த மொழியைப் பேசுகிறவர்கள் இருக்க மாட்டார்கள் என்று சொல்லும் போது அதிர்ச்சியாக இருக்கிறது. ஆங்கிலக் கல்வி



வந்தாலும், தமிழ் மொழியைக் காப்பாற்றுகிற சக்தி ஊடகங்களுக்குத்தான் இருக்கிறது. சினிமாவின் பங்குதான் பிரதானம். அது தடம் மாறினால், தமிழுக்கு ஆபத்து நேருவதைத் தவிர்க்க முடியாது. இதனால்தான் ராமதாஸும், திருமாவளவனும் தலையில் அடித்துக் கொள்கிறார்கள். தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்ற தலையெழுத்து, ஈழத் தமிழர்களுக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் மட்டும்தான் இருக்கிறதா? தாயகத் தமிழனுக்கு இருக்கக் கூடாதா?"

'ஐம்பதாண்டு காலமாக வோட்டுப் போட்டு ஏமாந்து விட்டீர்கள்!' - என்ற விஜயகாந்தின் விமர்சனம் சரியா?

"நோ கமெண்ட்ஸ். காமராஜரை முன்னுதாரணம் காட்டிக்கொண்டே, இதுவரை நல்ல ஆட்சி இல்லை என்பது மோசடியான பேச்சு. அண்ணா ஆட்சி மோசமா? கலைஞர், எம்.ஜி.ஆர் காலத்தில் நல்லது நடக்கவில்லையா? ஏன்? இப்போது மேடம் ஜெயலலிதா முற்போக்காக எத்தனை முடிவுகளை எடுத்தார். ஆடு வெட்டாதே! கோழி வெட்டாதே! என்பது எத்தனை அருமையான சீர்திருத்தம்! அதை அவர் திரும்பப் பெற்றதில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால், கடந்த ஐம்பதாண்டுகளில் எல்லா ஆட்சியாளர்களின் பங்களிப்பும் இருந்திருக்கிறது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இன்று தமிழகம் இருக்கிறது. வட மாநில கிராமங்களில் வரட்டி தட்டி வாழ்கிற மக்களைப் பாருங்கள். அங்கே சாலைகள் கிடையாது! மின்சாரம் கிடையாது! அரசியலுக்கு வருகிறவர்கள், இதற்குமேல் நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லி வரலாமே தவிர, முன்னோர்களை மொத்தமாக மறுதலிப்பது அரசியல் நாகரிகம் ஆகாது."

ரஜினியை முன்பு போல் மீடியா இப்போது கண்டுகொள்வதில்லையே ஏன்?

"என்னிடம் பேட்டி என்றபோதே இப்படியொரு வில்லங்கத்தை எதிர்பார்த்தேன். கால ஓட்டத்தில் ரஜினி உச்சத்திலிருந்தபோது பிரம்மாண்டமாக அவரைத் தூக்கிக் கொண்டாடியது உங்கள் மீடியாதான். அவரின் தலைமுடி கீழே உதிர்ந்தால்கூட... 'ஆ...' என்று அலறி அடித்து எழுதினீர்கள். அதையெல்லாம் ரஜினி அப்போது கண்டுகொள்ளவில்லை. இப்போது ரஜினி அமைதியாக இருக்கிறார். ரஜினியிடம் பரபரப்பு இல்லை என்றான பிறகு, வேறு பரபரப்பைத் தேடி ஓடுகிறீர்கள். ரஜினி தடுமாறாமல் இருக்கிறார். இன்னும் ரஜினி எனக்கு நல்ல நண்பர்தான். நானே ரஜினியை விமர்சித்தேன். மண்ணின் மைந்தர்கள்தான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்ற அடிப்படையில், யாரை வேண்டுமானாலும் விமர்சிப்பேன். இப்போதும் அதுதான் எனது நிலைப்பாடு."

சந்திப்பு: **ஜெய்**
படங்கள்: **ஸ்ரீஹரி**



மனு

"என்னது? 'ஆட்கொணர்வு மனு' தாக்கல் செய்யணுமா? யார் காணாமப் போயிட்டாங்க?"

"என் 'ஆட்டை'த் தூங்க காணோம்!"

- *சம்பத்குமாரி*

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஏழாம் பாகம்

20

குறையொன்றுமில்லை

'என்னுடைய மாயையை யாராலும் தாண்ட முடியாது... அதைப் புரிந்து கொள்வதே கஷ்டம். என்னை யார் அடிபணிகிறார்களோ, அவர்கள்தான் அந்த மாயையிலிருந்து விடுபடுவார்கள்...' என்கிறான் பகவான்.

'மாயனை' என்ற இடத்துக்கு வருகிறபோது, உபன்யாஸம் நின்றே போய்விடும்! ஏனென்றால், அதைச் சொல்லி முடிப்பதற்கே அத்தனை நாட்கள் ஆகிவிடுகின்றன. பகவானின் மாயா சேஷ்டிதங்களைப் பற்றி என்னதான் சொல்ல முடியும்! ஒன்றா, இரண்டா அவை சொல்லி விவரித்து முடிப்பதற்கு! அதனால்தான் அவனை மாமாயன் என்றார்கள்.

சுவேதாசுவதர உபநிஷத்தானது சொல்கிறபோது, 'மாயா' என்றால் இந்தப் பிரகிருதிக்குப் பெயர் என்கிறது. இந்தப் பிரகிருதியை உடையவன் மாயன். பகவான் மாயாவி. அனைத்தையும் தனது ஆதீனத்திலே உடையவன்.

பிரகிருதியினுள்ளே இவ்வளவு காரியத்தையும் அவன்தான் பண்ணுகிறான். அவனே அனைத்தையும் பண்ணுவதனாலே பிரகிருதி அவனைக் கட்டுப்படுத்தாது. இது அனைத்தையும் அவன் கட்டுப்படுத்துகிறான். பிரகிருதிக்குள்ளே உறைகிறான்; பிரகிருதியாகவும் இருக்கிறான்; அதைக் கட்டுப்படுத்தவும் செய்கிறான்.

கர்ப்ப ஸ்துதியிலே தேவகியினுடைய கர்ப்பத்தில் இருக்கிற சமஸ்த தேவதைகளும், பகவானைத் தோத்திரம் பண்ணுகிறார்கள். அப்போது சொல்கிறார்கள்:

''ஸத்தாகவும் கெத்தாகவும் நீயே இருக்கிறாயே...!'' என்கிறார்கள். ஸத் என்றால் எது? கெத் என்றால் எது?''

பஞ்ச பூதங்களில் ஆகாசம், வாயு, அக்னி, ப்ருத்வி, ஜலம் என்று சொல்கிறோமே, அவற்றுள் ஆகாசம் முதலான மூன்று கெத்து; மற்றவை ஸ்யெத்து.

பஞ்ச பூதங்களாக இருக்கிறான்.

பஞ்ச பூதங்களைத் தாங்குகிறான் (பூதக்ருத் பூத ப்ருத் பாவ:)

பஞ்ச பூதங்களுக்கும் சக்தியைக் கொடுத்து இயக்கவும் செய்கிறான்.

வேதத்தில் இரண்டாம் காண்டத்தில் சம்ஹிதா பாகத்தில், கிருஷ்ண யஜுர் வேதத்தில் ஏகப்பட்ட இஷ்டிகளைச் சொல்லியிருக்கிறது. 213 இஷ்டிகள்! அவற்றையெல்லாம் பண்ணினால், உலகத்துக்கு க்ஷேமம். ஸோம யாகம் பண்ணியவர்கள்தான் அந்த இஷ்டிகளையெல்லாம் பண்ணலாம். எல்லோரும் இந்த இஷ்டிகளைப் பண்ண முடியாது!

மழை பெய்ய வேண்டுமென்றால், அதற்கு ஒரு இஷ்டி (யாக கர்மா)

ஐந்த்ராகம் என்று ஓர் இஷ்டி - அதைப் பண்ணினால், உயர்ந்த ஸ்வர்கலோகத்தில் பிறவி ஏற்படும்.

ஐச்வர்யம் வேண்டுமென்றால் வாயவ்யம் என்ற இஷ்டியைப் பண்ண வேண்டும்.

வாயவ்யம் என்ற இஷ்டியோடுதான் வேதபாகத்தின் இரண்டாம் பாகமே ஆரம்பிக்கிறது. வாயுதேவாத்கமகமான மந்திரம் அது.

வாயு எப்படிப்பட்ட தேவதை என்பது அதிலே சொல்லியிருக்கிறது. வேகமாகச் செல்லக் கூடிய தேவதை வாயு. வாயு வேகம்; மனோ வேகம் என்று சொல்வார்கள்.

ஆஞ்சநேயரைச் சொல்கிறபோது, மனதைப் போல வேகமுடையவன் என்று சொல்வார்கள். 'மருத்'தினுடைய பிள்ளையானதனாலே, அவன் மாருதி. மாருத

துல்ய வேகன் அவன். காற்றைப் போன்ற வேகமுடையவன். வேகமாகப் பலனைக் கொடுக்கக்கூடிய தேவதை வாயு. அதனால் தான் வாயுதேவதையைக் கொண்டாடு கிறோம்.

வாயுவுக்கு ஸ்வாதி நக்ஷத்திரம். ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் அதிஷ்டான தேவதை உண்டு. ஸ்வாதி நக்ஷத்திரத்துக்கு யார் தேவதை என்று கேட்டால், வாயு. அந்த நக்ஷத்திரத்திலேதான், நரசிம்ஹன் தோன்றி, அந்தியம்பொழுதில் அரி உருவாகி அழித்தான். சாயங்காலவேளை, ஸ்வாதி நக்ஷத்திரம், சதுர்தசி திதியிலே தோன்றினான் பகவான் நரசிம்ஹன். எதற்காக...?

வேகமாகப் பலனைக் கொடுக்கக் கூடிய தேவதை வாயு. தானும் அதே மாதிரி வேகமாகப் பலனைக் கொடுக்கக் கூடியவன் என்பதைக் காட்டத்தான், வாயு தேவதாத்மகமான அந்த நட்சத்திரத்திலே பரமாத்மா தோன்றினான்.

ஆகாசத்திலே சஞ்சாரம் பண்ணுவதனால் மாதரிச்வா என்று பெயர் வாயுவுக்கு.. ஸமீரயு என்றும் ஒரு பெயர்.



பிராணாபான, யான, உதானாதி வாயுக்களெல்லாம் நம் உடம்பிலே நல்லமுறையிலே இருந்தால்தான், உடல் நல்ல முறையிலே வேலை செய்யும்.

ஐந்து வாயுக்கள் நம் உடலில் இருக்கின்றன. கொட்டாவி விடுவதற்கு ஒரு வாயு காரணம்; கண் சிமிட்டுவதற்கு ஒரு வாயு காரணம்; கை - கால்களை அசைப்பதற்கு ஒரு வாயு காரணம். இந்த வாயுக்களெல்லாம் சரியாக வேலை செய்யவில்லையென்றால், கை காலை அசைக்க முடியாது; கண் சிமிட்டுவதில் அவஸ்தை ஏற்படும். அந்தந்தக் காலத்திலே செய்ய வேண்டிய காரியங்கள், ஏப்பம், கொட்டாவி விடுவது, எல்லாவற்றுக்கும் இந்த வாயுக்கள் சரீரத்தில் இருந்து வேலை செய்கின்றன. அதனால்தான் நித்யம் வாயுவை தியானம் பண்ண வேண்டும்:

பிராணாயஸ்வா:
அபானயஸ்வா:
தானாயஸ்வா:
உதானாயஸ்வா:
ஸமானாயஸ்வா:

- பிராணாஹூதி

என்று பெயர். வாயுக்களை மனத்தால் தியானம் பண்ணி, அந்தர் - யாமிக்கு, உள்ளுக்குள்ளே பகவானுக்கு நிவேதனம் பண்ணுகிறோம். இரண்டு பருக்கை அன்னத்தை நெய்யிலே நனைத்து, உள் நாக்கிலே விழுகிற மாதிரி அதைச் சேர்க்க வேண்டும். ஏகமாக உருட்டிச் சாப்பிடக் கூடாது. பிராணாஹுதி என்றால் உள்நாக்கில்தான் விழ வேண்டும். பற்களாலே கடித்துச் சாப்பிடக் கூடாது. ரொம்ப சொல்பமாக, உள்நாக்கிலே இப்படிச் சேர்ப்பதுதான் பிராணாஹுதி. நம் சரீரத்தில் பிராணபான தானாதி வாயுக்களெல்லாம் கடைசி பர்யந்தம் நல்ல முறையிலே வேலை செய்ய வேண்டுமென்றால் இந்த பிராணாஹுதி ரொம்ப முக்கியம்.

கொஞ்சம் காலத்துக்கு இந்த வாயுக்கள் வேலை செய்துவிட்டு, கடைசிக் காலத்தில் செய்யாது போனால், எவ்வளவு கஷ்டம்! பராதீனம் பிராண சங்கடம் என்பார்கள். இதரர்களை அனுசரித்து வாழ வேண்டி வந்ததென்றால், ரொம்ப சிரமம். ஆகையினால், அந்திமக் காலம், கடைசி பர்யந்தம் இது மொத்தம் நல்ல முறையிலே ஒழுங்காக வேலை செய்ய வேண்டும். அதற்காகத்தான் நித்யமே இந்த தியானத்தை நாம் பண்ண வேண்டும். கர்மானுஷ்டானத்தினாலேதான் நமக்கு ஆயுள் பர்யந்தம் இந்த்ரியங்கள் வேலை செய்கின்றன.


நித்யம் சூரியனை நாம் பார்க்கிறோமே, அப்போது சொல்கிறோம்: "நூறு வயது காலம் இருந்து அந்த சூரியனை நாம் பார்க்கக் கடவோம். சந்தோஷத்துடன் பார்க்கக் கடவோம்; இந்த்ரிய பலத்தோடு பார்க்கக் கடவோம்; கண்கள் நன்றாக இயங்க, பார்க்கக் கடவோம்... என்றெல்லாம் இந்த இடத்தில் பிரார்த்தனை.

சூரியனைப் பார்ப்பது என்கிற கர்மாவையே நாம் பண்ணவில்லையானால், நூறு வயது நாம் எங்கிருந்து வாழ முடியும்? நேத்திரங்களின் செயல்பாடு என்பது எவ்வாறு நமக்கு சிறப்பாக அமையும்? நித்ய கர்மாவினால்தான் நமக்கு இந்த்ரிய பலம்.

ஆகவே அனைத்தும் கர்மானுஷ்டானத்தினாலேதான் சித்திக்கிறது என்கிறது வேதம். வாயுக்கள், அதேமாதிரி உஷ்ண சக்தி, யாவும் அனுஷ்டானத்தினால்தான் சரியாக அமைகிறது. சரீரத்திலே உஷ்ணம் போய் விட்டதென்றால், சரீரத்துக்குக் கௌரவம் இல்லை. அக்னி ரூபியாக இருந்து பகவான் இந்த சரீரத்தை ரக்ஷிக்கிறான். கீதையிலே பகவான் சொல்கிறான்:

'வயடராக்னியாய் உள்ளே இருந்து, நான் ஒவ்வொருத்தர் வயிற்றுக்குள்ளேயும் இருக்கிறேன்' என்கிறான்.

நாராயண உபநிஷத்தில் கடைசி அன்வாகத்திலே ஒரு மந்திரம் வருகிறது. அதைப் பூர்வ காலத்திலே ஒரே மூச்சில் சொல்லி முடிப்பார்கள். இப்போது அடியேன் அதைச் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன்; பதிமூன்று இடத்தில் மூச்சு விடுகிறேன்! குறைக்க முயன்று, இரண்டு தடவை மூச்சு விடுவதைக் குறைத்து பதினொரு இடத்திலே மூச்சை விட்டுக் குறைக்க முடியுமேயொழிய, அந்த மாதிரி ஒரே மூச்சாகப் பிடித்துச் சொல்ல முடியவில்லை...



குக்கர்

"அத்தை... டாக்டர் என்னை வெயிட் தூக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாரு."

"அதுக்கென்ன?"

"இனிமே குக்கருக்கு வெயிட்டையும் நீங்களே போட்டுடுங்க."

– ஆர்.எஸ். பிரபு

ஏன்...?

பிராணாயாம பலம் இல்லை! இப்போது எல்லாமே சமிக்ஞையான ஒரு பாவனை ஆகிவிட்டது. பிராணாயாமம் என்பது வெறுமனே மூக்கைப் பிடிப்பது என்று ஆகிவிட்டது. கிரமமாகப் பண்ணாமல், ரேசக - கும்பகங்களைக் கிரமமாகப் பண்ணாமல் எப்படி பிராணாயாமம் என்று சொல்ல முடியும்? பிராணாயாம பலமிருந்தால்தான் மந்திரங்களைப் பூரணமாக உச்சரித்து, அந்தந்த இடத்திலே நிறுத்தும்படியான நிலை நமக்கு ஏற்படும். மூச்சை பிடித்துச் சொல்லும்படியான நிலை... அப்படிச் சொல்லக் கூடியவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

கரீம்நகர் ஜில்லாவிலே, ஆந்திராவில் மந்தயனே என்ற ஊரில், மந்தயனே கனபாடிகள் என்று இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வந்தால், அவையே நடுங்கும். அப்படி, கல் விழுகிற மாதிரி கனம் சொல்லக் கூடியவர்கள் அவர்கள்!

'புளியங்கொட்டை' கனபாடிகள் என்றே பெயர் அவர்களுக்கு... ஒரு கூடை நிறைய புளியங்கொட்டையை எடுத்துக் கொண்டு, ஒரு அடியை மனனம் பண்ணுவதற்கு, ஒவ்வொரு புளியங்கொட்டையாக எடுத்துத் தரையில் போட்டபடி அதை ஒப்பிப்பார்கள். மறுபடியும் அடுத்த அடியை மனனம் பண்ணுவதற்கு, தரையில் இருக்கிற புளியங்கொட்டையை எடுத்து திரும்பவும் கூடையிலே போடுவார்கள்... அத்தனை புளியங்கொட்டையும் திரும்பவும் கூடைக்குள் போகிறவரை அதே அடிதான்! இந்த மாதிரியே 2198 பஞ்சாதிக்கும் கனம் சொல்லியிருக்கிறார்கள் அவர்கள்!

தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் தப்பே வாக்கிலே வராது. அந்த மாதிரி பிடித்துச் சொல்லக் கூடிய வாக்கு எங்கேயிருந்து வரும்? அனுஷ்டான பலத்தினாலேதான் வரும். வாயுவை நல்ல முறையிலே அடக்கி ஆளக்கூடிய மகான்களால்தான் மந்த்ரோச்சாரணம் பண்ண முடியும்.

(வளரும்)

பட்டுத்தறி to பாட்டுத்தறி!

– ஒரு கிராமத்து ஆட்டோகிராஃப்



புதுக்கவிதையை அதன் புத்துணர்ச்சியோடு சினிமா மெட்டுக்குள் இடம் பெயர்த்து, ஐந்நூறு பாடல்களை எழுதி முடித்திருக்கும் நா. முத்துக்குமாரின் வேர்கள், காஞ்சிபுரத்தை ஒட்டிய ஒரு குக்கிராமத்திலிருந்து தொடங்குகின்றன. ஒரு பக்கம் திரைப்பாடல், மறு பக்கம் தீவிர இலக்கியம் என இரண்டிலும் உறுதியுடன் கிளை பரப்பியிருக்கும் இந்த நம்பிக்கைக்குரிய தமிழ்க் கவிஞரை அவரது சொந்த கிராமத்துக்கு அழைத்துச் சென்றோம். காத்திருக்கும் காதலியைப் பார்க்கப் போகும் வாஞ்சையோடு புறப்பட்டார்.



சென்னை தாம்பரத்திலிருந்து வாலாஜாபாத் வழியாக காஞ்சிபுரம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது கார். வழி நெடுகிலும் சின்னதும் பெரியதுமாய் ஏரிகள். கரைகளில் அணிவகுத்து நிற்கும் பனை மரங்கள்.

"ஏரிக் கரையில் ராணுவ வரிசை
கிராப் வெட்டிய
பனை மரங்கள்'' என்று என்னை ஹைக்கூ எழுத வைத்தவை இந்தப் பனை மரங்கள்தான். எங்கள் மருத நிலப் பகுதியின் மூதாதையர்கள் போல, தலைமுறைகள் கடந்த தாவரம் பனை மரங்கள் என்றால், இதோ சாலையோரத்தில் குழல் வடிவப் பூக்களோடு மண்டிக்கிடக்கும் சீமை ஆடுதொடாச் செடிகள் இந்திய மண்ணுக்குள் எப்படியோ புகுந்து முப்பது ஆண்டுகள்கூட முடிந்திருக்காது. நிலத்தடி நீரைத் திருடி, நீர் நிலைகளை மூடித் தூர்த்துவிடும் பொல்லாத செடி ரவுடிகள்'' என்று இலக்கியத் தரமாய் கோபப்பட்ட கவிஞரிடம், ''இந்த ஆடுதொடாச் செடிகள் பற்றி ஹைக்கூ எதுவும் எழுதவில்லையா?'' என்றோம். ''ஏன் இல்லை...



குடும்பத்தினருடன் கவிஞர்

'வேலி ஓரத்தில்
கிராமஃபோன் குழல்கள்
ஆடுதொடா பூக்கள்' என்று எழுதினேன்" என்றபடி உற்சாகமானார். மணல் வெளியாய் விரிந்து கிடக்கும் பாலாற்றைப் பார்த்தபொழுது கவிஞரின் உற்சாகம் கொஞ்சம் சோகமானது... "காவிரி, தென்பெண்ணை, பாலாறு என்று பாரதி பெருமை பொங்கப் பாடிய தமிழக நதிகள் இன்று வெறுமையாகக் கிடக்கின்றன. ஆனால், எங்கள் பாலாற்றுத் தாயின் மார்பு இன்னும் வற்றி விடாமல் எங்களுக்கு நிலத்தடி நீரைத் தந்துகொண்டே இருக்கிறாள். இந்த அன்னையின் ஈர நெஞ்சம் காய்ந்து விடாமல் இருக்க பிள்ளைகள் சாயக்கழிவுகளால் அவளை சாகடிக்காமல் இருந்தாலே போதும்" சொல்லிக் கொண்டிருக்கும்போதே வந்துவிட்டது அவரது கிராமம்.

காஞ்சிபுரத்துக்கு ஏழு கிலோமீட்டருக்கு முன்பே இருக்கிறது கன்னிகாபுரம். ஊருக்குள் நுழையும்போதே 'தட்... தட்... தடக்... தடக்' என்று பட்டுத் தறிகளின் தாளச்சத்தம் செவிகளைத் தாலாட்டுகிறது. சுற்றிலும் நெல்வயல், தூரத்தில் வேகவதி ஆறு... அதற்கும் அப்பால் ரயில் தண்டவாளம். பத்து நிமிடம் நடந்தால் வரதராஜர் பேராலயம். இதுதான் கன்னிகாபுரத்தின் இருப்பு.

அடக்கமாய் ஒரு சின்னஞ்சிறு ஓட்டு வீடு. வீட்டின் முன்பு கார் நின்றதும், "ஏய்... அண்ணன் வந்தாச்சு!" என்று மகிழ்ச்சிக் கூவலோடு ஓடி வருகிறார்கள் தம்பிகள். பெற்றோர், பாட்டிகள், அத்தை எனப் பாசம் வழிந்தோடும் குடும்பம். ஒவ்வொருவரும் கவிஞரை கட்டித் தழுவி உச்சி நுகர,

அதற்குள் அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து "ஏய் முத்து, என்னப்பா எப்படியிருக்கே.. ஓம் பாட்டெல்லா நச்சுன்னு இருக்குப்பா.... நம்ம ஊருக்குப் பெருமை" என்று வாய் நிறையப் பாராட்டிக் கொண்டே ஆளாளுக்கு அவரவர் வீட்டுக்கு அவரை இழுக்கிறார்கள். தவிர்க்க முடியாமல் பக்கத்து வீட்டுக்குள் முதலில் நுழைகிறார். அங்கே பட்டுத் தறியில் அமர்ந்திருந்த இளைஞரைப் பார்த்து, "என்ன மணிகண்டா, எப்படி இருக்கே?" என்று கேட்டபடி தறிக்குழியில் இறங்குகிறார். அடடே! கோர்த்து வாங்கும் சிறுவனோடு இணைந்து... அற்புதமாகத்



* ஆயிரங்கால் மண்டபம்



* அப்பாவின் நூலகம்...

தறியை இழுத்து இழுத்து இயக்குகிறார். கவிதையின் எதுகை மோனை போன்ற ஓசை... முத்துக்குமார் வேறொரு உலகி லிருந்து பேசுகிறார்.

"நெசவு எங்கள் ஊர்த் தொழில். பால் யத்தின் பகல் பொழுதுகளில் என்னைத் தாலாட்டித் தூங்க வைத்த ஓசை இதுதான். என்னோடு படித்தவர்கள் பட்டுத்தறி நெய் யப் போய் விட்டார்கள். நான் பாட்டெழுத வந்துவிட்டேன். வரிகளுக்கு இடைப்பட்ட மௌனத்தில், கண்ணுக்குத் தெரியாத அன்னை நெய்வதையே என் படைப்பின் மையமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்ற முத்துக்குமார் தறியிலிருந்து எழுந்து, நெல்வயல்களின் வரப்புகளில் ஜில்லென்ற குளிர்ச்சிக்கு நடுவே நடக்க ஆரம்பித்தபடி பேச்சைத் தொடர்ந்தார்.

"எனக்கு பாம்புகள் என்றால் பயம். படையே நடுங்கும்போது நான் எம்மாத் திரம்? வயல் காடுகளில், கரும்புத் தோட்



• ஆட்டோகிராஃப் வேட்டை.....


டங்களில், தோட்டத்து வைக்கோல் போரில் என எத்தனையோ பாம்புகள் படம் எடுத்து முடிந்து, என் பயத்தையும் எடுத்துக் கொண்டு ஓடியிருக்கின்றன. நூறு நூறு பாம்புகள் இருந்தும் கிராமத்தில் வாழ்க்கை சுகமாயிருந்தது. பாம்புகளற்ற நகரத்தில் பயமாயிருக்கிறது'' என்றபோது, நெல் வயலின் ஏதோ ஒரு மூலையிலிருந்து பாம் பின் வாய்க்குள் சிக்கிய தவளையின் சத்தம் சீராகக் கேட்கத் தொடங்கியது. அங்கிருந்து நடந்த முத்துக்குமார் வந்தடைந்தது பச்சை நிறத் தண்ணீரோடு, குட்டையாய்க் கிடந்த வேகவதி ஆற்றுக்கு.

"என் நினைவுகளில் மட்டும் வாத் துக்கள் நீந்தும் வேகவதி ஆறு இதுதான். இன்று சாயக்கழிவுகள் தின்றுவிட்டன. பொன் வண்டுகளைப் பிடித்து தீப்பெட்டிச் சிறையில் அடைத்ததும், அதோ அந்த தண்டவாளத்தில் தாமிரக் காசுகளை வைத்து, ரயில் ஏறியதும் காந்தமாக மாறும் என்று காத்திருந்து, காசையும் காலத்தையும் தொலைத்ததும், சிவபெருமானுக்கு அடுத்த படியாக மூன்று கண்ணுடன் இருக்கும் பனை நுங்கில் வண்டி செய்து 'பம்பாய்க்குப் போகிறேன்' என்று சொல்லி, மாட்டுத் தொழுவத்தைச் சுற்றி வந்ததும் இப்போது வரிசையாய் ஞாபகம் வருகின்றன" என்ற வரை இடைமறித்து "உங்கள் பால்யத்தின் இந்த அனுபவங்களைத்தான் 'லஜ்ஜாவதியே' என்ற சினிமாப் பாடலில் அப்படியே வடித் திருக்கிறீர்களா?" என்றோம்.

"அய்யோ! கண்டுபிடித்து விட்டீர்கள்!" என்று உற்சாகமாகி லஜ்ஜாவதியே பாடலின் முதல் சரணத்தை...

"பூவரசம் இலையிலே
பீப்பி செஞ்சி ஊதினோம்
பள்ளிக்கூட பாடம் மறந்து
பட்டாம்பூச்சி தேடினோம்!
தண்ணிப் பாம்பு வரப்பில் வர
தலைதெறிக்க ஓடினோம்!
பனங்காயின் வண்டியில்
பசுமாட்டுத் தொழுவத்தை
சுற்றி வந்து பம்பாய்க்கு போனதாகச்
சொல்லினோம்!
அடடா வசந்தம், அதுதான்
வசந்தம்! மீண்டும் அந்தக் காலம்
வந்து மழலையாக மாற்றுமா?"

- என குரலெடுத்துப் பாடிக் கொண்டே வீட்டுக்குத் திரும்பி னார். வீட்டிலிருந்து அவர் பயின்ற பள்ளி, கல்லூரி, சுற்றித் திரிந்த காஞ்சி வீதிகள் என்று புறப்படும் முன்பு, "எங்கள் வீட்டில் முக்கியமான அறைக்கு உங்களை அழைத்துச் செல்லப் போகிறேன்" என்றபோது... அதைப் புரிந்து கொண்டவராக, முத்துக்குமாரின் தந்தை நாகராஜன் ஓடி வந்து அந்த விசாலமான அறையைத் திறந்தார். 'அன்னை நூலகம், அருட்காட்சியகம்' என்றொரு பெயர்ப் பலகை... உள்ளே வரிசை வரிசையாய் அல மாரிகள்... அத்தனையிலும் அறுபதாயிரம் புத்தகங்கள். "அத்தனையும் மொத்தமாக அப்பாவினுடைய சேமிப்பு. 'தொட்டுத் தொட்டு என்னை... வெற்றுக் களிமண்ணை... சிற்பமாக யார் செய்தது?' என்று நாயகியைக் குறிப்பிட்டு நாயகன் பாடுவதாக எழுதினேன். உண்மையில் களிமண்ணாக இருந்த என்னைச் செதுக்கியது அப்பாவும்,



• ஆய்வகத்தில் துறைத்தலைவருடன்...

அவரின் நூலகமும், இந்த ஊரும்தான்'' என்று பெருமைப்பட்ட முத்துக்குமார், 'ஒரு மூட்டை புத்தகம் கிடைத்தால், என்னையும் விற்று விடுவார்' என்று தமது 'பட்டாம் பூச்சி விற்பவன்' கவிதைத் தொகுப்பில் தந்தையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அவர் நல்லாசிரியர் விருது பெற்ற ஒரு தமிழாசிரியர் என்பது பலருக்குத் தெரியாது.

வீட்டிலும், கன்னிகாபுரத்து நண்பர்களிடமும் விடைபெற்ற முத்துக்குமாரைச் சுமந்துகொண்டு, தேரடி வீதி வழியே காஞ்சி நகருக்குள் நம் கார் நுழைந்தது. 'தேரடி வீதியில் தேவதை வந்தா திருவிழான்னு தெரிஞ்சுக்கோ!' என முத்துக்குமார் எழுதக் காரணமாக அமைந்த வீதி... இங்கே பட்டுப் புடைவைகளில் தழையத் தழைய வளைய வரும் பெண்களைப் பார்த்துத்தான் 'காதல் வளர்த்தேன் காதல் வளர்த்தேன்' என அவர் எழுதியிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே வந்துவிட்டது, காஞ்சி வட்டாட்சியர் அலுவலகம். அதற்குள்தான் இருக்கிறது இரு நூற்றாண்டுகள் கண்ட ஆண்டர்சன் மேல்நிலைப் பள்ளி. இங்கேதான் முத்துக்குமாருக்கு உயர்நிலைக் கல்வி.

“இந்த வளாகத்துக்குள் காவல் நிலையம், கிளைச்சிறை, நீதிமன்றம், கருவூலம் என்று பல அலுவலகங்கள். வறுமை நிமித்தம் திருடியவர்களில் தொடங்கி, வாய்தாக்களால் வாழ்க்கை இழந்தவர்கள்வரை, பலத்தரப்பட்ட முகங்களை பாடத்துடன் சேர்த்து படித்திருக்கிறேன். இங்கே படிப்பதே ஒரு புது அனுபவம்'' என்றபடி பள்ளிக்குள் நுழைந்தபோது, முத்துக்குமாரை எளிதில் அடையாளம் கண்டு சூழ்ந்துகொண்ட மாணவர்கள், அவரை ஆட்டோகிராஃப் அவஸ்தையில் முக்கி எடுத்தனர். பள்ளியின் தலைமையாசிரியர் எக்பர்ட் சச்சிதானந்தம் வந்து அவரை மாணவர்களிடமிருந்து மீட்டு அழைத்துப் போனார். “எனது தலைமையாசிரியர்... ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர்... அவரது கதைகளை இன்னும் நேசிக்கிறேன்'' என்றபடி பள்ளியின் பக்கத்திலிருக்கும் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் ஆயிரம் கால் மண்டபத்துக்கு நம்மை அழைத்துப் போனார்.

“எனது தேர்வுகள், எனது இலக்கிய தாகம் இரண்டுக்காகவும் இங்கே நிறையப் படித்திருக்கிறேன்... பல தனிமையான பொழுதுகளில் இங்கே நானும் கடவுளும் தாயம் ஆடுவதுண்டு'' என்றபோது அங்கொரு அமானுஷ்ய அமைதி.

ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து அவரை மீட்டுக்கொண்டு திரும்பும் வழியில், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி. இங்கே முத்துக்குமார் படித்தது இளங்கலை இயற்பியல். துறையின் தலைவர் ராமகிருஷ்ணன் ஓடி வந்து வரவேற்றார். “கவிதை, எழுத்து, கையெழுத்துப் பிரதி என்று திரிந்தாலும், படிப்பிலும் பலே கெட்டிக்காரன்'' என்றபடி துறையின் லேபிற்குள் அழைத்துப் போனார். அங்கே ஸ்பெக்ட்ரோ மீட்டரில் அளவுகளை கணக்கிட்டு, பயின்ற நினைவுகளை கொஞ்சம் சேகரித்த முத்துக்குமார் “இயற்பியல் படித்தாலும் ஸ்பெக்ட்ரோவில் தெரியும் வானவில்லின் நிறங்களையே என் கண்கள் தேடியிருக்கின்றன'' என்றபடி விடைபெற்றார். தமது கிராமத்தையும், காஞ்சி நகரத்தையும் பின்னணியாகக் கொண்டு ஒரு ஆங்கில நாவலை இப்போது எழுதிக் கொண்டிருக்கிறார் முத்துக்குமார். அதற்கு அவர் சூட்டியிருக்கும் தலைப்பு 'சில்க் சிட்டி.'


- ஜெயந்தன்

படங்கள்: **ஸ்ரீஹரி**

• 'இதுதான் அந்த வேகவதி ஆறு...'



களவெடுப்பது...



பரண் ஒட்டடையில்
கறுப்பேறிக் கிடக்கிறது
பல்லாங்குழிச் சட்டம்

தங்கையின்
தலைப்பிரசவத்துக்கு
வெந்நீர் விறகானது
ஏற்கெனவே ஒன்று

கான்கிரீட் சாலைகளின் கீழே
பிஞ்சுப் பாதச் சுவடுகள் சகிதம்
புதைந்து கிடக்கின்றன
சில்லுக் கட்டங்கள்

பித்தளை தாயக்கட்டைகள்
பழைய பாத்திரக்காரனோடு
பயணப்பட்டுப் போன நாளில்
புலம்பியழுத பாட்டிக்குக்
கிடைத்ததோ
'பைத்தியம்' முத்திப்போச்சு
என்பதான பட்டம்

விட்டத்து ஆணியில்
வருடும் விரல்களுக்காக
வருடக் கணக்கில் காத்திருந்த
மரப்பாச்சியை
தடித்த குரல்கள்
'டூ செக்ஸி' என
தண்டித்தபோது
பேத்தி பற்றியிருந்த
சிந்தெடிக் பார்பி
சிரித்தது டிஜிட்டலாய்

கிட்டியும் புள்ளும் கூட
ஓடி ஒளிந்து கொண்டன
கிரிக்கெட் மட்டைக்குள்

'ஒரு கொடம் தண்ணி ஊத்தி'
ஒரு பூவையும் பூக்க விடாத
திருடர்கள்
ஒவ்வொரு வீட்டிலும்

– ஆர்.சி.ஜெயந்தன்

இரவு நேரத்திற்கான நள்ளிரவு நேரத்தில் ஒரு கிராமமே விழித்து உழைத்துக் கொண்டிருக்கிறதென்றால், பலருக்கும் ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால்,

"இதில் ஆச்சர்யப்பட எதுவுமில்லை. நாங்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலுக்கு இரவுதான் தோதான நேரம்"



• சின்னம்மாள்



• புட்டு தயாரிப்பு...

பட்டுக்கு காஞ்சி... புட்டுக்கு புலிவலம்!

என்று கூறுகிறார்கள் புலிவலம் கிராமத்தினர்.

திருச்சியிலிருந்து முப்பது கி.மீ. தூரத்தில், துறையூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது புலிவலம். இங்கிருக்கும் நானூறுக்கும் மேற்பட்ட வீடுகளில் இரவு நேர குடிசைத் தொழிலாக உற்பத்தி செய்யப்படுகிறது குழாய் புட்டு. நாமக்கல், மணப்பாறை, சமயபுரம், திருச்சி, திருவெறும்பூர், வல்லம், தஞ்சாவூர் என்று பல இடங்களுக்கும் ஏற்றுமதியாகும் குழாய் புட்டு, புலிவலம் மக்களை கடந்த முப்பது வருடங்களாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

"குழாய் புட்டு தொழிலில் இரண்டு வகையினர் இருக்கிறோம். உற்பத்தி

செய்பவர்களிடமிருந்து கமிஷனுக்கு புட்டு வாங்கி வெளியூரில் கொண்டு விற்பனை செய்பவர்கள் ஒரு வகை. உற்பத்தி செய்பவர்களே கொண்டு போய் விற்பது இரண்டாவது வகை" என்றார் நாம் சந்தித்த ஊர்க்காரர் ஒருவர்.

"நான் இருபது வருஷமா கமிஷனுக்கு புட்டு விக்கிறேன். காலைல நாலு மணிக்குக் கிளம்புவேன். திருச்சி வழியா மணப்பாறைக்குப் போவேன். தெனத்துக்கும் நூத்து முப்பது கி.மீ. பயணம் செஞ்சு புட்டு வியாபாரம் பண்றேன். பஸ் சார்ஜ் மட்டும் ஒரு நாளைக்கு 50 ரூபா ஆகுது. மத்தியானம் ஒரு மணிக்கெல்லாம் வீட்டுக்குத் திரும்பிடுவேன். செலவெல்லாம் போக, நாளுக்கு அம்பது ரூபா நிக்கும்" என்று கூறும் பாப்பாத்தியம்மாள், "சும்மா இருந்தா சோறு கிடைக்குமா?" என்கிறார்.

செயற்கை வைரக் கல் பட்டறைத் தொழிலாளியான அன்வர் அலி, தான் மேற்கொண்ட

• அன்வர் அலி



• பாப்பாத்தி



• துரை



தொழிலில் நஷ்டமடைய, உடனடியாய் அவருக்குக் கைகொடுத்து உதவியது இந்தப் புட்டு உற்பத்திதான்.

"என் மனைவியும் நானும் சேர்ந்து இந்த தொழில் செஞ்சுட்டு வர்றோம். பட்டறை பிசினஸ் டல்லான உடனே என் குடும்பத்தை காப்பாத்தினது புட்டுதான். அதை பலபேர் சாதாரணமா நினைக்கிறாங்க. ஆனா இன்னைக்கு எங்க கிராமத்துல பல பேருக்கு சோறு போடுறது அதுதான்" என்றார் அன்வர் அலி.

முப்பது வருடங்களுக்கு முன் இந்தப் புட்டு பிசினஸை புலிவலத்துக்கு அறிமுகப்படுத்தியவராக சிதம்பரம் என்பவரைச் சொல்கிறார்கள். இன்று அவர் ஊரில் இல்லை. ஆனால் அவரது அக்கா ஐம்பது வயதான சின்னம்மாள், கடந்த பதினைந்து ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

புட்டு உற்பத்தி ஒருபுறமிருக்க, இத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களை விற்றும் சம்பாதிக்கின்றனர் சிலர்.

"முன்னாடி எங்க குடும்பமே புட்டு உற்பத்தி செய்து வந்தோம். இப்போ நான் அதை விட்டுட்டு, தொழிலுக்கு மூலப் பொருளான பச்சரிசிக் குருணை, உருண்டை வெல்லம், தேங்காய்ப் பூ எல்லாத்தையும் பிரத்யேகமா கடை போட்டு வித்துட்டு வர்றேன்" என்று கூறும் துரை, "மல்லிக்கு மதுரை, பட்டுக்கு காஞ்சி, பாய்க்கு பத்தமடைன்னு சொல்றது போல, புட்டுக்கு புலிவலம்னு சொல்ற நாள் ரொம்ப தூரத்துல இல்லை" என்றார்.

வறுமை என்று புலம்புவதை விட்டு விட்டு, புட்டு மூலம் புரட்சி படைக்கும் புலிவலம் மக்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நாகரத்தினத்தின் ஆட்கள் இன்சாஃப் அலுவலகத்தின் ஒவ்வொரு இலாகாவிலும் இருந்தார்கள். அவர்களுக்கு அவ்வப்போது கோவையிலிருந்து பேமெண்ட் ஆகும். ஆபீஸ் சூப்பிரண்ட் ஷண்முகம் ஒருமுறை நான்கு பேரைக் கண்டுபிடித்து வேலையிலிருந்து நீக்கினார் (அவர்களுக்கு மறு வேலை ஏற்பாடு பண்ணி பராமரித்து கோர்ட்டில் கேஸ் போட வைத்தார்). ஆபீசில் நடக்கும் அத்தனை விஷயமும் அவருக்குத் தெரியும். நாகரத்தினத்தின் குறிக்கோள், அந்த கம்பெனி சேர்மன் நாற்காலியில் அமர்வது. ராகவேந்தரை 'பதவி நீக்கம் செய்தா அல்லது பதவி விக்கம் செய்தா' எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தார். அதற்காக இன்சாஃப் போர்டில் ஒரு நமச்சிவாயத்தையும் நரேஷ்குமாரையும் பிடித்து வைத்திருந்தார். இருவருக்கும் ராகவேந்தர் மேல் பழைய கோபங்கள் உண்டு. அவற்றை அகழ்வாராய்ச்சி பண்ணி வைத்திருந்தார். நாகரத்தினத்தால் இன்சாஃப்பின் மன்னர் மாற்றத்துக்கான சந்தர்ப்பம் நெருங்கி வருவதை உணர முடிந்தது. ஐடிஏ என்ற துப்பறியும் நிறுவனம் மூலம் அலுவலகத்தில், தன்னையும் உள்ளிட்ட குடும்பத்தவர் அத்தனை பேரையும் வேவு பார்க்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். அண்ணா சாலையில் அதன் அலுவலகத்துக்குப் போய் "இன்சாஃப் சிஎம்டி மாப்பிள்ளை நானு, சமீப காலமா சில பேரைக் கண்காணிக்க ஆபீஸ்ல சொல்லிருக்கு. அந்த விவரங்கள் வேணும். குறிப்பா, மிஸ் மஞ்சரி!"



ஐடிஏ பட்டாபி அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, முகத்தைச் சுருக்கிக் கொண்டு "ஸாரி சார், மிஸ்டர் பரமேஸ்வரன் ஆத்தரைசேஷன் இல்லாம, நாங்க காட்ட மாட்டோம்."

"யோவ், பரமேஸ்வரன் எனக்குக் கீழ் வேலை செய்றவன்யா. நான் யார், எதிர்கால எம்.டி."

"நீங்க யாரா இருந்தாலும் காட்ட முடியாது. அவர் கைப்பட லெட்டர் வேணும்."

"இருடி, உங்களுக்கெல்லாம் வெக்கிறேன் ஆப்பு."

"பார்டன்?"

அவர் கிளம்பும்போது ஓர் இளைஞன் மூக்கில் ப்ளாஸ்திரியுடன் வந்தான்.

"ஸார் என் பேர் அருண். உங்க ஈ மெய்ல் அட்ரஸ் சொல்லுங்க."

"நாகு அட் இன்சாஃப் டாட்காம். அருண், என் டயத்தை வேஸ்ட் பண்ணாத, என்ன மேட்டர் சொல்லு!"

"அழகேசன் என்னை மூக்குல குத்திட்டு சிம்கார்டைப் பிடுங்கிப் போட்டுட்டான் சார். நான் என் கடமையைச் செய்தேன். மெயிலை ஒப்பன்



உள்ளம் துறந்தவன்

பளீர் இளமைத் தொடர்

சுஜாதா

12

பண்ணுங்க, ரிப்போர்ட் பார்க்கலாம்."

"கடமை? பிழைச்சுப்பே, எப்ப சொந்தமா ஏஜென்சி ஆரம்பிக்கப் போறே?"

"உங்களுடைய தயவிருந்தா."

"கவனிச்சுக்கறேன்."

அந்த போட்டோக்களை கம்ப்யூட்டரில் பார்த்தார். அதற்கு ஒரு ப்ரிண்ட் எடுத்துக் கொண்டார். அழகேசனைப் பற்றிய அத்தனை விவரங்களும் அந்த அறிக்கையில் இருந்தன.

'அழகேசன், சுமார் 24 வயது, உயரம் 5'.9", மாநிறம். எந்த வேலையிலும் ஒரு



மாதத்துக்கு மேல் தங்கியதில்லை, drifter. இப்போது வேலையில்லை. க்ரீன் பீஸ் மூவ் மெண்ட், திபிங்கில பாதுகாப்பு, ஆங்கில தியேட்டர், வெய்ட்டர். அரோமா ரெஸ்ட் டாரண்டில் இவன் வெய்ட்டராக இருந்த போது, மிஸ் மஞ்சரியுடன் சினேகம் துவங் கியதாகத் தெரிகிறது. புகை பிடிப்பதில்லை. மற்ற பழக்கம் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை. துவங்கிய சினேகம் சற்று நெருக்க மாக உள்ளது.' பத்துப் பக்கம் இருந்தது ரிப் போர்ட். கையெழுத்து சாம்பிள் கொடுக்கப் பட்டிருந்தது. ரத்த க்ரூப் ஓ பாசிட்டிவ். அவன் ஏதாவது விபத்தில் சிக்கி, 'ப்ரெய்ன் டெட்' ஆனால், தன் அங்கங்கள் அனைத் தையும் தானம் செய்வதற்கான டோனர் கார்டு பிரதி உடன் இணைக்கப்பட்டிருக் கிறது. நெருங்கிய உறவு என்று மஞ்சரியைக் குறிப்பிட்டுள்ளான். கார்டு நம்பர் இருந்தது.

மூளை

''வெண்டைக்காய் சாப் பிட்டா மூளை வளரும்டா கண்ணா... நிறைய சாப்பிடு."

''அம்மா எனக்குத் தரமாட் றாங்கப்பா... அது உங்களுக் காகவாம்!"

– *சீர்காழி வி.ரேவதி*

அமெரிக்கன் லைப்ரரி, ப்ரிட் டிஷ் கவுன்சில், கன்னிமரா லைப்ரரி கார்டுகளும் வைத்திருக் கிறான்.

"சும்மா சொல்லக் கூடாது. கொடுத்த காசுக்கு வேல சுத்தம். ஜாதகத்தையே விரிச்சுட்டானே" என்று தன் மனைவி கல்யாணி யிடம் அந்த போட்டோவைக் காட் டினார்.

"பாத்துக்க. உன் வருங்கால மருமக அழகை. சரவணனுக்கு கட்டி வெக்கலாம்னு கனா கண்டு கிட்டிருந்தியே, இந்தப் பொண்ணு என்ன வேலை செய்திருக்கா பாரு."

கல்யாணி பார்த்தபோது படத்தில் இரு வரும் எதிர் எதிரே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். "இப்ப என்ன செய் றதுங்க?" என்றாள்.

"உங்கம்மாவைக் கூப்பிடு முதல்ல."

மாடி அறைக்கு, மரகதவல்லியைத் தனி யாக அழைத்து வந்தாள். "அத்தை, உங்க கிட்ட ஒரு முக்கியமான தலைபோற விஷயம் சொல்லணும்''. நாகரத்தினம் கதவைச் சாத்தினார்.

"என்ன மாப்பிள்ளை, சரவணன் மறு படி ஃபெயிலா?"

"சரவணனைப் பத்தி இல்லை. உங்க வளர்ப்பு மகளை சமீபத்தில கவனிச்சுட்டு வர்றீங்களா?"

"ஏன்?"

"சரியா கவனிச்சியாம்மா?"

"ரெண்டு பேரும் என்ன அர்த்தத்தில் சொல்றீங்கன்னு தெரியலை, மாப்பிள்ளை."

"அந்தப் பொண்ணுடைய சினேகங்க சரியாவே இல்லை."

"சினேகிதிங்களா?"

"எந்த யுகத்தில இருக்கீங்க அத்தை? அதுக்கு ஊரெல்லாம் பாய் ஃப்ரெண்ட்ஸ், நம்ம அந்தஸ்துக்கு ஏத்தாப்பல இருந்தாலா வது சரி, ஒத்துக்கலாம். ஓட்டல்ல, அதும் நம்ம ஓட்டல்லயே வெள்ளை டிரஸ், வெள்ளை குல்லா போட்டுக்கிட்டு வெய்ட்டர்... இவங்கள்லாம் சினேகம். இவங்ககூட சுத்தினா, குடும்ப மரியாதை என்ன ஆவுறது? எப்பேற்பட்ட ஃபேமிலி! பேப்பர்ல அக்கப்போர் போட்டுட்டாங் கன்னா, கம்பெனி கவுந்துரும் அத்தை."

"என்ன உளர்றீங்க? என்னடி கல்யாணி, நாக்கில நரம்பில்லாம பேசறார்."

"இவர் கொஞ்சம் எசகு பிசகாத்தான் போட்டு உடைச்சுருவார்ம்மா. ஆனா சொல்றது சரியாத்தான் இருக்கும். எங்கிட்ட சொன்னாரு, நான் நம்பலை. போட்டோ காட்டினப்பறம்தான்..."

"போட்டோவா?"

"காட்டுங்க."

அப்போது மஞ்சரி அசந்தர்ப்பமாக உள்ளே வர, சட்டென்று பேசுவதை நிறுத்தி விட்டாள்.

''என்னைப் பத்தித்தான் பேச்சா? பட்டுன்னு நிறுத்திட்டீங்களே... பேசுங்க மாமா."

"இல்லை மஞ்சு கண்ணு, மாப்பிள்ளை



சொல்றது சரியான்னு தெரிஞ்சுக்கணும்."

"என்ன சொன்னாரு?"

"நீ ஏதோ..."

மஞ்சரி குறுக்கிட்டு,

"அவன் பேரு அழகேசன். நம்ம அரோமா காபி கிளப்ல வெய்ட்டரா இருந்தான். ரெண்டாயிரம் ரூபா சம்பளத்தில. எங்க, போட்டோ காமிங்க. ஐ, நல்லா விழுந்திருக்கேனே, சூப்பர். என்னா டெக்னாலஜி! அம்மா, இவன்தாம்மா என் ஃப்ரண்டு அழகேசன்."

"மஞ்சு, யார் இந்த ராஸ்கல்?"

"நான் கல்யாணம் பண்ணிக்கப் போற ராஸ்கல்" என்று சொல்லிவிட்டுப் படியிறங்கிச் சென்றாள்.

"விளையாட்டுக்குச் சொல்றா அவ. அமெரிக்கா போகப் போறா, அப்படித்தானே கல்யாணி?"

நாகரத்தினம் "இல்லைம்மா, இந்தப் பொண்ணு அமெரிக்கா போவாது. இங்கேயே ஊர் மேயற கேஸ்."

"கல்யாணி, உங்கப்பாவைக் கூப்பிடு" மரகதவல்லி தன் டெலிபோனை எடுத்து அதில் எண்களை ஒத்த, நாகரத்தினம் "வேண்டாம், இந்தச் சமயத்தில் அவருக்குச் சொல்ல வேண்டாம். அவருக்கு ஏதாவது ஆயிருச்சன்னா ஸ்டாக் விழுந்துரும். நம்ம குடும்பத்து சொத்தின் மதிப்போ, பாதாளத்துக்கு சரிஞ்சுரும். அத்தை, கேளுங்க. நம்ம சொத்தெல்லாம் வெறும் காகிதம் ஸ்டாக்குங்க. டி மேட்ல ஒரு நம்பர். அதுக்கு இன்னைய தேதிக்கு மதிப்பு, ஒரு ஷேர் எட்டாயிரம்கிட்ட ஓடிக்கிட்டிருக்கு. இதை ஒவ்வொண்ணா வித்தா, எட்டாயிரம் கிடைக்கும். எல்லாத்தையும் வித்தா, எறங்கிரும். கம்பெனியுடைய ஒவ்வொரு குவார்ட்டர் ரிசல்ட்டைப் பொறுத்து மழை பேஞ்சா ஏறும், தண்ணி வந்தா ஏறும். உங்க வீட்டுக்காரரை ஆஸ்பத்திரில அட்மிட் பண்ணா எறங்கும். பைத்தியக்காரத்தனமா இப்ப இது ஏறிக்கிட்டே போவுது. பெரியவருக்கு உடம்பு சரியில்லைன்னா, அது ஸ்டாக் மார்க்கெட்டில உடனே பிரதிபலிக்கும். ஸ்டாக் சரியறப்ப, கிடைச்ச வரைக்கும் லாபம்னு மக்கள் வித்து மளமளன்னு சரிஞ்சுரும்."

"முதல்ல என்ன விலை?"

"பத்து ரூபா இருந்தது. இன்னைக்கு எட்டாயிரம்."

"இது ஒரு பெரிய விளையாட்டு. விக்கல் வாங்கல் விளையாட்டு. நம்ம குடும்பத்தில் நடக்கற சின்னச் சின்ன விஷயங்கள் எல்லாம் இதன் மதிப்பைப் பாதிக்கும். மஞ்சரி பேர்ல நிறைய ஷேர் இருக்குது. அவ தறிகெட்டு அலைஞ்சா, அதை வித்தா கன்னா பின்னான்னு விலை சரியும்."

"என்ன செய்யணும்."

"நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். நான் காதும் காதுமா முடிச்சுர்றேன். பெரியவர்க்குத் தகவல் போக வேண்டாம். கல்யாணி, சரவணனுக்கு போன் போட்டு உடனே வரச் சொல்லு."

வீட்டோட ஒரு நிச்சயதார்த்தம் செய்துடலாம். குடும்பத்தை விட்டு சொத்து போகக் கூடாது. என்ன புரியுதா?"

"ஒரே குழப்பமா இருக்குது மாப்பிள்ளை, அவர்கிட்ட ஒரு வார்த்தை கேக்காம செய்தா சத்தம் போடுவாரு."

"சொல்லப் போறோம். அதுக்கு வேளை காலம் உண்டு. சொல்ற விதத்தில சொல்லலாம். பாருங்க அத்தை, இந்த மேட்டரை நான் தீர்த்து வைக்கிறேன் சுமுகமா, யாருக்கும் விரோதமில்லாம தீர்த்து வைக்கிறேன். சரவணனை முதல்ல வரவழைக்கிறேன்"

"மஞ்சரிகிட்ட பேசிப் பார்க்கட்டுமா?"

நாகரத்தினம் குரலை உயர்த்தினார். "நான்தான் பாத்துக்கறேன்னு சொல்றேனில்லை!"

"எதுக்கும் கல்யாணி, உங்கப்பாகிட்ட சொல்லிட்டுத்தான் செய்யணும்."

"அத்தை, இது அவர்ட்ட சொல்லி, அவர் இருதயம் இருக்கற நிலையில..."



நீயா நானா?

உலகில் அதிக அளவில் விளம்பரம் செய்வது கோகோ - கோலா நிறுவனமா, இல்லை பெப்சி நிறுவனமா என்ற போட்டி இமயமலை வரை வந்து விட்டது. உலக சுற்றுலாப் பயணிகள் ஆயிரக்கணக்கில் வந்து போகும் இமயமலைப் பாதையில் இரு நிறுவனங்களும் படத்தில் காணப்படுவது போன்ற விளம்பரங்களை மலையில் எழுதியுள்ளனர். அரசின் அனுமதி இல்லாமலேயே இந்த விளம்பரங்கள் பாறைகளில் எழுதப்பட்டிருப்பதால், குற்றமாக கருதப்பட்டு இந்த நிறுவனங்களுக்கு எச்சரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

- பாரீஸ் பார்த்தசாரதி

"என்ன சொல்றீங்க நீங்க?"

"அவர் லண்டன் போய்ட்டு உடனே திரும்பி வந்த காரணம், அங்க முன்னைபோல ஒரு அட்டாக் வந்திருக்கு. பாலா உடனே புறப்பட்டு வரார். இது எனக்குக்கூட தெரியாது. ஆபீஸ்ல கமுக்கமா வச்சிருக்காங்க. ஐயருக்கு மட்டும்தான் விஷயம் தெரியும்..."

டாக்டர் பாலாவுக்கு லுஃப்தான்சா, பிரிட்டிஷ் ஏர்வேஸ் எதிலும் நேரடியாக சென்னைக்கு டிக்கெட் கிடைக்காததால், மும்பையில் பிற்பகல் இறங்கி, அடுத்த ஜெட் ஏர்வேஸ் ஃப்ளைட் பிடித்து, ஏழரை மணிக்கு சென்னைக்கு வந்து சேர்ந்தார். மினர்வா ஆஸ்பத்திரிக்கு போன் போட்டார்.

அங்கே மாமனார் இல்லை என்றார்கள், வியப்படைந்தார். பாலாவுடன் அவரது மகன் விஜியும் வந்திருந்தான். உயரமான, வசீகரமான தோற்றமுள்ள வாலிபன். அவன் நியூயார்க் வால் ஸ்ட்ரீட்டில் ஒரு புரோக்கர் கம்பெனியில் இளம் எக்ஸிக்யூட்டிவ்வாக இருந்தான். அவன் டாக்டருக்குப் படிக்கவில்லையே என்று பாலாவுக்கு மிகுந்த ஆதங்கம். பையன் ஏதாவது படித்து பாஸ் பண்ணி வெளியே வந்தானே என்று புவனாவுக்குச் சந்தோஷம். ஒரு கட்டத்தில் ஒரு போர்ட்டோரிக்கன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளத் துடித்தான். பதற்றமாகி விட்டது. என்ன நடந்ததோ தெரியவில்லை, அந்தப் பெண் அவனை விட்டுப் போயிருக்க வேண்டும். சமர்த்தாகி, கிரே சூட், டை அணிந்து அப்ரெண்டிஸாக ஆபீஸ் போக ஆரம்பித்தான். "டாட்! தாத்தா சொத்து என்ன மதிப்பு இருக்கும்? இந்தியாவிலேயே இரண்டாவது பணக்காரராமே" - ஃப்ளைட்டிலேயே கேட்டான்.

"விஜே, இதையெல்லாம் கேட்க இது சமயமல்ல. He is heading for a congestibe heart failure"

"மஞ்சரிக்கு எத்தனை வயசிருக்கும்?"

"சென்னைக்குப் போனபின் விசாரிக்கலாம்."

விஜேயைப் பார்த்து பாலாவுக்குக் கவலையாக இருந்தது. ஹோஸ்டஸுடன் கண்ணடித்துப் பேசினான். அந்தப் பெண் புன்னகையால் சமாளித்தாள். "விஜே, திஸ் இஸ் நாட் அமெரிக்கா. உன்னை எதற்காக அழைத்து வந்தேன் என்று சங்கடமாக இருக்கிறது."

புவனாதான் இருவரும் பழகட்டும் என்று அனுப்பினாள். ராகவேந்தருக்கு விஜியைப் பிடிக்கும். புவனாவுக்கு மஞ்சரியை ரொம்பப் பிடிக்கும். எப்படியாவது அவனை மருமகனாகப் பெற ஓர் ஆசை இருந்தது.

"டாட், கவலைப்படாதீங்க. நான் இந்தியாவில் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வேன்."

(தொடரும்)



தெம்புக்குப் படிங்க 21

கடவுள் கவனிப்பாரா?

தென்கச்சி சுவாமிநாதன்

ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நம்ம பொண்ணுக்கு வயசாயிட்டே போறது... காலா காலத்துலே ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்க வேண்டாமா?''

''அவசரப்படாதே... கொஞ்சம் பொறுமையா இரு... நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்... ஒருத்தனும் சரியா இல்லே... கண்ணுக்கு லட்சணமா... கய்மா சம்பாதிக்கிறவனா ஒரு பையன் கிடைக்க வேணாமா...?''

''எங்க அப்பா இப்படியெல்லாம் பார்த்திருந்தா எனக்குக் கல்யாணமே ஆகியிருக்காது...!''

கணவர் 'கப்சிப்' ஆகிறார். இந்த நேரத்தில் மகள் உள்ளே வருகிறாள். அவள் பின்னாடியே ஓர் இளைஞன்.

''அப்பா!''

''என்னம்மா... யார் இந்தப் பையன்?''

''இவர்தாம்ப்பா... அவர்!''

''அவர்...ன்னா?''

''அதுதான் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே... அவர்தான் இவர்... இவரைத்தான் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்...!''

''அப்படியா... வாப்பா... உட்கார்!''

உட்கார்ந்தான்.

''உன்கிட்டே சில கேள்விகள்... இப்போ நீ என்ன செஞ்சிக்கிட்டிருக்கே?''

''கடவுளைப் பத்தி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கேன்!''

''சரி... அப்படின்னா உன் எதிர்காலம் பற்றி என்ன திட்டம் போட்டு வச்சிருக்கே...?''

''கடவுள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார்!''

''சரி... உனக்குக் கல்யாணம் ஆகி ஒரு குழந்தை பிறக்குது... அப்புறம் என்ன பண்ணுவே?''

''அதையும் கடவுள் கவனிச்சுக்குவார்!''

''சரி... போயிட்டு வா!''

அவன் நம்பிக்கையோடு புறப்பட்டுப் போனான். அவன் போன பிறகு அம்மா கேட்டாள்.

''பையன் எப்படி?''

அப்பா சொன்னார்...

''இவனிடம் பணமுமில்லை. வேலையுமில்லை. ஆனால் என்னைக் கடவுளாக நினைத்துக் கொண்டிருக்கிறான்!''

இளைஞர்களே!

இந்த நிலை உங்களுக்கு வேண்டாம். முதலில் காலை ஊன்றுங்கள். அதன் பிறகு காதல் என்கிற விதையை ஊன்றுங்கள். அதுதான் உங்களுக்குப் பெருமை!

அன்புள்ள ஆனந்திக்கு...



• திருமதி ஆனந்தி...

அமரர் கல்கியின் புதல்வி திருமதி ஆனந்தி அவர்கள், கடந்த 16ஆம் தேதியன்று இயற்கை எய்தினார்.

அப்பாவின் அநேக ஆசீர்வாதம்.

இனிமேல் உன்னை விட்டுவிட்டு நான் எப்போது வெளியூருக்குப் போனாலும் உனக்குக் கடிதம் எழுதுவதென்று தீர்மானித்திருக்கின்றேன். நான் எழுதும் கடிதங்களை நீ கிழித்து விடாமல் ஜாக்கிரதையாய் வைத்திருக்க வேண்டும். உனக்கு வயதான பிறகு மறுபடி வாசித்துப் பார்த்தால் ஸ்வாரஸ்யமாயிருக்குமல்லவா?

ரயில்வே ஸ்டேஷனில் நான் உன்னை விட்டுப் பிரிந்த பிறகு, ரயிலில் ஏறிப் படுத்துக் கொண்டேன். நீ என்ன செய்து கொண்டிருக்கிறாயோ, தூங்கிப் போய்விட்டாயோ இல்லையோ என்று யோசித்துக்கொண்டே, நான் தூங்கிப் போய்விட்டேன்.

காலையில் போதனூர் ஸ்டேஷன் வந்த பிறகுதான் விழித்துக் கொண்டேன். மேட்டுப்பாளையத்திலிருந்து மலை மேல் போவதற்கென்று சின்ன ரயில் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

ரயில் மலை மேல் ஏற ஆரம்பித்தது. இரண்டு பக்கமும் நிறைய வளர்ந்திருந்த காட்டுச் செடிகளில் சின்னச் சின்ன பூக்கள் ஏராளமாய்ப் புஷ்பித்திருந்தன. ஒரு பூ, காதில் உன்னுடைய அம்மா போட்டுக் கொள்ளும் தோட்டைப் போல் இருந்தது. சில பூக்கள் இரத்தினம் போல் சிவப்பாயும், இன்



னும் சில ஊதா நிறமாயும் இருந் தன.

அப்புறம் பலா மரங்கள். கிளை களில் கொத்துக் கொத்தாய்ப் பலாப் பழங்களாகத் தொங்கின. அவைகளைப் பார்த்தால் நீ ரொம்ப ஆச்சரியப் பட்டிருப்பாய்.

ஓர் இடத்தில் 'கிறீச்' என்ற சத்தம் கேட்டது. அங்கே என்னவென்று பார்த் தேன். காட்டுச் செடிகளுக்கு மத்தியில் ஒரு குரங்கு இருந்தது. அது என்னைப் பார்த்து, "என் சிநேகிதி ஆனந்தியை ஏன் அழைத்துக் கொண்டு வர வில்லை?" என்று கேட்டது. "ஆனந்தி சின்னக் குழந்தைதானே? அவளுக்கு ஊட்டியின் குளிர் இந்த வருஷம் பொறுக்காது. அடுத்த வருஷம் பெரிய வளாய்ப் போய் விடுவாள். அப்போது முடிந்தால் அழைத்து வருகிறேன்" என்று சொன்னேன். குரங்கு "சரிதான்; அடுத்த வருஷமாவது கட்டாயம் அழைத்து வா" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

மற்ற விஷயங்கள் இன்னொரு கடிதத் தில் எழுதுகிறேன். நீ சமர்த்தாய் இருக் கிறேன் என்று சொன்னாயே... அந்தப் படி இருக்கிறாயா? அம்மாவை அதிக மாய்ப் படுத்தாமல் இருக்கிறாயா? ஏதாவது உனக்குப் பிடிக்காவிட்டால் "சீ!" என்று அழுத்தந்திருத்தமாய்ச் சொல்வதை விட்டு விட்டாயா?

நீ சமர்த்தாயிருப்பதற்கு அடையா ளம் என்னவென்றால், காலையில் எழுந்ததும் நீயே அம்மாவிடம் போய், "அம்மா! வா! பல் தேய்த்து விடு" என்று சொல்ல வேண்டும், தெரியுமா? அப் புறம், ராஜம், சுந்ராம்பாள், பேபி, கமலி- இவர்களுடன் சண்டை பிடிக்காமல் விளையாட வேண்டும். வெயிலில் போகக் கூடாது. அம்மா பட்சணம் கொடுத்தால் வாங்கிக் கொள்ள வேண்டும். வெறுமனே 'அப்பிச்சி, அப்பிச்சி' என்று கேட்கக் கூடாது.

உன் அம்மா கொடுத்த ஊறுகாயும் பட்சணமும் நன்றாயிருந்ததென்று சொல்லு.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள அப்பா
ரா. கிருஷ்ணமூர்த்தி



* இளம் வயதில்...

அமரர் கல்கி

(கல்கி கடிதங்களிலிருந்து...
வானதி பதிப்பகம்)

சிறுகதை

ஒரு

கடந்த சில நாட்களாக என் ஆண்மைக்குச் சவால் விட்டு வரும் பெருச்சாளிக்காக காத்திருந்தேன். நான் உடற் பயிற்சிக்குப் பயன்படுத்தும் கர்லாக் கட்டையும் தயார். வந்தால் ஒரே போடு!

நாங்கள் புதிதாய் குடியேறிய முதல் தளத்தின் நுழைவு வாசலுக்கருகில்தான் எப்போதும் பிளாஸ்டிக் குப்பைக் கூடை இருக்கும். ஒரு நாளுக்குரிய குப்பைகளை அதில்தான் கொட்ட வேண்டும்.

எங்கள் வீட்டு இங்கிதமற்ற குப்பையில் அந்த எலி ஏதோ 'இங்கிதங்களை' மட்டும் புசித்துவிட்டுச் சிந்தாமல் சிதறாமல் சென்றிருந்தால் மன்னித்திருக்கலாம். குப்பைகளை படிகள் பூராவும் சிதற அடிக்கும். கூடவே துர்நாற்றம் வீசும் புழுக்கைகள்.

இப்படியே விடக்கூடாதென்று எண்ணி, மார்க்கெட்டில் இருபத்தெட்டு ரூபாய்க்கு பேரம் பேசி வாங்கின எலிப் பொறி மூலம் அதற்கு சமாதி கட்ட நினைத்தேன்.

தேங்காய்த் துண்டு ஒன்றை, சிறிய இடுக்கியில் கவ்வி எரியும் மெழுகு வர்த்தியில் வாட்டினேன். அருமையான தீய்த்தல் வாசம்.

பதமான 'எலித்தின் பண்டம்' தயார்! 'பொறியில்' மாட்டி குப்பைக் கூடையின் அருகில் வைத்துவிட்டு, படுக்கப் போனேன்.

படுக்கையில் விழுந்தவன், எலியைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தேன். மனைவி சுமதியும் மகளும் ஆழ்ந்த உறக்கத்தில்.

'சடார்' என்று பின் மண்டையில் பொறி மாட்டுகையில் எலி முதலில் அதிர்ச்சியடையும். என்ன நடக்கிறது என்பது, அரை மயக்கத்தில் மெல்ல



எலியின் கதை!

புதுவையிலிருந்து ரா.ரஜனி



மெல்லப் புரியும். கண்கள் பாதி செருகிக் கொள்ளும். கடித்த தேங்காயை ருசிக்க இயலாது. "க்வீச்!" என்று விநோத ஒலியெழுப்பி, உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாய் பயத்திலேயே விட்டுவிடும். பெருச்சாளிக்கும் குடும்பம் என்ற ஒன்று இருக்குமா தெரியவில்லை. மனைவி, மக்கள், மச்சான் என்று உறவுகள் இருக்குமா புரியவில்லை!

கண்களை இறுக மூடிக் கொண்டாலும் தூக்கம் வர மறுத்தது. ஜன்னல் வழியே குளிர்காற்று வீசிக் கொண்டிருக்க, ஒரு கட்டத்தில் என்னையுமறியாமல் உறக்கத்தில் விழுந்தேன்.

சைக்கிள் டியூப் வெடித்த மாதிரி ஒரு சத்தம் கேட்க, திடுக்கிட்டு எழுந்தேன். என்னைத் தொடர்ந்து அவளும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள். விஷயம் புரிந்து கதவைத் திறந்தோம். விளக்கு எரிந்து கொண்டிருக்க...

எங்களைப் பார்த்ததும் அந்தப் பெரிய பெருச்சாளி தடால்... புடால்... என்று ஓட எத்தனித்தது. ரப்பரில் செய்த மாதிரியிருந்த வால்நுனி மட்டும் பொறியில் மாட்டியிருக்க, படிக்கட்டில் தடதடவென்று இறங்கி ஓட ஆரம்பித்தது. பெரிய மூட்டை உருள்வது போலத்தான் இருந்தது. எடை போட்டால் நாலைந்து கிலோ தேறும்.

"ஐயோ... ஐயோ... பொறியையும் இழுத்துக்கிட்டு ஓடுதுங்க...!" என்று சுமதி கத்தியதும்தான் தெரிந்தது.

"தே...சூ...சூ...!" என்று அதட்டிப் பார்த்தேன். அது நிற்காமல் தெருவில் இறங்கி திரும்பி ஓடிவிட்டது.

"என்ன தே...ச்சூ? ஓடிப்போய் பொறியைப் புடிச்சு இழுங்க...!"

எனக்கு பயமாய் இருந்தது உண்மை. அதைவிட, ஒரு எலியின் பின்னால் ஓடுவது என்பது சகிக்கக்கூடிய விஷயமாக இல்லை.

"அது இன்னேரம் மெயின் ரோட்டைக் கடந்திருக்கும்..." என்றேன்.

அவள் வேறொன்றும் சொல்லாமல், குப்பைக் கூடை தலைகீழாகக் கிடப்பதைப் பார்த்தாள். சிறு குப்பைமேடு போன்று காட்சியளித்தது. எலி தனது கடமையையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்துவிட்டிருக்கிறது. பின்புற வால் பொறியில் தவறுதலாகப் பட்டு மாட்டியிருக்கிறது.

"தேங்காயை அது கவனிக்கலை போலிருக்கு. கவனிச்சிருந்தா மூஞ்சியில அடி வாங்கியிருக்கும்...?"

"உங்களை யாரு கூடைகிட்டே வைக்கச் சொன்னா? மாடிப்படிக்கு நேரா வைச்சிருக்கலாம்ல...?" சுமதியின் குரலில் தோல்வியின் ஆத்திரம்.

அடுத்த நாள் எலி வரவில்லை. குப்பைக் கூடை அப்படியே மெருகு குலையாமல் இருந்தது. முந்தைய தின அதிர்ச்சி வைத்தியத்தால் வரவில்லை என்று சந்தோஷப்பட்டோம். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை.

மறுநாள் கதவைத் திறந்து பார்த்த போது அதே எலிப் புழுக்கை, வாடை,



குப்பைச் சிதறல்! எனக்கு அடி வயிற்றில் கோபம் சுரந்தது.

"எலி மருந்து பாக்கெட் ஒண்ணு வாங்கிட்டு வர்றேன். காரக் குழம்பிலே கலந்து வை சுமதி..."

மருந்துக் கடையில் 'எலிக்குத் தானே?' என்று மூன்று முறை விசாரணை செய்துவிட்டு பொட்டலம் கட்டிக் கொடுத்தான்.

இரண்டு கைப்பிடி சோற்றை ஒரு அலுமினியக் கிண்ணத்தில் போட்டு, குழம்பையும் எலி மருந்தையும் சரிவிகிதத்தில் கொட்டி பழைய டூத் பிரஷ்ஷால் கலந்து, எலிக்கான 'லாஸ்ட் சப்பர்' தயார் செய்தேன். படிக்கட்டின் அருகே வைத்துவிட்டு அதிக எதிர்பார்ப்போடு உறங்கினோம்.

விடிந்ததும் பார்க்க, எங்கள் அற்ப எதிர்பார்ப்புகள் தூள் தூளாய் ஆகியிருந்தன.



தன் வருகையை நிரூபித்துவிட்டு, சோற்றை முழுவதுமாய் கவிழ்த்துவிட்டு, பிளாஸ்டிக் குப்பைக் கூடையை மேல் பாகத்தில் பதம்பார்த்து விட்டுச் சென்றிருந்தது பெருச்சாளி.

நானே குப்பைகளைச் சுத்தம் செய்து, இரண்டு வாளி தண்ணீர் அடித்து, டெட்டால் தெளித்துக் கழுவினேன்.

"முனிசிபாலிடிகாரன் பக்கத்திலே உடனுக்குடன் போடுவது மாதிரி குப்பைத் தொட்டி வைத்திருக்கிறானா? சாலையை அழகுபடுத்துறோம்னு எல்லாத் தொட்டியையும் எடுத்துட்டுப் போய்ட்டா, குப்பைகளை எங்கேதான் அவசரத்துக்கு கொட்டுறது?" - புலம்பின சுமதி, அடுத்த ஐடியாவையும் உடனே எடுத்து விட்டாள்.

"டி.வியில ஏதோ எலி பிஸ்கெட் விளம்பரம் போடறான். முயற்சி செஞ்சு பார்க்கலாங்க...!"

"வெளியே போய் சாகும்னு சொல்றியா...?"

"சொன்னதைச் செய்ங்க..."

ஒன்றும் நடக்கவில்லை. பிஸ்கெட்டைக் கிறியிருந்தது. குப்பைக் கூடையை பாதுகாப்பாக மணைக் கட்டையால் மூடி, செங்கல் வைத்தும் பார்த்தாயிற்று. ஒன்று புரிந்துவிட்டது. பெருச்சாளி தனது பசியைப் போக்கிக் கொண்டு இறுதியாக வருகிறது. வயிற்றைச் சுத்தம் செய்து கொண்டு ஓடிவிடுகிறது.

"பூனை வேணும்னா வளர்த்துப் பார்க்கலாமா சுமதி?"

"அதோட அசிங்கத்தையும் நான் அள்ளிக் கொட்டணுமா?"

அலுவலகத்தில் மூத்த மேலாளர் என் பிரச்னையைக் கேட்டு ஒரு உபாயம் சொன்னார்....

"இதுக்காக நீங்க ரொம்ப கவலைப் படறீங்கன்னு தெரியறது. என்கிட்டே அமெரிக்காலேர்ந்து என் மருமகன் அனுப்பின ஒரு எலி புடிக்கிற பேட் இருக்கு... முயற்சி செஞ்சு பாருங்க...!"

"எப்படி சார் மாட்டும்...?"

"உயர்ரக பசையுள்ள அட்டை அது. அதை எலி வழக்கமா வர்ற இடத்துலே வச்சுட வேண்டியதுதான். எலி அதுல ஏறி நின்னாப் போதும், நாலு காலும் ஒட்டிக்கும். கடிச்சு தப்பிக்கலாம்னு வாயை வைக்கும். வாயும் ஒட்டிக்கும். மீசையும் ஒட்டிக்கும். அதுக்கு அதிர்ச்சியிலேயே பாதி உயிர் போயிடும். கொஞ்சம் கொஞ்சமா மூக்குல ரத்தம் வந்து நின்னவாக்கிலேயே செத்துடும்...!"



"ரொம்பக் கொடூரமாயிருக்கே, சார்!"

"எலிக்கும் புலிக்கும் பாவம் பார்க்கக் கூடாது. பத்து டாலர் விலை. உங்களுக்கு நான் சும்மாவே தர்றேன். வேண்டாம்னா விட்ருங்க...!"

"ஐய்யோ... கொடுங்க சார். அதையும் முயற்சி செஞ்சு பார்த்துடறேன்...!"

இரவு. எலி அட்டையைப் பிசுபிசுவெனப் பிரித்தேன். அமெரிக்க இறக்குமதி என்பதால் சுமதியும் மகளும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அட்டையை வெளியே வைத்துவிட்டு விளக்கை அணைத்தேன்.

எதிர்பார்ப்போடு விடியலில் கதவைத் திறந்தால், அட்டை அப்படியே இருந்தது. ஆனால், சில பூச்சிகளும், ஒரு சிறு பல்லியும் ஒட்டிக்கொண்டு உயிரை விட்டிருந்தன. பெருச்சாளிக்கு ஒன்றும் ஆகவில்லை. அது தனது கைவரிசையைக் காட்டி விட்டுச் சென்றிருந்தது.

"ஒரு வேளை அட்டை சின்ன எலிகளுக்குத்தான் தோதுப்படும் போலிருக்கு...!" என்று நான் சமாதானம் சொல்ல,

"இல்லை, இல்லை. அமெரிக்க எலிகள்தான் மாட்டும்னு சொல்லுங்க...!" என்றாள் சுமதி ஏளனமாய்.

கடைசி முயற்சியாக ஒரு நாள் பூராவும் யோசித்து, இறுதியாய் ஒரு முடிவு எடுத்தேன். அதை நிறைவேற்றத்தான் இதோ இந்த கர்லாக் கட்டையோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். தூக்கம் போகிறது. பரவாயில்லை, எலி வந்தால் ஒரே போடு!

மணி இரண்டானது, மூன்றானது, நான்கானது.... ம்ஹூ"ம்... எலி வரவேயில்லை.

விடிந்தும் விட்டது. கொட்டாவியோடு எழுந்து வந்த சுமதி, என்னைப் பார்த்து பரிதாபமாகச் சிரித்தாள்.

"ராத்திரியெல்லாம் கண்ணு முழிச்சேன். எலி வரல. இனிமே வராதுன்னுதான் நினைக்கிறேன். என் கர்லாக் கட்டையப் பார்த்து பயந்துருக்கும்."

"நீங்க பெரிய வீரன்தான்" என்று சுமதி எனக்கு திருஷ்டி கழித்தாள்.

மகளை கூட்டிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்புகையில், கீழ் வீட்டுக்காரப் பெண்மணி கேட்டாள்... "என்ன சுமதி, இன்னிக்கு உங்க வீட்டுக்கு எலி வந்திருக்காதே?"

சுமதி ஆச்சர்யமாய்,

"அட, எப்படி மாமி கரெக்டா சொல்றீங்க? உங்க வீட்டுக்கு வந்துடுச்சா?"

"அதுக்கில்ல சுமதி, காலையில பால் வாங்கப் போனபோது ரோட்டு முனையில லாரியோ, பஸ்ஸோ அடிச்சு ஒரு பெரிய பெருச்சாளி சொதசொதன்னு கிடந்துச்சு. ஒரே ரத்தம். நான் நினைக்கிறேன், அது உங்க வீட்டு எலியாகத்தான் இருக்கும்!"

"ஒழிஞ்சது போங்க... எங்களைப் படுத்தின பாட்டுக்குத்தான் அந்தக் கதி கிடைச்சிருக்கு..." என்றாள் சுமதி. தொடர்ந்து அவள் சந்தோஷமாக பேசிக் கொண்டே போக, ஏனோ என்னால் எலி இறந்ததை ஜீரணிக்க முடியவில்லை. வருத்தத்துடன் அலுவலகம் கிளம்பினேன்.

நான் பூராவும் ரத்தப் பஞ்சாக ஆகிப் போன எலி ஞாபகமாகவே இருந்தது.

சாயந்திரம் வரும்போது பார்க்க, சாலையில் கருஞ்சிவப்புக் கறைதான் இருந்தது. எலியை காக்கைகள் அப்புறப் படுத்தியிருக்க வேண்டும்!

பாவம், அந்த எலி இன்னும் கொஞ்ச நாள் வாழ்ந்திருக்கலாம்! ○

ரஜினியின் அடுத்த படம்!



• 'சந்திரமுகி'யில்...

● 'காதல்' சந்தியாவை தமிழில் யாரும் சீண்டாதிருக்க, மலையாளத் திரையுலகம் கொத்திக்கொண்டு விட்டது. கேரளவாசியாகிவிடலாமா என்று தீவிரமாக யோசித்து வருகிறார்.

● தனது காட் ஃபாதரான செல்வ ராகவன், புதிய படமான 'புதுப் பேட்டை'யில் தன்னை கதாநாயகியாக் காமல், வேறொரு நடிகையை போட்டதில் மிகுந்த வருத்தத்திலிருக்கிறார் சோனியா அகர்வால். ஆனால், அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சகஜமாகப் பழகி வருகிறார்.

● மிகவும் பிடிவாதமாக இருந்த எஸ்.ஜே. சூர்யா, தனது 'பெஸ்ட் ஃப்ரெண்ட்' படத்துக்கு தமிழில் பெயர் வைக்க ஒப்புக்கொண்டதோடு இல்லாமல், புதுப் பெயரை கேஸட் ரிலீஸ் விழாவில் டாக்டர் ராமதாஸ் மூலம் சூட்டவும் முடிவெடுத்துள்ளார்.

● 'சந்திரமுகி' முடிந்து விட்டது. 'ரஜினி அடுத்து யாருக்கு படம் பண்ணப் போகிறார்' என்பதுதான் கோலிவுட்டின் லேட்டஸ்ட் டாக். 'ஜக்குபாய்' பண்ண ரவிக்குமார் ஒருபுறம் காத்திருக்க, ரஜினியை வைத்து படமெடுக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள் எடிட்டர் மோகனும், ஆர்.எம். வீரப்பனும்.

● தாவூத் பிரச்னையில் அடிபட்டதிலிருந்து மனம் நொந்து போயுள்ளார் நடிகை மும்தாஜ். ஃபீல்டை விட்டு ஒதுங்கி, குடும்ப வாழ்க்கையில் செட்டிலாகி விடலாமா என்று தமக்கு நெருக்கமான

• சோனியா அகர்வால்



• மீரா ஜாஸ்மின்







• சந்தியா



• கரீனா கபூர்

வர்களிடம் ஆலோசனை கேட்டு வருகிறார்.

● நடிகை மீரா ஜாஸ்மினுக்கு அவர் விரும்பியவருடனேயே திருமணம் நடைபெறப் போகிறது. நடத்தி வைக்கப் போவது மீராவின் தந்தை ஸ்தானத்திலிருக்கும் மலையாள இயக்குநர் லோகிதாதாஸ்.

● தமிழில் நடிகர்கள் அடித்துக் கொள்வது போல், பாலிவுட்டில் நடிகைகள் அடித்துக் கொள்வது சகஜமான ஒன்று. "ஸ்டார் நைட் ப்ரோக்ராம்களுக்கு என்னை அழைப்பதைத் தடுத்து சதி செய்கின்றனர் கரீனா, கரீஷ்மா சகோதரிகள்" என்று அமீஷா கூறியிருப்பதுதான் அங்கே ஹாட்டஸ்ட் டாபிக்.

● 'பார்த்தாலே பரவசம்' படத்திற்குப் பிறகு திரையுலகை விட்டு ஒதுங்கியிருந்த கே.பாலசந்தர், மீண்டும் தனது பரிவாரங்களோடு புதுமுகங்களை வைத்து படமொன்றை இயக்கவுள்ளார். படத்தின் பெயர், பொய்!

• பப்பி



மாரத்தான் மங்கைகள்!

நாகரிகம் பொங்கும் சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரி பெண்களிடையே தனித்துத் தெரிகிறார்கள், சகோதரிகளான பாப்பாத்தியம்மாளும் செபஸ்டியம்மாளும். புதுக்கோட்டை கிராமமான கடம்பப்பட்டி வாசிகளான இவர்கள், விளையாட்டில் சாதிப்பதற்காக சென்னையில் செட்டிலாகியிருப்பவர்கள்.

"எங்க அப்பா ரைஸ்மில்லுல வேலை பார்க்கறாங்க. அம்மாவுக்கு விவசாயம். எங்க வீட்ல ஐந்து பொம்பளப் பிள்ளைங்க, ஒரு பையன். வசதியில்லாததால நாங்களும் பத்தாவது முடிச்சு களை எடுக்கப் போயிடுவோம்னுதான் நினைச்சோமே தவிர, சத்தியமா காலேஜ் எல்லாம் எங்க கண்ணுல கூடப் பார்ப்போமுன்னு கனவிலயும் நினைக்கலைங்க."- பேசும்போதே கண்கள் பனிக்கிறது மாரத்தான் சாம்பியனான பாப்பாத்தியம்மாளுக்கு.

பள்ளி நாட்களில் விளையாட்டில் வாங்கிக் குவித்த மெடல்கள் இவர்கள் திறமையைப் பறைசாற்ற, ப்ரைம் ஸ்போர்ட்ஸ் குழு சென்னைக்கு இவர்களை வரவழைத்து எம்.ஓ.பி கல்லூரியில் சேர்த்துவிட்டு, இலவசக் கல்வியையும், இதர வசதிகளையும் செய்து தந்திருக்கிறது.

"எங்க ஊர்ல எந்தக் கேணியிலும் குளிப்போம், எல்லாத் தண்ணியும் குடிப்போம். ஆனா இங்கே தண்ணிக்குக் காக கொடுத்து கேன் வாங்க வேண்டியிருக்கு. போன வாரம், மாரத்தான் மீட்டுக்குப் போனப்போ காபியில ஐஸ்க்ரீம் கலந்து கொடுத்தாங்க. ம்... காபின்னா சூடா குடிக்கிற காலம் போய், இங்கயெல்லாம் தலைகீழா செய்றாங்கன்னு எங்களுக்கு ரொம்ப ஆச்சரியமாப் போயிடுச்சு" என்று சிங்காரச் சென்னை பற்றி ஓயாது சிலாகித்தார் ஆயிரத்து ஐந்நூறு மீட்டர் ஓட்டப் போட்டியில் ராணியாக விளங்கும் செபஸ்டியம்மாள்.

''மெட்ராஸ்ல பொண்ணுங்களை நல்லா படிக்க வைக்கறாங்க. முன்னே எங்களை கல்யாணம் கட்டிக்க ஆசைப்பட்ட சொந்தக்காரங்க எல்லாம் 'ஐயோ, நாலெழுத்து படிச்ச திமிர்ல சட்டம் பேசும்ங்க'ன்னு இப்போ ஒதுங்கிட்டாங்க. இங்க ஆண் - பெண் நட்பு எவ்வளவு சகஜமா இருக்கு! எங்க ஊர்ல அண்ணன் தம்பியோட பஸ் ஸ்டாண்டுல நின்னாலே மேலேயும் கீழேயும் பார்ப்பாங்க" என்ற பாப்பாத்தி, சென்னைக்கு வந்து பல அரசியல் தலைவர்களையும் நடிகர்களையும் நேரில் பார்த்ததைச் சொல்லிச் சொல்லி பூரித்துப் போகிறார்.

''எங்க ஊர்ல இதையெல்லாம் சொன்னா 'என்ன நீ இவ்வளவு ஈஸியா சொல்லிப்புட்டே. ஆட்டோகிராப் வாங்கினியா இல்லையா'ன்னு கேட்டு நச்சரிக்கிறாங்க" என்று சென்னையின் மதிமயக்கத்தில் இருவரும் புரண்டு எழுந்தாலும், "ஆயிரம்தான் சொல்லுங்க, கிராமம் கிராமம்தான். அந்த வெள்ளந்தியான மனுஷங்க, சுத்தக் காற்று, அடடா...! சென்னையில எல்லாமே சீக்கிரமே கிடைக்கும், மனசுக்குப் பிடிக்காது. கிராமத்துல தாமதமாத்தான் கிடைக்கும். ஆனா மனசு நிறைஞ்சிடும்" என்று கூறியபோது, கடம்பப்பட்டியின் நினைவுகளும் ஏக்கங்களும் இருவரின் கண்களிலும் நிரம்பி வழிந்தன.

- சநகன்


படம்: ஸ்ரீஹரி

திரையுலக நினைவுகள்

எக்ஸ்ட்ரா பணம் கேட்ட எம்.ஜி.ஆர்!

எங்கள் நிறுவனத்தில் ஹீரோவுக்காக கதை தயார் செய்யும் பழக்கம் கிடையாது. நல்ல கதை கிடைத்ததும் அதற்கு யார் பொருத்தமாக இருப்பார்களோ, அவரை ஹீரோவாகப் போடுவோம். அப்படியிருக்கும்போது எம்.ஜி.ஆருக்காக கதை தயார் செய்திருக்கிறோம் என்றால், அப்பச்சி ஒப்புக்கொள்ள மாட்டார். இது தெரிந்தும் அவரிடம் போய்ச் சொல்லி ஏன் வீணாக ஒரு 'நெகடிவ் ரிப்ளை' வாங்கி வர வேண்டும் என்ற தயக்கம் ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம் 'எங்க வீட்டுப் பிள்ளை' படம் அப்போது வெளியாகி அமோகமாக ஓடி வெற்றி கண்டிருந்தது. எங்களது விநியோகஸ்தர்களெல்லாம் 'எம்.ஜி.ஆரை வச்சி ஒரு படம் எடுங்க' என்று அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.



என் நண்பர் எஸ்.ஏ. அசோகனும் வற்புறுத்திக் கொண்டிருந்தார். "நீங்க அவரைக் கேட்டா உடனே ஒப்புக் கொள்வார். ஏன்னா, உங்க கம்பெனியில நடிக்கணும்னு அவருக்கும் ஆசை இருக்கு" என்றார் அசோகன்.

அப்பச்சியைக் கேட்டுப் பார்த்து விடலாம் என்று தைரியமாகப் போய், அவரிடம் கேஷுவலாக விஷயத்தைச் சொன்னேன். அதற்கு,

"ஏம்பா... ஏன் இதை முன்னாடியே சொல்லலே?" என்று அவர் கேட்டார். அப்பச்சி 'சரி' என்றது சந்தோஷமாக இருந்தது.

அடுத்து எம்.ஜி.ஆர் ஒப்புக் கொள்ள வேண்டும். நாங்கள் ராமாவரம் தோட்டத்துக்கு விரைந்தோம்.

"ஓ...எஸ்... பண்ணிடுவோம்" என்று ஒப்புக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

1965ஆம் ஆண்டு ஜனவரியில் 'எங்க வீட்டுப் பிள்ளை' ரிலீஸாகியது. 1966 ஜனவரியில் பொங்கலன்று, நாங்கள் எடுக்கும் எம்.ஜி.ஆர் படத்தை வெளியிட ஆசைப்பட்டு எம்.ஜி.ஆரிடம் கேட்டோம்.

"அது முடியாதே சரவணன்... ஏன்னா நான் வீரப்பாவுக்கு 'நான் ஆணையிட்டால்' படம் ஒப்புக் கொண்டிருக்கிறேன். அவர் படத்துக்கு அப்புறம்தான் உங்க படம் ரிலீஸாகும்" என்றார்.

அவர் வீரப்பா என்று குறிப்பிட்டது ஆர்.எம்.வீரப்பன் அவர்களை. ஆர்.எம்.வீயை எம்.ஜி.ஆர் எப்போதும் வீரப்பா என்றுதான் கூப்பிடுவார்.



• எம்.ஜி.ஆருடன் நான்...

''நாங்க உங்களை வச்சி முதன் முதலா படமெடுக்கிறோம். பொங்கலுக்கு வந்தாத்தான் நல்லாயிருக்கும்'' என்று நான் சற்று பிடிவாதம் பிடித்தேன்.

கொஞ்ச நேரம் ஏதோ யோசித்துவிட்டு 'நான் வீரப்பாவைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்று என்னை வழியனுப்பி வைத்தார் எம்.ஜி.ஆர்.

நான் அவருடன் படம் பற்றி பேசிக் கொண்டிருந்தபோது, மூன்று லட்சம் ரூபாய் சம்பளம் வேண்டுமென்று எம்.ஜி.ஆர் கேட்டார். சரியென்று நானும் ஒப்புக் கொண்டேன்.

என் அலுவலகத்துக்குத் திரும்பினேன்.

சற்று நேரத்தில் என் அலுவலகத்துக்கு ஆர்.எம்.வீ அவர்களே நேரில் வந்தார். என்னைப் பார்த்தார்.

''சின்னவரைப் பாத்தீங்க போலிருக்கு?'' என்றார். (தமிழ்த் திரையுலகில் பெரியவர் என்றால் அது எம்.ஜி. சக்கரபாணி, சின்னவர் என்றால் எம்.ஜி.ஆர்.)

"ஆமாம்."

''விஷயத்தைச் சொன்னார். என்னை விட்டுக் கொடுக்கும்படி கேட்டார். நானும் ஒப்புக் கொண்டேன். அடுத்த (1966) பொங்கலுக்கு உங்க படம்தான் ரிலீஸ்" என்றார்.

நான் மகிழ்ச்சியுடன் அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

''இன்னொரு விஷயத்தைச் சின்னவர் உங்ககிட்டே சொல்லச் சொன்னார்'' என்றார் ஆர்.எம்.வீ. அவர்கள்.

"சொல்லுங்க."

• சிம்லா நிகழ்ச்சி ஒன்றில்...



"மூணு லட்சம் சம்பளம் கேட்டாராமே, அதை மூணே கால் லட்சமா தந்துடச் சொன்னார். ஆனால் அடுத்த பொங்கலுக்குப் படம் வர்ற மாதிரி முடிச்சுக் கொடுத்திடத் தயாரா இருக்கார்."

"என்னப்பா... இந்த அட்ஜஸ்ட்மென்ட்டுக்குப் போய் இருபத்தையாயிரம் ரூபா எக்ஸ்ட்ரா கேக்கறாரே!'' என்று என் தந்தை சற்று வருத்தப்பட்டாலும், நான் அவரைக் கன்வின்ஸ் செய்தேன்.

'அன்பே வா'வில் நடிக்க எம்.ஜி.ஆருக்கு மூணேகால் லட்சம் ரூபாய் சம்பளம் என்று ஒப்பந்தமானது.

ஜீச்

''தலைவருக்கு உலகமே புரியல...''

''ஏன்? என்னாச்சு?''

''தேர்தல்ல அனுதாப அலை வீசுனா ஜெயிச்சிடலாம்னு யாரோ சொன்னதுக்காக உடனே பீச்சுக்குக் கிளம்பிட்டார்!''

– மதுரை முருகேசன்

ஏ.ஸி. திருலோகசந்தர் கதை சொன்னார். எம்.ஜி.ஆருக்கு கதை மிகவும் பிடித்துப் போனது.

படப்பிடிப்பு ஆரம்பமானது.

கதை சிம்லாவில் நடப்பது போல அமைந்திருந்தாலும், நாங்கள் ஊட்டியில்தான் பெரும்பாலான காட்சிகளை எடுத்தோம். ஐந்தே நாட்கள் தான் சிம்லாவில் ஷூட்டிங் வைத்துக் கொண்டோம்.

அந்த ஐந்து நாட்கள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள்.

ஐஸ் ஸ்கேட்டிங் ரிங்கில் இறங்க எம்.ஜி.ஆர் முதலில் சற்றுத் தயங்கினார். நான் என் ஷூ பிளேடையெல்லாம் காட்டி, முதலில் ரிங்கில் இறங்கி பேலன்ஸ் செய்து காட்டிய பின்தான் அவர் உள்ளே வந்தார்.

எங்கள் அனைவருடனும் மிகவும் நெருங்கிப் பாசமுடன் பழகினார் எம்.ஜி.ஆர்.

அந்த ஐந்து நாட்களிலும் தினமும் மாலையில் படப்பிடிப்புக்குப் பிறகு ஏதேனும் ஒரு நிகழ்ச்சி வைத்துக் கொண்டிருந்தார். அங்கே போர் முனையில் / எல்லைப்பகுதியில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இந்திய ஜவான்களைப் போய்ப் பார்க்கும் நிகழ்ச்சி ஒருநாள் இருந்தது.

பயங்கரக் குளிர்.

நாங்கள் சிம்லாவில் சென்று இறங்கியபோது எம்.ஜி.ஆரை அங்கு யாரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

ஜவான்களின் மருத்துவ முகாமுக்குச் சென்று பார்த்தபோது, அங்கே தமிழ்நாட்டு ஜவான்கள் மட்டும் எம்.ஜி.ஆரை சட்டென அடையாளம் கண்டு, மிகவும் நெகிழ்ந்து போனார்கள்.

இதற்கிடையில் அப்போது வெற்றிப் படமாக அமைந்த 'சசுரால்' ஹிந்திப் படத்தில் சரோஜாதேவி நடித்திருந்ததால், அவரை சிம்லாவில் எல்லோரும் அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனால் எம்.ஜி.ஆரோ எந்தத் தொந்தரவும் இல்லாமல் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தார்.

நமது ராணுவ வீரர்களுக்காக சிம்லாவில் அப்போது நடைபெற்ற நிதி திரட்டும் நிகழ்ச்சி ஒன்றில் எம்.ஜி.ஆரும், சரோஜாதேவியும் கலந்து கொண்டு பேசினார்கள்.

"நீங்கள் இந்த நிகழ்ச்சியின் மூலம் எவ்வளவு பணம் திரட்டுகிறீர்களோ, அதற்குச் சமமான தொகையை நான் எனது தனிப்பட்ட அன்பளிப்பாக இந்த நிதிக்கு வழங்குகிறேன்'' என்று ஓர் அறிவிப்பை யாரும் எதிர்பார்க்காமல்

வெளியிட்டு, கைத்தட்டல்களை அள்ளிக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

அந்தத் தொகை எவ்வளவு என்று தெரிந்ததும், தன் சம்பளத்தில் கணக்கு வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, எங்களிடமிருந்து அந்தப் பணத்தை வாங்கி நிதிக்கு வழங்கினார். அவ்வளவுதான். ஒரே இரவில் எம்.ஜி.ஆர் சிம்லா மக்களின் ஹீரோவாகிப் போனார்.

அதற்குப் பின்னர் சரோஜா தேவியின் பின்னால் யாரும் போக வில்லை. எல்லாக் கூட்டமும் எம்.ஜி.ஆரைச் சூழ்ந்து கொண்டது.

படப்பிடிப்பு முடிந்து சிம்லாவை விட்டு இறங்கி வந்தோம். கால்கா என்ற இடத்துக்கு வந்தபோது வண்டி நின்றதும் ஜானகி அம்மையாருக்குக் கூல் ட்ரிங்ஸ் குடிக்க வேண்டும் என்று



• ஏ.வி. திரிலோகசந்தருடன்...

ஆசை ஏற்பட்டு கேட்டார். உடனே எம்.ஜி.ஆர் வேகமாக இறங்கி, தானே பிளாட்பாரத்திலிருந்த கடைக்குப் போய் தன் மனைவிக்குக் கூல் ட்ரிங்க்ஸ் வாங்கிக் கொண்டார். ரெயில் கிளம்பியதும் ஓடி வந்து ஏறினார். ரெயிலை விட்டு அவர் இறங்கியபோதே திரிலோக் போன்றவர்களெல்லாம் "நீங்களே ஏன் இறங்குகிறீர்கள்? நாங்கள் போய் வாங்கி



வருகிறோம்" என்று முன் வந்தார்கள். அவர்களை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, தானே போய் வாங்கி வந்து வண்டியில் ஏறியதும், "இந்தத் த்ரில் எல்லாம் எனக்கு மெட்ராஸில் எங்கே கிடைக்கப் போவுது" என்று சிரித்தார்.

வழியில் ஸோலன் என்று ஓர் இடம். அங்கே எல்லா வண்டிகளும் நிற்கும். எங்கள் வண்டியும் நின்றது. அங்கிருந்து சற்று மேடான பகுதியில் ஒரு நல்ல ஹோட்டல் இருந்தது. சுமார் ஐம்பது அறுபது படிகள் மேலே ஏறிப் போக வேண்டும். எம்.ஜி.ஆர் உட்பட எல்லோரும் போனார்கள். கடுமையான குளிர் காரணமாக, எனக்குத் தொண்டை கட்டிக் கொண்டு பயங்கரமான வலி. அன்றும் நல்ல குளிர். காரின் கண்ணாடிகளை ஏற்றிவிட்டு உள்ளே பின்ஸீட்டில் என் ஓவர்கோட்டைக் கழற்றி தலையணை போல வைத்துக் கொண்டு படுத்து விட்டேன். களைப்பு மிகுதியால் சிறிது நேரத்தில் தூங்கிப் போனேன். அப்போது ....

(தொடரும்)

பிள்ளையாரை கட்டை பிரம்மச் சாரி என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இல்லை! விநாயகர் திருமணமானவர்!



விநாயகரின் திருமணங்கள்!

எல்லாக் காரியங்களையும் இடர் நீக்கி முடித்துத் தருகின்ற எம்பெருமான் விநாயகர். காரியம் முடிய புத்தி வேண்டும். புத்தி இருந்தால் காரியம் சித்தியாகும். இந்த இரு சக்திகளும் பிரம்ம தேவனிடம் பெண் குழந்தைகளாகத் தோன்றி கன்னிப் பருவம் எய்தியிருந்தனர். பிரம்மதேவனின் வேண்டுகோளுக்கு இணங்க, விநாயகர் சித்தி - புத்தியை மணந்தருளினார்.

இன்னொரு புராணக் கதையும் உண்டு. மரீசி என்னும் பெருந்தவ முனிவர், விநாயகரை மாப்பிள்ளையாகப் பெறுவதற்காகவே இருபத்தோராயிரம் ஆண்டுகள் தவம் செய்து, வல்லபை என்னும் அழகான மகளைப் பெற்றார். விநாயகர் ஓர் அந்தணராகச் சென்று வல்லபையிடம் சொற்போரிட்டார். பிறகு காட்சி தந்து, வல்லபையை மணக்கச் சம்மதித்தார். கைலாயமே திருவிழாக் கோலம் பூண்டிருக்க, வல்லபைக்கும் விநாயகருக்கும் திருமணம் நடந்தது. கற்பகமும் காமதேனும் விருந்து ஏற்பாடு செய்ய, அரம்பையர்கள் ஆட, உலகமே இன்புற்றது.

அங்கே வந்திருந்த விஷ்ணுவும், ஸ்ரீதேவியும் தங்கள் புதல்வியர்களாகிய, மோதை, பிரமோதை, சுமதை, சுந்தரி, மனோரமை, மங்கலை, தேகினி, காந்தை, சாருகாசை, சுமந்திமை, நந்தினி, காமதை என்ற பன்னிருவரை விநாயகருக்குத் திருமணம் செய்து கொடுக்க, விநாயகர் தமது மனைவியருடன் மணித்தீபம் என்ற உலகை அடைந்தார்.

திருமணம் கைகூட...

புதுக்கோட்டை மாவட்டம், குருந்தம்



• கொன்றையடி விநாயகர்

பாறையில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார் கொன்றையடி விநாயகர்.

இப்பெருமானுக்கு ஆடை சார்த்தி வணங்கினால் மானம் காக்கப்படும். தொடர்ந்து 21 நாட்கள் இவருக்கு செம்பருத்திப் பூமாலை சார்த்தி வணங்கிட, இட மாற்றம் நல்லதாக அமையும்.

இக்கொன்றையடி விநாயகர் திருப்படத்தை வீட்டில் வைத்திருப்போர், வெள்ளிதோறும் 21 வாரங்களுக்கு படத்துக்கு அரைத்த சந்தனமும், குங்குமமும் இட்டு, ஔவையாரின் விநாயகர் அகவலை மூன்று முறை ஓதி வணங்கிட, திருமணம் கைகூடும் என்பது ஐதீகம்.

- இ.பு. ஞானி,
சென்னை - 91

எங்க ஊர் பிள்ளையார்

நியூயார்க் கணபதி!

சென்னை பெசன்ட் நகரில் அழகுற அமைந்துள்ள அறுபடை வீடு முருகன் திருத்தலத்தில், நடுநாயகமாக அமைந்துள்ள முழுமுதற் கடவுள், ஸ்ரீ மகாவல்லப கணபதியின் கருணையை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. வணங்குகின்ற பக்தர்களின் குறைகளைப் போக்கி, நிறைவைத் தந்து சிறப்பான வளம் நிறைந்த வாழ்க்கையை அமைக்கின்ற இறைவனின் சக்தியை அனுபவ பூர்வமாகவே அறிய இயலும்.

முதன் முதலில் அமெரிக்காவில்



கட்டப்பட்ட விநாயகர் திருக்கோயில் அமைப்பில் உள்ளதால், இவ்விநாயகருக்கு நியூயார்க் மகாவல்லப கணபதி என்றும் பெயர் உண்டு. இவரை வழிபட, அனைத்திலும் வெற்றி கிடைப்பதை அனுபவத்தால் உணரலாம்.

- அலகு அருணாசலம்,
சென்னை - 90

திருநீறான்!

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தெப்பக் குளத்தின் அருகில் வீற்றிருக்கிறார் திருநீற்றுப் பிள்ளையார். மந்திரமாவது நீறு, வானவர் மேலதும் நீறு எனப் போற்றப்படும் திருஆலவாயன் திருநீறுள்ள ஒரு தொட்டியில், இந்தப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். இந்தப் பிள்ளையாருக்கு அர்ச்சகர் எல்லாம் கிடையாது. பக்தர்களே தொட்டியில் உள்ள திருநீறினை எடுத்து விநாயகர் மேல் அபிஷேகம் செய்யலாம். இங்கு வரும் பக்தர்கள் பிள்ளையாரைத் தரிசித்து, திருநீறை எடுத்து அவர் மேல் போட்டு, அத்திருநீறை எடுத்து பய பக்தியுடன் நெற்றியில் தரித்து வழிபடுகின்றனர்.



• நியூயார்க் கணபதி

- பாளை பசும்பொன்,
நெல்லை - 11

கணேசாயினி!

திருநெல்வேலி மாவட்டம் சேரன் மாதேவியிலுள்ள கால்வாயில் தண்ணீர் வறட்சி ஏற்படும். அந்தச் சமயம் மிளகினை அந்த ஆற்று நீரில் நனைத்து, அரைத்து விழுதாக்கி அவ்வூர் பிள்ளையாருக்குச் சார்த்தினால், உடனே அந்த ஆற்றில் நீர் நிறைந்து விடுமாம். அதனால் அந்தப் பிள்ளையாருக்கு 'மிளகுப் பிள்ளையார்' என்று பெயரிடப் பட்டுள்ளது.

விநாயகர் என்றாலே யானைத் தலையுடன், பருத்த தொந்தியுடன் ஆண் வடிவத்தில் இருப்பார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் விநாயகப் பெருமான் பெண் வடிவத்தில் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயப் பெருமாள் கோயிலில் காட்சி அளிக்கிறார். இவருக்கு புடைவை தான் அணிவிக்கப்படுகிறது. 'கணேசாயினி' என்ற திருநாமம் அவருக்கு. தாயுள்ளத்துடன் தாய் உருவில் அருள் வழங்குகிறார் 'கணேசாயினி'.

சக்தி பாதி, சிவன் பாதி சேர்ந்த அவதாரத்தை, நாம் 'அர்த்தநாரீஸ்வரர்' என்று அழைக்கிறோம். ஆனால் விநாயகர் பாதி, ஆஞ்சநேயர் பாதி சேர்ந்த உருவத்தில் காட்சி தரும் உருவத்தை, நாம் சென்னை அடையாறில் உள்ள மத்திய கைலாஷ் கோயிலில் காணலாம். கண்ணுக்கு விருந்தாக அமையும் இந்தக் கடவுளர்களை, 'ஸ்ரீஅத்யந்தப்ரபு' (ஸ்ரீஆதி அந்தப் பிரபு) என்ற திருநாமத்துடன் பக்தர்கள் போற்றி வழிபடுகின்றனர்.

- லலிதா செல்லப்பா,
சென்னை - 75

மேடம் ஃப்ரம் இண்டியா

அனுராதா ரமணன்

கிஷோருக்கு, தன் மனைவியையே அடையாளம் தெரியவில்லை. உப்பியிருந்த வயிற்றை வைத்துத் தான் 'அது ப்ரியம்வதா' என்பதைக் கண்டுபிடித்தான்.

தலைவிரி கோலமாய், மாரியம்மன் விழாவில் தீச்சட்டி எடுக்கப் போகிறவள் மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

ராஷ்மிக்கும் அங்கிருந்த 'சோபா குஷனு'க்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஏர்போர்ட்டில் வாங்கிய மெகா ஐஸ்க்ரீமைக் கூட மனசேயில்லாமல் தூக்கியெறிந்து விட்டாள். கை முழுக்க 'பிசுக் பிசுக்'. அதை அப்படியே பல்பீர் சிங்கின் தாடியில் துடைத்தபடி ஈன சுரத்தில் கேட்டாள்.

''நான் தான் ஒரு கப் டீ குடிக்கலாம்னு போனேன். ரம்யாவுக்குத் துணையா நீங்க இருக்க வேண்டியதுதானே? எதுக்காக என் பின்னாலேயே வந்தீங்க...?''

"இப்படியெல்லாம் ஆகும்னு நான் நினைச்சேனா..."

பல்பீர்சிங்கின் சிங்கக் குரலைக் காணோம். என்னமோ, பிரசவமான பூனை போல முனகினார்.

"இதுக்குத்தான்... இதுக்குத் தான்... ப்ரியா, அவனோட அப்பாவையும் வரவழைச்சிடலாம்னு சொன்னா... நீங்க கேட்டாத் தானே..."

கிஷோர், மனைவியைச் சமாதானப்படுத்தும் விதமாக, 'சந்தடி சாக்கில் கந்தப் பொடி காற்பணம்' என்பது போல எடுத்து விட்டான்.

ஊஹூம்... ப்ரியா எதற்கும் அசைபவளாக இல்லை...

வீடு முழுக்க போலீஸ்... அங்கேயும் ஏதேதோ சேனல்களிலிருந்து பேட்டியெடுக்கவும், பத்திரிகைகளில் கடச்கடச் செய்தி தரவும் நிருபர்கள்...

"உங்க மாம் போட்டோ இருக்கா...!"

ப்ரியம்வதா, மூக்கை உறிஞ்சியபடியே கிஷோரைப் பார்த்தாள். அவன் ஓடிப் போய், தங்களது கல்யாண ஆல்பத்தையே கொண்டு வந்து நீட்டினான்.

அதிலிருந்து சுகந்தாவின் விதவிதமான ஸ்டில்களை மட்டும் எடுத்து, அங்கேயே



அரை நிமிஷத்தில் நூறு பிரிண்ட்டுகள் போட்டாயிற்று.

அமெரிக்க போலீஸ் 'பார்க்கத்தான் பயம்'மாக இருப்பார்கள். குற்றவாளிகள், போலீசிடமிருந்து தப்பித்து ஓடுவதைக் காட்டிலும், அவர்களது பெரிய தொப்பைக்கு அடியிலேயே பத்திரமாய் குடித் தனம் செய்யலாம்.

ஆமாம். இந்திய போலீசைக் காட்டிலும், அமெரிக்க போலீசுக்கு தொப்பையும் பெரிசு. ஆகிருதியும் பெரிசு... நாற்பது ஆட்கள் நிற்கக்கூடிய இடத்தை, நாலே நாலு போலீஸ் ஆக்கிரமித்துக் கொள்ளும்...

துருவித் துருவி கேள்வி கேட்பதில், பத்திரிகையாளர்களுக்கு சளைத்தவர்கள் இல்லை போலீஸ்காரர்கள்.

"உங்க 'மாம்'மோட எத்தனாவது ஹஸ்பெண்டோட குழந்தை நீங்க?'

"நோ...நோ... அங்கேயெல்லாம் - அதாவது இந்தியாவுல எல்லாம் ஒரே ஹஸ்பெண்ட்.... ஒரே ஒய்ஃப்தான். நான் எங்கம்மா, அப்பாவுக்கு முதல் பெண். ஒரு தம்பி லண்டன்லே..."

"தம்பிகிட்ட போக சான்ஸ் இருக்கா?"

"எப்படி... எப்படி... அவங்களுக்கு பஸ்லே டிக்கெட் வாங்கவே தெரி யாது... 'டலாஸ் ஏர்போர்ட்'லே வந்து இறங்கிட்டு காணாமப் போயிட்டானே..."

"உங்க 'டாட்'டுக்கு வேற பொண் தொடர்பு உண்டா?"

"என்னது?"

"வேற கேர்ள் ஃப்ரெண்ட் உண் டான்னு கேட்கறாங்க. ஒரு வேளை அவர், தன் மனைவியக் கடத்தச் சொல்லி, ஆள் 'அரேஞ்ஜ்' செஞ்சி ருக்கலாம் இல்லே?"

"ஐயோ... ராமா..."

"ராமா? யார் அந்த ராமா?"

நடுவில் கிஷோர் புகுந்து இந்த அபத்தக் கேள்விகளுக்கு பிரேக் போட வேண்டியதாயிற்று...



"மிஸ்டர் ஜோன்... ராமாவுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே. இந்த ராமா வேற..."

"இது ஏதாவது கோட் வேர்டா?"

"நோ...நோ... 'ராமா'ன்னா... ஒன் ஆஃபீஸ் அவர் காட்... எங்க கடவுள்லே ஒருத்தர். அவரும் இது மாதிரிதான் பெண்டாட்டியத் தொலைச்சிட்டு..."

"இஸ் இட்...? வெரி இன்ட்ரஸ்டிங்.. இந்தியாவுல பெண்டாட்டியத் தொலைக்கறவங்க நிறையன்னு சொல்லுங்க..."

நடுவில் விஷயத்தைக் கேள்விப்பட்டு, ப்ரியம்வதாவின் இந்திய சிநேகிதிகள் வேறு வந்து போனார்கள்...

கிஷோர், இந்த அமர்க்களத்தில் தன் மனைவிக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது எனத் தவியாய்த் தவித்தான்.

ஏனெனில், ப்ரியம்வதாவைப் பார்க்க வரும் நண்பிகள், தங்களுக்குத் தெரிந்த அமெரிக்கன் க்ரைம் சப்ஜெக்ட்டை எல்லாம் அட்சதை மாதிரி - இவனிடம் தூவி விட்டுச் சென்றனர்.

அமெரிக்காவில் நிஜமான குற்றங்களை மட்டுமே தினம் தினமும் - இருபத்திநாலு மணி நேரமும் - காட்டக் கூடிய 'க்ரைம் சேனல்'கள் எல்லாம் இருக்கின்றன.

பொழுது போகாதபோது - இந்த சேனலில் 'ஐம்பது பெண்களைக் கொன்ற முப்பது வயது இளைஞனை'யும் அவனை போலீஸ் எப்படிப் பிடித்தது என்பது பற்றியும் 'பட்டர் பாப்கார்னை'க் கொறித்துக்கொண்டே பார்ப்பதன் விளைவு, அவர்களின் பேச்சில் தெரிந்தது....

"ப்ரியா... போன வாரம் இப்படித்தான்... நாப்பத்தஞ்சு வயசுப் பொம்பளைங்களையாக் கடத்திட்டுப் போய், கொலை செஞ்சவனைப் பத்தி... டீவியிலக் காட்டினாங்க. அவன் முகத்தைப் பார்த்திருக்கணும் நீ... சின்னப் பையன் மாதிரி இருக்கான்யா..."

"ஏன், அந்த 'ஜட்ஜ்மென்ட்' சீரியல்லே ஒரு பதினஞ்சு வயசுப் பையன்... போதைக்கு அடிமையாகி... ஒவ்வொரு டீச்சராக் கொன்னானே..."

"அதை விடு. புருஷனை கார்லே வச்சு, அப்படியே மலைப் பாதையிலத் தள்ளி விட்டாளே... அந்த 'ஷோ' பார்த்தியோ..."

"பார்த்தேன்... ஆனா, அடுத்த வாரம் பார்க்க முடியலைப்பா... என் ஹப்பியோட மாமா பையன் டின்னருக்குக் கூப்பிட்டான். போயிட்டேன். அந்தப் புருஷன் செத்துப் போயிட்டானா... இவதான் தள்ளி விட்டாள்னு எப்படி போலீஸ் கண்டு பிடிச்சதாம்..."

"அதுதான்யா பெரிய 'ஷாக்'... இவ காரோட புருஷனைத் தள்ளிவிட்டா இல்லையா... ஆனா, செத்துப் போனது இவ புருஷனில்லே... அது வேற... முதலாவது இவ புருஷன் சாகவே இல்லே..."

"வாவ்..."

இத்தனையையும் ப்ரியம்வதாவின் எதிரில் உட்கார்ந்துதான் பேச வேண்டுமா...?

எல்லாம் கிடக்க, எட்டாம் மாசமே வலியெடுத்து விட்டால் என்ன செய்வது..!

இப்படிப்பட்ட சந்தேகங்களையும், பயங்களையும் தீர்த்து வைப்பதற்கென்றே அமெரிக்காவில் வெகு காலமாய் குடியிருக்கும் முதிர்ந்த மாமிகள் சிலர் இருக்கிறார்கள்.

கை வைத்தியமோ, கால் வைத்தியமோ... அவர்களிடம் சென்றால் அருமையாக யோசனை சொல்வார்கள்.

அதில் ஒரு மாமி, நேரில் வந்து ப்ரியம்வதாவைப் பார்த்து ஆறுதல் சொல்லி

தைரியம்!

"எனக்கு இந்த ஊரே தெரியாது... ஆனாலும் தைரியமா வந்திருக்கேன்..."

"எனக்குக் கூட ஓட்டவே தெரியாது சார்... ஒரு தைரியத்துலதான் டிரைவரா வந்திருக்கேன்!"

– வாசு

விட்டு, கிஷோரிடமும் ஒரு யோசனையைக் கூறினான்...

"வாரா வாரம் நடத்தற பஜனைய இன்னிக்கு சாயந்திரம் உங்க வீட்டுல வச்சுக்கறேன்.... கண்ட 'க்ரைம் ஸ்டோரீஸ்' கேட்டு, வீடு முழுக்க அந்த 'வைப்ரேஷ'னே சுத்திச் சுத்தி வர்றது... 'ஹரிநாராயண நமோ நம...' நாப்பது பேர் உட்கார்ந்து பாடுவோம்..."

"ரொம்ப சரி..."

அழுகையை அடக்கிக்கொண்டு தலையாட்டினான் கிஷோர்.

"எதுக்கும் நீங்க கவலையே படாதிங்கோ... அடுத்த சனிக்கிழமைக்குள்ள, உங்க மாமியார் இங்கே இருப்பார் பாருங்கோ..."

தன் துக்கத்தை தான் மட்டுமே அனுபவிப்பதை விடவும், இப்படி எல்லாருடனும் சேர்ந்து இருந்தால் கொஞ்சம் குறையுமென ப்ரியாவும் நினைத்தாள்.

பல்பீர்சிங்கோ, ஒரு மணிக்கொருதரம், சென்னையிலுள்ள பரமேஸ்வரனுக்கு ஃபோன் செய்து, சம்பந்தியாய் லட்சணமாய் ஆறுதல் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

முதலில் பேசப் பிடிக்காமல்தான் பேசினார் பரமு. ஆனால் போகப் போக... இருவரும் ஃபோனிலேயே குலாவ ஆரம்பித்து விட்டனர்.

இந்தியாவிலிருந்து பரமு, தன் சுகந்தாவைப் பற்றி பல்பீரிடம் –

"பொன் ஒன்று கண்டேன்; பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா...
ஏனென்று நான் சொல்ல வேண்டுமா..."

– இப்படி அழுதுகொண்டே பாட, பல்பீரோ, அதற்குக் கொஞ்சமும் சளைக்காமல், பிரபல பஞ்சாபி இசையமைப்பாளர் 'ஜக்ஜித்சிங்'கின் ரொமான்டிக் பாடலை தன் 'கரகர' குரலில் பாடி, கூடச் சேர்ந்து அழுதார்...

"சந்த் ஸே... பூல் ஸே..."

"நிலவும் மலரும் பாடுது..."

இந்தியாவிலிருந்து பரமேஸ்வர் 'சர்ர்ர்ர்'ரென மூக்கை உறிஞ்சும் சத்தம் அமெரிக்காவில் கேட்டது...

"அரே.... பரம்... இதர் ஆவோஜீ... யு ப்ளீஸ் கம் ஹியர்... ஐ வில் சென்ட் யூ டிக்கெட்...."



இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, ராஷ்மி, பஜனுக்கு வருபவர்களுக்கெல்லாம் ஓடி ஓடி தேநீரும், 'கோக்'கும் கொடுத்தாள்.

நடு நடுவில், மருமகளின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரை, தன் ஜார்ஜெட் முந்தானையினால் துடைத்து, முன் நெற்றியில் முத்தமிட்டாள்.

ப்ரியாவோ, மாமியாரின் மீதிருந்த கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, ராஷ்மியின் பெரிய இடுப்பை, சிவலிங்கத்தைக் கட்டித் தழுவிய மார்க்கண்டேயன் போலக் கட்டிக் கொண்டு அழுதாள்...

இந்தப் பக்கம் பஜனைக்காக வந்தவர்களின் கருவிப் பெட்டியிலிருந்து, 'தபலா' வரையில் அத்தனையையும் அக்கு வேறு, ஆணி வேறாக அமெரிக்க போலீஸ் சுழற்றிப் பார்த்து விட்டு உள்ளே அனுப்ப...

அவரவர் வாத்தியக் கருவிகளை, அவியலுக்கு நறுக்கிய காய்கறிகளைப் போல, கைகளில் அள்ளிக்கொண்டு வந்து பஜனையை ஆரம்பிக்க...

"ஜய கணேச ஜய கணேச ஜய கணேச பாஹிமாம்...."

அமெரிக்க வாழ் இந்தியப் பாட்டி, தபலா பிய்ந்தது பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல், கையில் கிடைத்த எவர்சில்வர் கரண்டிகளையும், பிளாஸ்டிக் டப்பாக்களையும் வைத்துக்



டோகா!

'யோகா' தெரியும். 'டோகா' பற்றி யாருக்காவது தெரியுமா? அமெரிக்கர்கள் தங்களின் வளர்ப்புப் பிராணியான நாய்களுக்குக் கற்றுத் தரும் கலையின் பெயர்தான் 'டோகா'. கற்பூர புத்தி கொண்ட நாய்கள் 'டோகா'வைக் கற்றுக் கொண்டு எப்போதும் புத்துணர்வோடு வளைய வருகின்றனவாம். ஆரம்பத்தில் நியூயார்க்கில் ஆரம்பிக்கப்பட்ட இது, மியாமி, ஹாலிவுட் என்று விரிவடைந்துள்ளது. நாய்கள் தனித்திருப்பதால் உண்டாகும் கவலையைக் களைவதோடு, அவற்றின் உள்ளத்தில் அமைதியையும் மலரச் செய்கிறதாம் இந்த டோகா. இக் கலை சம்பந்தப்பட்ட புத்தக கேசட் வெளியீடுகளும் அபாரமாக விற்பனையாவதாகத் தகவல்.

- சுறுசுறுப்புத் திலகம

கொண்டு கொட்டி முழக்க...

இந்தப் பக்கம் பல்பீர்சிங் இன்னமும் விடாமல் 'ஜக்ஜித்சிங்'கின் காதல் பாடலை தொலைபேசியில் அழ...

"தேரா சேரா கித்னா சுஹானா..."

வீடே ரணகளப்பட்டது...

இத்தனைக்கும் நடுவில் -

அமெரிக்க பெண்ணுரிமைக் கழகம் வேறு, பல இடங்களிலிருந்தும் பலவிதமான பெண்களைத் திரட்டிக்கொண்டு, ஜனாதிபதி மாளிகையை நோக்கிப் படையெடுத்தது...

"அமெரிக்க நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை என்பதை, இப்போதாவது புரிந்துகொள்கிறீர்களா?"

"நம் நாட்டுக்கு, தன் மகளைக் காண வந்திருக்கிறாள் ஒரு இந்தியத் தாய். அவளுக்கு நடந்தது என்ன... எங்கிருக்கிறாள்... இது ஒன்றையும் கவனிக்காமல் ஜனாதிபதி புஷ் என்ன செய்கிறார்...?"

"இந்தப் பெண்மணியை உயிரோடு மீட்கும் பணியில் வெற்றி பெறாத வரையில், ஜனாதிபதி மாளிகையில் எந்தவொரு கேளிக்கை விருந்துகளும் நடைபெறக் கூடாது...."

"இது அமெரிக்க - இந்தியப் பிரச்னை மட்டுமல்ல, உலகளாவிய பிரச்னை. ஆதலால், இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - கமீலா திருமணத்தைக் கூட ஒத்தி வைக்க வேண்டும். இத்தனை வருடம் காத்திருந்தார்கள் - இந்த சிறு காலதாமதத்தைப் பொருட்படுத்தக் கூடாது..."

அமெரிக்காவையே குலுக்கிப் போட்டது சுகந்தாவின் விவகாரம்.

'இதில் சதாம் உசேனின் ஆதரவாளர்கள் பங்கு இருக்குமோ... இல்லை ஒஸாமா பின்லேடனின் சூழ்ச்சியோ...'

'ஒரு இந்தியப் பெண்மணியை பிணைக் கைதியாகப் பிடித்துப் போய், என்ன மாதிரி மிரட்டப் போகிறார்களோ..'

இப்படி அமெரிக்க ஜனாதிபதி, தலையைப் பிறாண்டிக் கொண்டிருந்த அதே நேரத்தில் -

தமிழ்நாட்டில், முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, சட்டசபையில் இது பற்றி கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்...

"பெண் என்றால் அத்தனை அலட்சியமா? அல்லது தமிழ்ப் பெண்ணுக்கு மத்திய அரசு தரும் மதிப்பு இவ்வளவு தானா...? இதை நான் சும்மா விடப் போவதில்லை. இது பற்றி பிரதமர் மன்மோகன், அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷிடம் பேசவில்லை என்றால்... நான் பேசுவேன்!"

இத்தனை பதற்றத்துக்கும் காரண மான சுகந்தாவோ கணவனை நினைத்து, 'கரகர'வென அழுதபடியே, ஜேனட்டுக்காக புடலங்காய் பொரிச்ச குழம்பு செய்து கொண்டிருந்தாள்...

(தொடரும்)

எது எழுத்து?

சோ.தர்மன் Vs பி.கே.பி.



கிராமங்களைப் பின்புலமாகக் கொண்டு தமிழர் வாழ்வை தீவிரமாக எழுதி வருபவர் சோ.தர்மன். பூடகமான நகர வாழ்வை வெகுஜன வாசகனுக்கு எளிமையாகச் சொல்வதில் கைதேர்ந்தவர் பட்டுக்கோட்டை பிரபாகர். எழுத்துலகின் எதிரெதிர் துருவங்களில் இயங்கிவரும் இருவரும், கிராமியச் சிறப்பிதழுக்காகச் சந்தித்தபோது... கொஞ்சம் பனிமலை... நிறைய எரிமலை...

பி.கே.பி: *நீங்கள் எப்படி எழுத வந்தீர்கள்? என்ன படித்திருக்கிறீர்கள்?*

சோ.தர்மன்: எஸ்.எஸ்.எல்.சி. முடித்த பிறகு ஐ.டி.ஐ. படித்தேன். நூற்பாலையில் மில் தொழிலாளியாக வேலை கிடைத்தது. அப்பா ஒரு நாடகக் கலைஞர். ராமர் வேஷம் போடுவார். அவருடைய தாக்கம், எனக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக எழுத வந்தேன். எனக்கு குரு என்று யாரும் கிடையாது.

பி.கே.பி: இந்தக் கருத்தோடு நான் உடன்படுகிறேன். சங்கீதம், நாட்டியம் போல், எழுத்தை குரு வைத்து கற்க முடியாது. என் அப்பா ஒரு வர்த்தகர். அம்மா நல்ல வாசகி. நிறைய நாவல்களை வாசிப்பார். அந்த ஜீன் வேண்டுமானால் எனக்கு இருந்திருக்கலாம். மற்றபடி எனக்கும் இலக்கியக் குடும்பப் பின்னணி எதுவும் கிடையாது.

சோ.தர்மன்: *எந்த வயதில் எழுத ஆரம்பித்தீர்கள்?*

பி.கே.பி: திருச்சி ஜோசப் கல்லூரியில் இளங்கலை படித்துக் கொண்டிருந்த போது நாடகப் போட்டி வந்தது. நானே எழுதி, இயக்கி நண்பர்களோடு நடிக்கவும் செய்தேன். அதற்குக் கிடைத்த

பாராட்டுக்கள் மேலும் எழுத வைத்தன. கல்லூரி முடிந்து ஊர் திரும்பிய பிறகு, நாடகத்தில் ஈடுபாடு காட்ட ஊர் நண்பர்கள் யாருக்கும் விருப்பமில்லை. ஆனால் என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை. நாடக எழுத்தின் இன்னொரு வடிவமாக சிறுகதைக்கு வந்தேன். 1977ல் எழுத ஆரம்பித்து, இதுவரை இருநூற்று ஐம்பது சிறுகதைகள், முந்நூறு மாத நாவல்கள், எழுபதுக்கும் அதிகமான தொடர்கள் எழுதியிருக்கிறேன்.

சோ.தர்மன்: எழுத்தை தொழிலாகக் கொண்ட வாழ்க்கை என்று சொல்லலாமா?



பி.கே.பி: ஆமாம்! பாரதி கூட எமக்குத் தொழில் கவிதை என்று சொல்லவில்லையா?

சோ.தர்மன்: பாரதியை நீங்கள் இழுக்க முடியாது. எழுத்தை ஒரு முழு நேரத் தொழிலாக, உங்களைப் போல சமரசம் செய்துகொண்டு பாரதி எழுதவில்லை.

பி.கே.பி: எழுத்து பலவகை. நான் தேர்ந்து கொண்டிருப்பது பொழுது போக்கு எழுத்து. இதில் சமரசம் எங்கே வந்தது என்று நினைக்கிறீர்கள்?

சோ.தர்மன்: பத்திரிகைகாரர்கள் கேட்கிற மாதிரி என்னால் எழுத முடியாது. நான் என்ன எழுதுகிறேனோ, அதைத்தான் அச்சுக்குத் தரமுடியும்.

பி.கே.பி: எனக்கும் அந்த ஆளுமை இருக்கிறதே! குறிப்பிட்ட நாளுக்குள் கொடுங்கள் என்று கேட்க முடியுமே தவிர, இதைத்தான் நீங்கள் எழுத வேண்டும் என்று எந்தப் பத்திரிகையும் என்னை வற்புறுத்தியது இல்லையே!

சோ.தர்மன்: நான்கு பக்கத்துக்குள் கதை எழுதிக் கொடு என்றால், ஒப்புக் கொண்டு எழுதுவது சமரசம் இல்லையா?

பி.கே.பி: பக்கக் கட்டுப்பாடு என்பது எல்லாப் பத்திரிகைகளுக்கும் பொதுவானது. அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். நான் நாற்பது பக்கத்துக்குத்தான் சிறுகதை எழுதுவேன் என்றால், அதை குறுநாவலாகப் போட்டுக் கொள் என்றுதான் சொல்லுவார்கள். நான்கு பக்கத்துக்கு எழுது என்று சொல்லலாமே தவிர, கதையின் கருத்தில் அவர்கள் தலையிடுவதில்லை. அதைத் தீர்மானிக்கிற சுதந்திரம் எழுத்தாளனிடம்தானே இருக்கிறது? இதில் சமரசம் எங்கே வந்தது?

சோ.தர்மன்: அவர்களுக்கான ஒரு தேவையை நம்மீது திணிப்பது, சமரசம் இல்லாமல் வேறென்ன? இதனால்தான் வெகுஜனப் பத்திரிகைகளுக்கு நான் எழுதாமல் இருக்கிறேன். தவிர, வெகுஜன பத்திரிகைகளுக்கான உங்களது எழுத்துத் தளம், குடும்பம், காதல், உறவுகள், குற்றம்... இதைத் தவிர வேறு கிரியேட்டிவ் சிந்தனை என்ன இருக்கிறது? இதை மீறி நீங்கள் எதையும் எழுத மாட்டீர்கள். உங்களுடையது கமர்ஷியல் எழுத்து.

பி.கே.பி: இதை நான் ஏற்க முடியாது. கிரியேட்டிவ் என்ற வார்த்தைக்கும் கமர்ஷியல் என்ற வார்த்தைக்கும் நீங்கள் என்ன அர்த்தம் தருகிறீர்கள்? கமர்ஷியல் தளத்தில் நின்று எழுதினாலும் சரி, கிரியேட்டிவ் தளத்தில் நின்று எழுதினாலும் சரி, கதைக்குக் கிடைக்கும் சன்மானமும், புத்தகம் என்று வெளியிட்டால் ராயல்டியும் பெற்றுக் கொள்ளும்போது அங்கே கமர்ஷியல் வரவில்லையா?

சோ.தர்மன்: கமர்ஷியல் என்பதை நான் இந்த அர்த்தத்தில் மட்டும் சொல்லவில்லை. அதில் கிரியேட்டிவ் தன்மையே இல்லை என்றுதான் சொல்கிறேன்.

கிரியேட்டிவ் எழுத்தில் எழுத்தாளனுக்கான ஒரு வரி இருக்கும். உதாரணத்துக்கு வனம் பற்றிய எனது ஒரு சிறுகதையில், இப்படி எழுதியிருந்தேன்: 'புலி வேட்டைக்காக நீ நூறு முறை வனத்துக்குள் போயிருக்கலாம். ஒருமுறை கூட புலியை நீ காணாமல் திரும்பி வந்திருக்கலாம். ஆனால் நூறு முறையும் புலி உன்னைப் பார்த்திருக்கிறது.' இது என்னுடைய வரி. வேறு யாருடைய வரியுமல்ல. இந்த வரிதான் அந்தக் கதையில் நிற்கிறது. வனத்தைப் பற்றிய எல்லா பீதியும், பயங்களும் இந்த ஒரு வரியிலேயே கொண்டு வர முடிந்திருக்கிறது. இது மாதிரியான வரிகள், நிறைய கதைகளில், நிறைய இடங்களில் வரும்போது, அந்தக் கதையானது திரும்பத் திரும்ப வாசிக்கப்படுவது மட்டுமல்ல, காலம் கடந்தும் வாசிக்கப்படும். உங்கள் கதைகளில் இதுபோல நுட்பமான வரிகள் உண்டா?

பி.கே.பி: நீங்கள் குறிப்பிடுவது உங்கள் மொழி நடையில், பார்வையில் பதிவாகும் விஷயம். என்னுடைய சிறுகதைகளில் குழந்தைகளின் உளவியல் தொடங்கி, வயதானவர்களின் மனநிலை வரை சமுதாய விஷயங்களை நிறையவே தொட்டிருக்கிறேன். சுற்றுச்சூழலை எழுதியிருக்கிறேன். இதை ஒவ்வொரு எழுத்தாளனும் வாழ்க்கை அனுபவத்திலிருந்தும், பார்த்த மனிதர்களில் இருந்தும் பதிவு செய்கிறான். மொழி ஆளுமையுடன் சொல்வது, பூடகமாகச் சொல்வது என்பதெல்லாம், அந்தந்த எழுத்தாளனுடைய சுதந்திரம். என்னுடைய வாசகன் படித்தவுடன் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். ஆங்கிலக் கல்வி முறையால் இன்று வாசகர்கள் குறைந்து கொண்டே வருகிறார்கள். இன்னொரு பக்கம் தொலைக்காட்சியின் பாதிப்பால் ரீடர்ஸ் எல்லாம் வியூவர்ஸாக மாறிக் கொண்டு வருகிறார்கள். எனவே, இருக்கும் கொஞ்ச வாசகர்களை தக்க வைத்துக் கொள்ள, எளிமையாகச் சொல்ல வேண்டும், நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். இது என்னுடைய வழி.

சோ.தர்மன்: எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நீங்கள் கட்டுரை எழுதிவிட்டுப் போய்விடலாமே?

பி.கே.பி: அப்படி ஏதாவது விதி இருக்கிறதா என்ன?

சோ.தர்மன்: எல்லாவற்றையும் எளிமையாகச் சொல்லிவிட்டால் கதைக்கும் கட்டுரைக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்!

பி.கே.பி: நீங்கள் பூடகமாக எழுதுவதை நான் தவறாகச் சொல்லவில்லை. ஆனால் வாசகர்களை எளிதில் சென்றடைய வேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தை நீங்கள் விமர்சிக்க முடியாது. ஏனென்றால் இது என்னுடைய பாணி. தி.ஜாவும், ஜெயகாந்தனும் எளிமையாகத்தான் எழுதினார்கள். அப்படியானால் அது நல்ல எழுத்து இல்லையா?



சோ.தர்மன்: காலச்சுவடில், உயிர்மையில் எழுத வாருங்கள் என்று உங்களைக் கேட்க முடியாது.

பி.கே.பி: வாசகனை நான் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. மற்றபடி உங்கள் எழுத்தை நான் குறை கூறவில்லை.

(சோ.தர்மன் - பி.கே.பி இருவரும் **கைகுலுக்கிக் கொண்டு, பரஸ்பரம் தத்தமது சிறுகதைத் தொகுப்புகளை பரிமாறிக் கொண்டு விடை பெற்றார்கள்)**

தொகுப்பு : **ஜெய்**
படங்கள் : **ஸ்ரீஹரி**

ஸாரி மகளே!

தலை சீவிக் கொள்வதற்காக சுவரில் மாட்டி இருந்த கண்ணாடி முன்பு வந்து நின்ற மாதவன் திடுக்கிட்டார். அவர் முகத்தில் கோப மின்னல்கள் கிளை விரித்தன.

"கவிதா... ஆ..." என்று கத்தினார்.

"ஏ... என்னப்பா" என்றவாறு அடுத்த நொடியே வந்து நின்றாள் கவிதா.

"எந்த மகாராணி கண்ணாடியை உடைச்சது? சுவத்துல இருக்கிறதை அப்படியே பார்த்து தலை வாரிக்க முடியாதா? பதினாறு முறை கையில எடுக்க வேண்டியது. கீழே போட வேண்டியது. சொல்லு! யாரோட வேலை?" என்று கேட்டார்.

"நா... நான்தாம்ப்பா கீழே த... தவறிப் போட்டுட்டேன்" என்றாள் கவிதா.

"பொய் சொல்லாதே. நீ கையில எடுக்க மாட்டியே. எதுக்கு யாரோ செய்யற தப்புங்களுக்கு நீ பழியைப் போட்டுக்கறே?"

சமையலறையில் இருந்தவாறு இன்னும் இரண்டு பெண்கள் இந்த சம்பாஷணைகளை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"உன் புருஷனுக்கு நக்கலைப் பார்த்தியா? நான்தான் உடைச்சு இருப்பேன்னு ஜாடையா சொல்றாரு. இந்த வீட்ல எந்தத் தப்பு நடந்தாலும் நான்தான் பொறுப்பா? ஆனாலும் ரொம்பத்தான் அலட்டறாரு. கொழுப்பு" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள் நித்யா.

"வாய் மேலேயே போடுவேன். அப்பாவைப் பத்தி பொண்ணு பேசற பேச்சாடி இது?" என்று சமையலிலிருந்து கவனத்தைச் சிதறடிக்காமல் சொன்னாள் பரிமளா.

"பின்னே நான்தான் உடைச்சேன்னு அவ சொல்லியும், பொய் சொல்லாதேன்னா என்ன அர்த்தம்? என்னைத் தானே சந்தேகப்படறார்."

"நீ அந்த மாதிரி நல்ல பேரை வாங்கி வெச்சிருக்கறே?" என்றாள் பரிமளா.

மாதவனுக்கு இரண்டு பெண்கள். கவிதா மூத்தவள். நித்யா இளையவள். இரண்டு வயது பெரியவள் கவிதா. இது வயது வித்தியாசம். குணநலன்களில் இருவருக்கும் நிறையவே வித்தியாசங்கள்.

கவிதா அதிகம் பேசாதவள். நித்யாவோ பேச ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டாள். தந்தையிடமும் சரி, தாயிடமும் சரி, எந்த விஷயத்திலாவது மாற்று கருத்து சொல்ல வேண்டுமென்றால் தயங்காமல் சொல்வாள். சொன்னதில் உறுதியாகவும் இருப்பாள்.

இதனால் மாதவனுக்கும் அவளுக்கும் அடிக்கடி வாக்குவாதம் நடக்கும். கொஞ்ச நாட்களுக்கு இருவரும் நேருக்கு நேராக பேசிக்கொள்ள மாட்டார்கள். பிறகு மீண்டும் தொடங்குவது பெரும்பாலும் அடுத்த வாக்குவாதத்திற்குத்தான்.

கவிதாவிடம் இந்தப் பிரச்னை இல்லை. அவள் எதையும் சட்டென விட்டுக் கொடுத்து விடுவாள். எதற்காவது திட்டினால் அமைதியாக வாங்கிக் கொள்வாள். மாதவன் பெரும்பாலும் அவளைத் திட்டுவது இல்லை.

கவிதா, நித்யா இருவருமே கல்லூரிப் படிப்பை முடித்து விட்டார்கள். கவிதாவுக்கு தீவிரமாக மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார்கள். நித்யா வேலைக்குச் செல்ல மனு எழுதிப் போட்டுக் கொண்டிருக்கிறாள். அதைப் பற்றியும் மாதவன், மனைவி பரிமளாவிடம் கமெண்ட் அடித்து விட்டார்.

"இப்பவே மகாராணி மாதிரி நடந்துக்கறா. வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டா தலைக்கனம் கூடிடும்."

"சும்மா இருங்க. அப்படி ஒண்ணும் அவ தலைகனம் பிடிச்சவளில்லை. மனசுக்

ஆரணியிலிருந்து யுவராஜ்

குப்பட்டதை சட்டுன்னு முகத்துக்கு நேரா பேசிடறா."

"அதைத்தான் மாத்திக்கச் சொல்றேன். பெத்தவங்க நாம பொறுத்துப்போம். எல்லோரும் அப்படி இருப்பாங்களா? 'பொண்ணை வளர்த்து இருக்கிற லட்சணத்தைப் பாரு'ம்பாங்க. எப்படியோ போங்க" என்றார்.

பரிமளாவிற்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. அமைதியாக இருந்து விட்டாள்.

ஒரு வாரம் கழித்து கவிதாவைப் பெண் பார்க்க ஒரு வரன் வந்தது. லட்சணமான பையன். அவர்கள் பேசிய பேச்சிலேயே மிகவும் நல்ல குடும்பம் என்பது தெரிந்தது. இரண்டு பக்கமும் பிடித்துப் போனது. நிச்சயதார்த்தத் தேதியையும் குறித்துக் கொண்டார்கள்.

இரவு தனது அறையில் படுத்துக் கொண்டு யோசனையில் இருந்த மாதவனை நெருங்கினாள் பரிமளா.

"என்னங்க யோசனை?"

"கவிதாவை நினைச்சு கவலையா இருக்கு."

"என்னங்க கவலை? அவளைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா? போற இடத்துல அனுசரிச்சு நடந்துப்பா. நித்யாவை நினைச்சுத்தான் நான் கவலைப்படறேன்."

"இல்லே பரிமளா. நித்யாவை நினைச்சுக் கவலைப்பட வேண்டியதே இல்லே. அவகிட்டே தைரியம் இருக்கு. தப்புன்னா தட்டிக் கேட்டுடறா. நான் கூட அவகிட்ட சண்டை போட்டுட்டாலும் அப்புறம் யோசிப்பேன். அவ வாக்குவாதம் நியாயம் தானேன்னு தோணும். இந்த தைரியம் அவளை எந்தச் சூழ்நிலையிலும் காப்பாத்தும். ஆனா கவிதா எதிராளிகிட்டேயே தப்புன்னாலும் தன் மேலே போட்டுக்கறவளாச்சே. ரொம்ப அடக்கி வளர்க்கறதும் தப்பு. அதுக்கு நானும் ஒருவகையில காரணம். வீட்டு ஆம்பளைங்கற கர்வம், நித்யாகிட்டே செலுத்த முடியாத ஆதிக்கத்தை எல்லாம், கவிதா மேலே திணிச்சு ரொம்ப அடக்கிட்டேன்னு தோணுது. ஸாரி" என்றவரின் குரல் கம்மியது.

பரிமளா வாயடைத்துப் போனாள்.

○



கி ராமம் என்றவுடன் பளிச் சென்று நம் மனதில் தோன்றும் நபர் ராமராஜன். தமிழ் சினிமாவிலிருந்து காணாமல் போய் விட்டவரை, மிகுந்த பிரயத்தனத்துக்குப் பிறகு சந்தித்தோம்.



“விஜய், அஜித்

ஆளையே காணோமே... சினிமாவை விட்டு முழுவதும் ஒதுங்கி விட்டீர்களா?

“சினிமாதான் என்னோட வாழ்க்கையே... அதிலிருந்து எப்படி ஒதுங்க முடியும்...? கடைசியா ‘சீறி வரும் காளை’ பண்ணியிருந்தேன்... அடுத்து ‘வேலா’ன்னு ஒரு படம்... ரோஜா ஹீரோயின்... அதுல என்னென்னவோ சிக்கலெல்லாம் ஆகி, இப்போ பேரை மாத்தி ரிலீஸ் பண்ற ஐடியா இருக்கு. அந்த ஓர்க்லதான் இப்போ மும்முரமா இருக்கேன்.”

தமிழ் சினிமா மீது இன்னமும் நம்பிக்கை இருக்கிறதா?

“நிச்சயமா... ஏன் உங்களுக்கு இல்லையா...? என்னை, என் படத்தைப் பார்க்கறதுக்காகவே ஒரு கூட்டம் இருக்கு. அவங்க யாரும் வெளில போயிடல. இங்கதான் இருக்காங்க...”

இன்றைய தமிழ் சினிமா இளைஞர்கள் கையில். அஜித், விஜய்யோடு உங்களால் போட்டி போட முடியுமா...?

“(சற்றே கோபமாக) நான் எதுக்கு அவங்ககூட போட்டி போடணும்? என்னை மாதிரி தொடர்ச்சியா இருபது படம் ஹிட் கொடுக்க முடியுமா அவங்களால? நான் கேட்கறேன்... இவங்கள்லாம் ஃப்ளாப்பே தர்றதில்லையா...? ஆனால் அவங்ககூட நான் போட்டி போட விரும்பல... என் பேட்டர்ன் வேற... அவங்க பேட்டர்ன் வேற...”

அரசியலுக்கு வந்தீர்கள்... ஆனால் அதிலும் பிரகாசிக்கவில்லையே?

“அம்மா என்னை எம்.பியாக்கினாங்க... தொடர்ந்து நானும் அரசியல், கட்சி, தேர்தல் பிரசாரம்னு வாய்ப்பு வரும்போதெல்லாம் ஈடுபட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்... என்ன... மீண்டும் ஒரு தடவை வாய்ப்பு வரல. இப்பவே அம்மா கூப்பிட்டா, உடனே கட்சி வேலை செய்யத் தயாராத்தான் இருக்கேன்.”

விஜயகாந்த் அரசியலுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறாரே...?

“அது அவருடைய சுதந்திரம்.... வரட்

டும்... தப்பில்லை... ஆனா அரசியல்னு முடிவெடுத்துட்ட பின்னால நடிகர் சங்கத் தலைவரா நீடிக்கறது தப்பு... நடிகர் சங்கத் தலைவரா இருக்கறவருக்கு கட்சி சாயம் இருந்தா, அது நடிகர் சங்கத்துக்குத்தான் பாதிப்பு... அதனால அரசியலுக்கு வர்றதுக்கு முன்னால, தலைவர் பதவியை ராஜினாமா செய்துட்டு அரசியலுக்கு வரட்டும், கட்சி தொடங்கட்டும், வேணாம்னு சொல்லல. இதைச் சொல்றதுக்கு ராமராஜன் யாருன்னு கேட்கக் கூடாது. நானும் நடிகர் சங்க உறுப்பினர். அந்த உரிமையிலதான் பேசறேன்."

நளினியுடன் மீண்டும் இணைய வாய்ப்புண்டா...?

"இது ஒரு பர்சன்ட்கூட சாத்தியப் படாத விஷயம்... மனசுல ஒண்ணை வச்சுக்கிட்டு, வெளில ஒரு

...ால் முடியுமா?"

- ராமராஜன் சவால்

மாதிரி நடந்துக்க முடியாது...நாம நடிக்கிறவங்கதான். அதுக்காக நிஜத்திலும் நடிக்கக் கூடாது. அதனால மீண்டும் இணையறதுக்கு வாய்ப்பே இல்லை. ஆனா என்னோட மாமா பெண் எழிலை மறுதிருமணம் செய்துக்கற ஐடியா இருக்கு. இதெல்லாம் ஏற்கனவே பேசி வச்சதுதுதான்."

மார்க்கெட் போய்விட்ட பிறகு ராஜ்கிரண் மாதிரி குணசித்திர வேடங்களில் நடிக்கலாமே... ஹீரோவாகத்தான் நடிப்பேன் என்று அடம் பிடிப்பது சரியா?

"நான் ஹீரோ ஆவேன்னு நினைச்சி சினிமாவுக்கு வரல. ஹீரோ ஆயிட்டேன். அப்புறம் எதுக்கு வேற ரோல் பண்ணணும்? இதுவரைக்கும் 43 படம்... எல்லாத்துலயும். சோலோ ஹீரோதான். இனிமேலும் அப்படித்தான். என்னோட ரசிகர்களுக்காக மீண்டும் ஒரு ரவுண்டு வரத்தான் போகிறேன்."

சரி, உங்கள் திட்டம்தான் என்ன?

"இப்போ தொடர்ந்து டிஸ்கஷன்ல இருக்கேன். மூன்று வெளிப்பட வாய்ப்புகள் வந்திருக்கு. நானும் ரெண்டு மூணு சப்ஜெக்ட் கையில வச்சிருக்கேன். வர்ற ஜூன் மாசத்துல இருந்து ஒவ்வொரு புராஜெக்டா செய்யப் போறேன். ஜெயிக்க முடியும்னு நம்பிக்கை இருக்கு..."

இவ்வளவு நம்பிக்கையாகப் பேசுகிறீர்கள்... ஆனால் கடன் தொல்லை காரணமாக தற்கொலைக்கு முயன்றீர்கள்... வீட்டு வாடகைக்குக்கூட பணமில்லை என்றெல்லாம் செய்திகள் வந்தனவே...?

"நானே இதைப் பத்தி ஒரு பிரஸ்மீட் வச்சிடலாமான்னு ஐடியா பண்ணியிருந்தேன். ஏதோ ஒரு உதாரணத்துக்கு பேச்சுவாக்குல சொன்ன வார்த்தையை, வெறும் பரபரப்புக்காக இப்படி செய்தியாக்கிட்டாங்க. உண்மையிலேயே அப்படியெல்லாம் இல்ல. தற்கொலை செய்துக்கற அளவுக்கு நான் ஒண்ணும் கோழை இல்ல... ரொம்ப தன்னம்பிக்கை உள்ளவன்."

உங்களுக்குப் பிறகு முழுமையான கிராமத்துக் கதாநாயகன் வேடத்துக்குத் தமிழ் சினிமாவில் வெற்றிடம் விழுந்துவிட்டதே...?

"அதற்குக் காரணம் இன்னிக்கு வர்ற ஹீரோக்கள் கிராமப் படங்கள்ல நடிக்க ஆர்வம் காட்டாததுதான். கிராமத்து சப்ஜெக்ட்ல நடிச்சா, எங்கே நம்மளை ஒதுக்கிடுவாங்களோன்னு பயப்படறாங்க. எதுக்குக் கவலை, நான்தான் வரப் போறேனே..."

நம்பிக்கையோடு சிரிக்கிறார் ராமராஜன்.

- கலை

படம்: **ராஜன்**





பொதுவாக ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றால், விழா அமைப்பாளர்கள் நுழைவாயிலில் நின்று வரவேற்று, உள்ளே அனுப்பி வைப்பார்கள். ஆனால், மார்ச் 12 மாலை, பாரதிய வித்யா பவனில் நடந்ததே வேறு. அன்றைய சிறப்பு அழைப்பாளரான கிருஷ்ணராஜ் வாணவராயர் குறித்த துண்டுப் பிரசுரத்தை வந்தவர்கள் கையில் கொடுத்து, வாசலில் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் படமொன்றை ரசித்துவிட்டு அரங்கத்தினுள் செல்லும்படி கூறினார்கள் கல்கி சதாசிவம் அறக்கட்டளைக் குழுவினர். அந்த விளம்பரத்தில், கால் இழந்த ஒரு சிறுமி, ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு வெற்றிக் கம்பத்தைத் தொட்டாள். அதைச் சாத்தியமாக்கியது அவளது செயற்கைக் கால் - பிளாஸ்டிக் கால் செய்யப்பட்ட உறுப்பு. இவ்வாண்டுக்குரிய கல்கி சதாசிவம் நினைவு விருது பெற்ற அவ்விளம்பரம் ஏற்படுத்திய தாக்கத்துடன் அரங்கத்தினுள் சென்று அமர, கர்நாடக இசைப் பாடகி



• வாணவராயரிடமிருந்து பாராட்டுப் பத்திரம் பெறுகிறார் ஜெயராமன்...



• சௌம்யா, இறை வணக்கம்...



• வித்யா

விருது பெற்ற பிளாஸ்டிக்!

செளம்யா தம் தேன் குரலில் 'வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்' பாடலை இறை வணக்கமாய் பாடியபோது, அவர்தம் கச்சேரிக்கான ஒரு டிரெய்லர் கேட்டது போல இருந்தது.

''கல்கி அலுவலகத்தில், ஆண்டுதோறும் நடக்கிற ஆயுத பூஜை சமயம், திருமதி எம்.எஸ். இதே பாடலைத்தான் பாடுவது வழக்கம்'' என்ற ருசிகரமான தகவலைக் குறிப்பிட்டார் கல்கி ஆசிரியர் சீதா ரவி. சிறப்பாகப் பாடிய செளம்யாவுக்கு, கல்கியின் சிவகாமியின் சபதம் நாவல் பரிசளிக்கப்பட்டது. அட! பாட்டுக்குப் பரிசு டான்ஸ்!

ராம்நாராயணின் வரவேற்புரை, இன்றைக்குச் செய்தித்தாள்களில் விளம்பரங்கள் போக, மீதி இடத்தில் செய்திகள் இடம் பெறுவதைச் சுட்டிக்காட்டியதுடன், அரசியல், கிரிமினல் மயமாகி வருவதையும், சமூகத்தில் எல்லா விஷயங்களிலும் அரசியல் புகுந்து விட்டதையும் எடுத்துக் காட்டியது.

பத்தாயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலையையும், பாராட்டுப் பத்திரத்தையும் கிருஷ்ணராஜ் வாணவராயர் அளிக்க, பரிசு பெற்ற மும்பை விளம்பர நிறுவனமான ஆர் அண்ட் பி மேனேஜ்மெண்ட் கம்யூனிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் சென்னைக் கிளையைச் சேர்ந்த ஜெயராமன் பெற்றுக் கொண்டு, சுருக்கமாக



ஏன் பரிசளித்தோம்?

மேற்படி விளம்பரத்தை, கல்கி சதாசிவம் அறக்கட்டளை, இவ் வருடத்துக்கான சிறந்த விளம்பரமாகத் தேர்வு செய்து, விருது வழங்கியது ஏன் என்று அறங்காவலர்களுள் ஒருவரான லக்ஷ்மி நடராஜனிடம் கேட்டோம்.

''பாசிடிவ்வான அணுகுமுறை, உணர்வு பூர்வமான வெளிப்பாடு, கவனத்தை ஈர்க்கும் புகைப்படம், நேரிடையான கருத்து என்று பலவித பரிமாணங்களுடன், பிளாஸ்டிக்கின் பயன்பாடு குறித்து, சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதொரு படைப்பாக மிளிர்ந்ததால் அந்த விளம்பரத்துக்குப் பரிசளிக்கப்பட்டது'' என்றார்.

• லக்ஷ்மி நடராஜன்



ஏற்புரை நிகழ்த்தினார். சமூக அக்கறை கொண்ட ஒரு விளம்பரத்தை உரு வாக்க வாய்ப்பளித்த இந்திய பிளாஸ்டிக் மையத்துக்கும் (Indian Centre for Plastics in the Environment), அதனை உரிய முறையில் அங்கீகரித்த கல்கி சதாசிவம் டிரஸ்ட்டுக்கும் நன்றி கூறினார் ஜெயராமன்.



• மாணவிகளுக்கு உதவித் தொகை...



• ராம்நாராயண் உரை...

திரு. சதாசிவம் ஆனந்த விகடனில் விளம்பர மேலாளராக இருந்தபோதும், பின்னர் கல்கியை ஆரம்பித்தபோதும் நூதனமான யுக்திகளைக் கையாண்டு விளம்பரம் சேகரிப்பார். அதே சமயம், சமூகச் சீர்கேட்டுக்குத் துணைபோகக் கூடிய விளம்பரங்களை வெளியிடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார். அதனால்தான், கல்கியில் மது மற்றும் சிகரெட் விளம்பரங்கள் வெளியாவ தில்லை. விளம்பரத்துறை சாதனையாள ரான சதாசிவம் நினைவாக ஆண்டு தோறும், சிறந்த விளம்பரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, கல்கி சதாசிவம் அறக் கட்டளை, விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

அதன்படி, கடந்த ஓராண்டுக் காலத் தில் தமிழ் நாளிதழ்கள் மற்றும் பத்திரிகை களில் வெளியான விளம்பரங்களை, கிழக்கு பதிப்பகத்தின் பத்ரி சேஷாத்ரி மற்றும் இன்டக்ரேடட் பிராண்ட்-காம் நிறுவனத்தின் வித்யா இருவரும், நடுவர் களாக இருந்து ஆழ்ந்து பரிசீலித்து, விருதுக்குரிய விளம்பரத்தைத் தேர்வு செய்தனர். விளம்பரத்துக்கு விருதினை வழங்கிய கையோடு, அதனைத் தேர்வு செய்த நடுவர்களுக்கும் நினைவுப் பரிசு களை வழங்கி கௌரவித்தார் வாணவ ராயர்.

ஆண்டுதோறும் விளம்பரத்துக்கான விருதைத் தவிர, இதழியல், வெகுஜனத் தொடர்பியல் மற்றும் விஷுவல் கம்யூனி கேஷன் துறைகளில் படிக்கும் தகுதி வாய்ந்த மாணவ, மாணவிகள் இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து, தலா ஐயாயிரம் ரூபாய் உதவித் தொகையும் அளித்து வருகிறது கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை. இவ்வாண்டும் இரண்டு மாணவிகளுக்கு உதவித் தொகை வழங் கப்பட்டது. அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின், முதலாண்டு எம்.எஸ்ஸி 'விஸ்காம்' மாணவி கிருத்திகாவும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் முதலாண்டு எம்.ஏ. கம்யூனிகேஷன் மாணவி சங்கீதா ஆனிமேரியும், இவ் வாண்டு உதவித் தொகை பெற்றனர்.

பிளாஸ்டிக் இன்று மிகவும் சர்ச் சையை ஏற்படுத்தும் ஒரு சமாசாரம். இதனால் சுற்றுச்சூழல் கேடு ஏற்படுவது குறித்து அனைத்துத் தரப்பினருமே எதிர்ப்புக் குரல் எழுப்புகிறார்கள். ஆனால், இன்றைய விஞ்ஞான யுகத்தில் பிளாஸ்டிக் என்பது அத்தியாவசியமான, தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பல்வேறு துறைகளிலும் பிளாஸ்டிக்கின் பயன்பாடு அதிகரித்துக் கொண்டு வரு கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிளாஸ்டிக்கை ஆக்கபூர்வமான பணி களில் பயன்படுத்திக் கொள்ளவும், அதன்

கேடுகளை புத்திசாலித்தனமான முறைகளில் சமாளிக்கவும், வழிகாட்டும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது இந்திய பிளாஸ்டிக் மையம். அதன் சார்பில் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட, பிளாஸ்டிக் துறை விஞ்ஞானியான கஷில் வர்மா, பிளாஸ்டிக்கை மதிப்புக் கூட்டிய பொருளாக, சுற்றுச்சூழல் கேடு விளைவிக்காத முறையில் பயன்படுத்துவதற்கு, மேற்கொள்ள வேண்டிய பணிகளை எடுத்துரைத்தார்.

சர்ச்சைக்குரிய பிளாஸ்டிக் பயன்பாடு போலவே அமைந்துவிட்டது, அன்றைய தினம், சிறப்பு விருந்தினர் கிருஷ்ண ராஜ் வாணவராயர் பேசவிருந்த தலைப்பும்: 'நவீன சமுதாயத்தில் மீடியாவின் பங்கு.'

தமது சொற்பொழிவைத் தொடங்கியதுமே, வாணவராயர், ''கல்கி ஒரு பத்திரிகையே இல்லை" என்று ஒரு போடு போட, அரங்கில் பரபரப்பு. எல்லோரையும் தவிக்கவிட்டு பின்பு தாமே அதற்கு விளக்கமளித்தார். "கல்கி, வெறும் பத்திரிகை இல்லை. ஆம், அன்றைய காலகட்டத்தில் சுதந்திர உணர்வுக்கு வடிவம் தந்த கல்கி, இன்றும் கலாசாரத்தின் பிரதிபலிப்பாய் விளங்குகிறது. மக்களின் ரசனையை மேம்படுத்துகிறது. எனவே கல்கி ஒரு பத்திரிகை இல்லை... இயக்கம்" என்றார்.

''ஒரு சிலர் கனவு காண்பார்கள்; இன்னும் சிலர் கனவுகளை நனவாக்குவார்கள். இந்த இருவரும் ஒன்று சேர்கிற போது வெற்றி நிச்சயம். அப்படித்தான் கல்கி கிருஷ்ணமூர்த்தி, சதாசிவம் இருவரும் வெற்றியை சாதித்தனர். அவர்களுக்கு பரமாச்சாரியாரின் ஆசி, ஆசானாக இருந்த ராஜாஜியின் வழிகாட்டுதல், எம்.எஸ். அவர்களின் ஆதரவு எல்லாம் அமையப் பெற்றது. அப்படிப்பட்ட கல்கிக்கு அரணாக இருப்பவர்கள் வாசகர்கள். தரமான பத்திரிகையை அரவணைக்கிற தரமான வாசகர்கள்" என்று கல்கி வாசகர்களுக்கு 'ஷொட்டு' கொடுத்த வாணவராயர், ''பொதுவாக பத்திரிகை விற்பனை அதிகரித்தால், அதனை நடத்துபவர்களுக்கு நல்லது. ஆனால் கல்கியின் விற்பனை அதிகரித்தால், இந்த சமுதாயத்துக்கு நல்லது" என்று குறிப்பிட்டார்.

''நான் பத்திரிகைத் துறையோடு சம்பந்தப்படாதவன் என்பது ஒரு அனுகூலமான விஷயம். அவர்களுக்குள்ள நெருக்கடிகள், நிர்ப்பந்தங்கள், பொறுப்புகளை என்னால் நன்றாகவே புரிந்து கொள்ள முடிகிறது'' என்றதோடு, 'இன்றைய நவீன சமுதாயம்' என்பதற்கு அற்புதமானதொரு விளக்கமும் தந்தார் வாணவராயர்.

அவரின் அந்தப் பேச்சை அவையினர் மிகவும் ரசித்தனர் என்பதற்கு அடிக்கொருதரம் அரங்கில் எழுந்த கைத்தட்டலும், சிரிப்பலைகளுமே சாட்சி.



• கஷில் வர்மாவுடன் கல்கி ராஜேந்திரன்...

• பத்ரி சேஷாத்ரிக்கு நினைவுப் பரிசு...



வாணவராயரின் சொற்பொழிவின் முழுவிவரம் அடுத்த இதழில்...

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**

மகுட வைரம்

விஷ்வக்ஸேனன்

போர்த் தூதனாக வந்த அந்த ராஷ்டிர கூடன் உச்சரித்த அந்தப் பெயர் நிச்சயம் மந்திரமோ, மாயமோ, கண் கட்டி வித்தையோ அல்ல. ஆனால் அந்தப் பெயர், பாண்டிய மன்னர் தலைமையில் கூடியிருந்த மந்திராலோசனை சபையில் ஏற் படுத்திய விளைவு இந்திர ஜாலமாயிருந்தது.

கோபமும், ஆவேசமுமாகக் கூச்சலிட்ட உபதலைவர்களும், தூதன் என்றும் பாராமல் 'அவனை வெட்டியெறியுங்கள்' என்று உக்கிரமாகக் குரல் கொடுத்தவர்களும் சட் டென்று அமைதியானார்கள். உருவப்பட்ட வாட்கள் மீண்டும் உறைகளுக்குள் புகுந்தன. உஷ் ணம் உதயமாகத் தொடங்கிய மன்னன் முகத்திலும் மீண்டும் நிதா ணம் பரவியது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தப் போர் தவிர்க் கப்படக் கூடாதென்ற நோக் கத்தில், அகந்தையும், ஆணவமும் கொண்ட ராஷ்டிரகூடனாகத் தேர்ந்தெடுத்து பல்லவ மன்னன் தூதாக அனுப்பியிருக்கிறான் என்பதைக் கணநேரத்தில் புரிந்து கொண்ட பாண்டிய வரகுணன் முகத்தில் முறுவலொன்றும் மலர்ந் தது.

ராஷ்டிர கூடத் தூதன் பரிகாரங்களாகக் கூறியவை சபையிலிருந்தவர்களை அத்தனை தூரம் கொதிக்கச் செய்பவையாகத் தானிருந்தன.

“பாண்டி மன்னர் உயிர் பிழைக்கவும், மீண்டும் பாண்டிய அரியணையில் அமரவும் விரும்பினால், முதலில் துருவனுடன் சேர்ந்து போரிட்டுக் கொண்டிருக்கும் பாண்டியர் படைப்பிரிவை திரும்பப் பெற்றுக் கொண்டு, மகாராஜா கோவிந்தரின் மன்னிப்பைப் பெற வேண்டும். சோழ நாட்டில் எமது மகாராணியாரின் அதிகாரங்களில் தலையிடாமல் விலகுவது மட்டுமின்றி, மகாராணியாரின் சகோதரர் ராஜமாதுலரும், படைத்



தலைவர் ராகுலரும் அவரால் மடிய நேர்ந்த தற்கு அபராதமாக, ஓராண்டுக் காலத்துக்கு கொற்கையில் விளையும் முத்துக்கள் அனைத்தையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். இறுதியாக எம்மிடமிருந்து



மாணிக்க ஆரத்தைக் களவாடிய வனை, கரங்களைக் கட்டி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். அவனை இங்கிருந்து இழுத்துச் சென்று காஞ்சியில் உரிய தண்டனையை அளிப்போம்."

ராஷ்டிரகூடன் பரிகாரங்களைக் கூறி முடிக்குமுன் அவையில் எழுந்த உக்கிர அலை, படை நடத்தி வந்தி ருப்பவர் நந்திவர்மனேதான் என்ப தைக் கேட்ட பின்னரே அடங்கத் தொடங்கியது.

தூதனை நோக்கிய பாண்டிய மன்னனின் வார்த்தைகள் நிதான மாகவே வந்தன. "ராஷ்டிர கூடனே, வீரனாயிருப்பவனுக்கு அடக்கம் அவசியம். அதிலும் தூதனாக வரு பவனுக்கு பணிவும், அமைதியான பேச்சும் மிக அவசியம். உன்னைத் தூதாக அனுப்பியிருப்பதன் நோக்கம் போர் நடந்தே தீரவேண்டும் என்பது தான் என்று புரிகிறது. நீ கூறியவை குற்றங்களல்ல. அநீதி எங்கு நடந் தாலும் தடுப்பதும், அநீதி இழைக் கப்பட்டவரைக் காப்பதும், உதவு வதும் தமிழ் மன்னர் கடமை. துரு வனிடமும் சோழ மண்ணிலும் பாண்டியர் படைகள் இருக்கக் கார ணம் இதுதான். களவாடியதாக நீ கூறும் மாணிக்கம் சோழ அரச வம்சத்துக்குரியது. உரிய இடத்தை அது மீண்டும் அடைந்திருக்கிறது. அதை மீட்டு வந்த பராந்தகரையோ, அந்த மாணிக்கத்தையோ திரும்ப உங்களிடம் அளிக்க இயலாது. முதலில் நீ உயிருடன் இந்தச் சபையி லிருந்து வெளியேற, உடனே வந்த வழியே திரும்பச் சென்றுவிடு."

''எனில், நாளை உதயத்தில் போருக்குச் சித்தமாக இருங்கள்'' என்ற ராஷ்டிர கூடன், உடன் வந்த பல்லவ உபதலைவனை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பி வெளியே நடந்தான்.

அவன் வெளியேறிய பின்பு, அதுவரை அமைதியாக இருக்கையில் அமர்ந்திருந்த பல்லவ உப தலைவன் "மன்னவா" என்று அழைத்தான்.

''நீங்கள் ஏதும் கூற விரும்பினால் கூறலாம்'' என்றான் மன்னன்.

''மன்னவா, என்னுடன் வந்த ராஷ்டிர கூட தூதன் கூறியவை யாவும் மகாராணி யார் கூறியனுப்பியவை.''

''புரிகிறது.''

''பல்லவ மன்னர் கூறியனுப்பியதும் ஒன்றிருக்கிறது.''

''என்ன கூறியனுப்பினார்?''

''எக்காரணத்தை முன்னிட்டும் இந்தப் போர் தவிர்க்கப்படக் கூடாதென்பதற் காகவே கங்க, ராஷ்டிர கூட படைத்தலை வர்களைத் தவிர்த்து, தாம் தலைமையேற்று வந்திருப்பதாகவும், போரின் இறுதியின் தாம் கூறுவதைத் தயங்காமல் செய்து விடும் படியும் கேட்டுக் கொண்டார்.''

''பிறகு...?''

''கங்க வீரர்களையும் சேர்த்து பதினா யிரம் வீரர்கள் இருப்பதால், நாளைய போரில் எமது வியூகம் ஸர்ப்பவியூகமாக இருக்கும் எனவும், இறுதிப் பகுதியில் பல்ல வர் படைப் பிரிவு இருக்குமெனவும் தெரி விக்கச் சொன்னார்...''

பல்லவ மன்னனின் அந்தப் போர் நாடகத்தில் தானும் கூட ஒரு பாத்திரம்தான் என்பது புரிந்தது பாண்டிய வரகுணனுக்கு. நந்திவர்மன் கூறியவற்றை ஏற்றுக் கொள்வ தாக வாக்களித்த பாண்டிய மன்னன், தூதனுக்கு விடையளித்தான்.

காவிரியின் வடகரையில் போர் மேகங் கள் இடியும் மின்னலுமாகப் பொழியத் தயாராயின.

மறுதினம் உதயமான கதிரவன் அடுத்து நிகழவிருந்த போரை எண்ணி உக்கிரமடைந்ததாலோ என்னவோ, சிவந்த தன் கிரணங்களை வீசிக் கொண்டு மேலே உயர்ந்தான். இரு கரைகளிலும் எத் தனையோ போர்களைக் கண்டிருந்த காவிரி, அன்று தன்னுடன் கலக்கப் போகும் குருதியை எண்ணி சங்கடத்தில் சலசலத்து ஓடிக் கொண்டி ருந்தது.

பெரும் ஸர்ப்பமொன்று படுத்துக் கிடப் பது போன்று நீண்டு கிடந்த ராஷ்டிரகூடர் அணிவகுப்பில், பாதிக்கும் மேல் ராஷ்டிர கூடரும், கங்க வீரர்களும் நின்றிருக்க, பல்லவ வீரர்கள் ஸர்ப்பத்தின் வால் பகுதியில் அணிவகுத்திருந்தார்கள். முன்னணியில் நந்திவர்மன் பூரண கவசத் துடன் தன் பெரும் வாளை ஏந்தி வெண்ணி றப் புரவியில் அமர்ந்திருந்தான். போர் உக்கிரமடைந்த பின்பு அவன் உபயோகிக் கும் பெரும் போர்வில், புரவியின் பக்க வாட்டில் பேழையினுள் தாகத்துடன் காத்திருந்தது.

ஸர்ப்பத்தின் நேர் எதிரில் சோழர் படை யின் முகப்பில் விக்கிரம வரையனும், கங்க வீரர்களுக்கு நேர் எதிரில் உத்தம பாளை யத்து போர்க்களிறுகளும் நின்றன. தன் புரவிப் படையின் முகப்பில் போர் ரத மொன்றில், இளையவீரன் ராஜசிம்மன் தன் தந்தை இந்தள தேவனைக் கொன்ற ராஷ்டிர கூடரைப் பக்கவாட்டில் ஊடுருவித் தாக்க சித்தமாக நின்றிருந்தான். எல்லாவற்றுக்கும் முன்னதாக, பாண்டிய வரகுணனின் சாம் பல் நிறப்புரவி நின்றது. பராந்தகன் அருகில் மன்னனின் சமிக்ஞைக்காகக் காத்திருந்தான்.

போர் முரசுகள் ஒலித்து அடங்கியதும், தன் வாளை உயர்த்தி தாக்குதலைத் தொடங்க உத்தரவிட்ட நந்திவர்மன், புரவி யைப் பாய விட்டான்.

இரு புறங்களிலிருந்தும் ஜில்லென்று உயர்ந்து எழுந்த ஈட்டிகள் பெருவேகத் துடன் எதிர்ப்புறத்தில் இறங்கின. காற்றைக் கிழித்துப் பறந்த அம்புகள் ஏதோ மழை பொழிவது போல் பொழியத் தொடங்கின. வாட்கள் மோதும் ஒலி பலமாக ஒலித்து, கரையோரத்து மரங்களிலிருந்த பட்சிகளை அலறிப் பறந்தோடச் செய்தது. யானை களின் பிளிறல்களும், புரவிகளின் கனைப் பொலிகளும் பலமாக எழுந்தன.

அந்தப் போருக்காகக் காத்திருந்த சோழ வீரர்கள் வெகு காலமாக அடக்கிய உணர்வு களைத் தொகுத்து, சோழ மண்ணில் ராஷ் டிரகூடர் புரிந்த அநீதிகளுக்கு தீர்ப்புகளை தாராளமாக வழங்கத் தொடங்கினார்கள்.

சானியா

''வாடகைக்கு சைக்கிள் கேக்கறீங்களே... யாராவது தெரிஞ்சவங்க பேரைச் சொல்லுங்க...!''

''சச்சின், சானியா மிர்ஸா, ஐஸ்வர்யா ராய்..!''

- நாமக்கல் பாலு



விக்கிரம வரையரின் நீண்டு வளைந்த வாள், போர்க் கவிதைகளை அசுர வேகத்தில் தீட்டியது.

ரிஷப இலச்சினை பொறிக்கப்பட்ட வாளைக் கரகரவெனச் சுழற்றியபடி முன்னேறிய பராந்தகன், எதிரிலிருந்த ராஷ்டிர கூடரை ஊடுருவி ஸர்ப்பத்தின் தலைப் பகுதியைத் துண்டாக்கி, விக்கிரம வரையரின் பிரிவுக்கு இடையே நெருக்கினான். ரணதீரப் பாண்டியனின் போர்க் களிறுகள் தடதடவென பூமி அதிர நடந்து கங்க வீரர்களை மிதித்தும், துவைத்தும், துதிக்கைகளில் இருந்த நீண்ட இரும்புக் கழிகளால் தாக்கியும் துவம்சம் செய்தன. போர் ரதத்தில் ஏறி ராஷ்டிர கூடர்களிடையே புகுந்துவிட்ட இளைய ராஜசிம்மன் செய்த போர் அசாத்தியமாயிருந்தது. அவனது மெல்லிய நீண்ட வாள் ஏதோ கால ஸர்ப்பம் போல் சுழன்று சுழன்று ராஷ்டிர கூடர்களை மளமளவெனச் சரித்தது. அவனுக்குப் பாதுகாப்பளித்தபடியே சோழ வீரர்களுடன் தொடர்ந்த பகதத்தனிடமிருந்து அவ்வப்போது வெளிப்பட்ட அசுரச்சிரிப்பு, ராஷ்டிர கூடர்களைத் திகில் கொள்ள வைத்தது.

உச்சிப் பொழுதுக்குப்பின் உக்கிரமடைந்த அந்தப் போரில், ராஷ்டிரகூடர் முக்காலுக்கும் மேல் சோழ மண்ணில் தங்கள் குருதியை வழியவிட்டு, செய்த அநீதிகளுக்குப் பரிகாரம் தேடிக் கொண்டிருந்தார்கள். கங்க வீரர்களின் கரங்களும் மெல்ல சளைக்கத் தொடங்கின. துண்டுகளாகச் சிதைக்கப்பட்டுவிட்ட ஸர்ப்ப வியூகம் மெல்ல அழிந்து கொண்டிருக்க, காவிரியின் வெள்ளம் சிவந்து பிரவாகமாக ஓடியது.

மாலைப் பொழுது முற்றத் தொடங்கியதும் நந்திவர்மன் அந்தப் போர் நாடகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்திருக்க வேண்டும். அதுவரை பாண்டிய மன்னனைச் சந்திக்க மறுத்து போக்குக் காட்டிய நந்திவர்மனின் வெண் புரவி, எதிர்ப்பட்டவர்களை விலக்கிக் கொண்டு மன்னனை நோக்கி முன்னேறியது. சுற்றி நின்ற வீரர்கள் விலகி நிற்க, இரு மன்னர்களின் வாட்களும் பொறி பறக்க மோதத் தொடங்கின. சுழன்று சுழன்று மேலும் கீழும், இடமும் வலமுமாகச் சுழன்ற நந்திவர்மனின் வாள், தமிழகத்தின் வாள் வீச்சில் எத்தனை விதமான கலைகள் இருக்கின்றன என்று காட்டத் துவங்கியது. இரண்டொரு சுழற்சிகளுக்கொருமுறை வரகுணனின் கழுத்திலும், தோள்களிலும் தீண்டி, சிறு காயங்களையும் ஏற்படுத்தியது. வரகுணனின் வாள் வீச்சும் அடுத்து சோழர் முறைக்கு மாறி நந்திவர்மனை எந்தப் பக்கத்திலும் சென்று தடுத்துத் தாக்கத் தொடங்கியது. தங்கள் போர் அனுபவங்களை நிருபித்த இரு புரவிகளும் பக்கவாட்டிலும், சட்டென்று முன்னாலும் பாய்ந்தும், பின் வாங்கியும் சக்கரவட்டமாகச் சுழன்றும் இந்திரஜாலம் காட்டின. இரு மன்னர்களின் அந்த அற்புத வாள் வீச்சுகளை ரசித்த படைத் தலைவர்களின் வேக வீச்சு குறைந்தது.

கனவேகமாக இறங்கிச் சுழன்ற நந்திவர்மனின் பெரும்வாள் வரகுணனின் வாளை விலக்கி, அவ்வப்போது மார்பையும் கழுத்தையும் நெருங்கினாலும், சரியாக இரண்டு விரற்கடை தூரத்தில் நின்று, பின்வாங்கி, மீண்டும் சுழன்று, அவன் கை லாகவத்தின் எல்லை எதுவென்று நிருபித்தது.

அடுத்து வரகுணனின் வீச்சும் வேறு முறைக்கு மாறியது. நந்திவர்மனின் வாளோடு வாள் சேர்த்துப் பதித்து, பக்கவாட்டில் சுழன்று, இடதும் வலதுமாய்த் திருப்பி உயர்ந்தது. அதே முறையில் மூன்றாவது சுழற்சியில் கைப்பிடிக்கு வெகு அருகில் பதிந்து சுழன்று, உயர்ந்த வேகத்தில், நந்திவர்மனின் வாளைப் பறித்து உயரே பறக்கவிட்டது. அதே வேகத்தில் வாளை இறக்கி, போர் வில்லைக் கட்டியிருந்த பேழையின் கயிற்றைத் துண்டாக்கினான் வரகுணன். பேழை தரையில் விழுந்து புரண்டது.

நிராயுதபாணியாக நின்றான் நந்திவர்மன்.

(தொடரும்)

அப்பப்பா... இந்த சம்மர் ஸீஸன் வந்துடுத்துன்னாலே மனுஷா வெளில தலை காட்ட முடியலப்பா...அதுக்காக வெளில போகாம இருக்க முடியுமோ! சரின்னு வெளில போய்ட்டு வீட்டுக்குள்ள நுழைஞ்சா, தாகம் தொண்டையை வறட்றது... 'எத்தனை நாள்தான் நன்னாரி சர்பத்தையே சாப்பிடறது... வேற ஏதாவது புதுசா ஒரு ஜூஸ் சொல்லித்தாங்களேன் மாமி'ன்னு கடலூர் தேவகி நேக்கு ரொம்பநாளா அலுக்காம லெட்டர் போட்டுண்டே இருந்தா... அதனால இந்த வாரம் ஒரு சூப்பர் ஜூஸ் சொல்லித் தரேன்...



ரோஸ் டிலைட்

இதுக்கு முக்கியமா தேவைப்படறது ரோஜாப்பூ... நல்ல ஃப்ரெஷ்ஷா இருக்கற தாப் பார்த்து, இருபத்தஞ்சு எடுத்துக்கோங்கோ. ரோஜா இதழ்களை பக்குவமா எடுத்து ஒரு பாத்திரத்துல கொட்டி, ஒரு டேபிள் ஸ்பூன் லெமன் ஜூஸை விட்டு 24 மணி நேரத்துக்கு ஜலத்துல ஊற வச்சிடுங்கோ... இந்த ஜூஸ் செய்யறதுக்குத் தேவைப்படற மற்ற ஐட்டம்ஸைச் சொல்றேன், நோட் பண்ணிக்கோங்கோ.. சர்க்கரைப் பாகு 15 டேபிள் ஸ்பூன், ஜலம் 4 கிளாஸ், அப்புறம் மூணு எலுமிச்சம் பழத்தை ஜூஸ் பிழிஞ்சி எடுத்து வச்சிக்கோங்கோ. ஊற வச்சிருந்த ரோஜா இதழ்களைப் பிழிஞ்சி வெளில எடுத்துடுங்கோ. மீதமிருக்குற ரோஸ் வாட்டரை மட்டும் தனியா எடுத்து வச்சிடணும். இப்போ ஒரு கிளாஸ்ல, ரெண்டு டேபிள் ஸ்பூன் சர்க்கரைப் பாகு, ரோஸ் வாட்டர் ஒரு டேபிள் ஸ்பூன், அரை மூடி லெமன் ஜூஸ் மூணுத்தையும் கலந்து ஜலத்தை சேர்த்து, ஐஸ் க்யூப்ஸை கலந்தேன்னா 'ரோஸ் டிலைட்' சூப்பரா ரெடி! ரோஜாப்பூ கொஞ்சம் காஸ்ட்லி... வெயிலுக்காக அட்ஜெஸ்ட் பண்ணிக்க மாட்டேளா, என்ன! ○




மைக்ரோவேவ் மாமி

நடக்குமென்பார்; நடக்கும்!



அக்னிசர்மா பக்கம்




மேஷம் : உங்க அறிவும், திறமையும் பளிச்சிடற நேரங்க இது. எதிர்பாராத திருப்பங்கள் சிலது காத்திருக்கு. அத்தனையும் அனுகூலம்தான். பொருளாதாரம் சீரா இருந்து வரும். ஓரளவு செலவுகள் கூடினாலும் சிக்கனம் கை கொடுக்கும். சுபச் செலவுகளும் காத்திருக்கு. ஆபீஸில் சாதகமான போக்கு இருக்கும். சிலருக்கு புதிய பதவி, இடமாற்றம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சிறு பிரச்னைகள் வந்து போகும். கேட்டபடி உதவிகள் வந்து கை கொடுக்கும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

ரிஷபம் : தெய்வ பலம் கூடுறதால சகல காரியங்களும் வெற்றி பெறும். பெண்கள் தரும் உதவி சமயத்தில் கை கொடுக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். பண நடமாட்டம் சரளமாக இருக்கும். ஆபீஸில் மேற்கொண்ட வேலைகள் வெற்றிகரமா முடியும். சிலருக்குப் பயணங்கள் போக நேரிடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத முன்னேற்றமும், தனலாபமும் கிட்டும். குடும்பத்தில் இதுவரை இருந்த பணக் கஷ்டம் விலகி சுபிட்சம் ஏற்படும். பெண்களுக்கு பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆடை ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சியைக் கூட்டும்.




மிதுனம் : தாமத மாகி தடைப்பட்டிருந்த முக்கிய விஷயங்கள் தடங்கல் நீங்கி முன்னேறும். ஆபீசில் புதிய திருப்பங்களும், புதிய பதவிகளும், விரும்பிய இடமாற்றமும் கிடைத்து மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். சுபகாரிய முயற்சிகள் ஈடேறும். பெண்களுக்கு எண்ணம் போலவே எல்லாம் நடக்கும்.



சிம்ம ராசிக்காரரான நடிகை ஸ்ரீப்ரியாவுக்கு மிக மேன்மையான வாரம்!

கடகம் : சகல விதங்களிலேயும் அனுகூலமான திருப்பம் ஏற்படும். எதிர்ப்பு, தடை, குழப்பம் எல்லாம் நீங்கி முன்னேற்றமான பாதை தெரியும். செலவுகள் கொஞ்சம் கூடினாலும், சிக்கனமும், எச்சரிக்கையும் காப்பாற்றும். பதவி உயர்வு, இடமாற்றம் சிலருக்கு நேரிடும். தொழில், வியாபாரம் நிம்மதியாக நடக்கும். குடும்பத்தில் எதிர்பாராத செலவும், ஒற்றுமையும் உண்டாகும். பெண்களுக்கு சுப காரிய நிகழ்ச்சிகளில் ஈடுபாடும், மகிழ்ச்சியும் கூடும்.



23.3.05 முதல் 29.3.05 வரை



சிம்மம் : உங்க துணிவும், தன்னம்பிக்கையும் கூடுற நேரம் இது. புதிய அறிமுகங்கள் சிலதும், பிரபு தனவான்கள் ஆதரவும் கிட்டும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். ஆபீஸில் இதுவரை தீராத பிரச்னைகள் தீர்ந்து நிம்மதி கிட்டும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில திருப்தியான சூழல் நிலவும். குடும்பத்தில திருமணத்துக்குக் காத்திருப்பவர்களுக்கு சுப வேளை கூடி வரும். ஒற்றுமையும், சுபிட்சமும் ஏற்படும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மை ஏற்படும்.

கன்னி : பொருளாதாரம் கொஞ்சம் ஏற்ற இறக்கமா இருக்கும்கிறதால, எச்சரிக்கையா இருக்க வேண்டிய வாரம். வாரக் கடைசியில் தேவைப்பட்ட உதவி வந்த சேர்ந்து கை கொடுக்கும். தெய்வ பலத்தை




அபிவிருத்தி செய்து கொள்வது நன்மை தரும். ஆபீஸில் உங்க திறமைக்கு அங்கீகாரமும், பாராட்டும் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பழைய கடன் தொல்லைகள் மறைந்து முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் ஆரோக்கியத்தை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டிய நேரம். நண்பர்கள், உறவினர் உதவி செய்வார்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து மகிழ்ச்சியைக் கூட்டும்.



துலாம் : துணிவும், நம்பிக்கையும் வழி நடத்தி வெற்றிகளைத் தேடித்தரும் வாரம் இது. பெண்களால் சில அனுகூலங்கள் ஏற்படும். நல்லவர்களால் இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். எதிர்பாராத பண வரவு உண்டாகும். ஆபீசில் சுமுகமான சூழல் நிலவும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். கூட்டுத் தொழில் முன்னேற்றம் காணும். குடும்பத்தில் பிரச்னைகள், சஞ்சலங்கள் தீர்ந்து நிம்மதி ஏற்படும். சுபச் செலவுகள் சில ஏற்படும். பெண்களுக்கு உற்சாக மனநிலை ஏற்படும்.

விருச்சிகம் : உங்க காட்டில கோடை மழை பெய்யற நேரங்க இது. எதிர்ப்பு, தடங்கல் எல்லாம் மறைந்து சகல விதத்

பரிகாரம்



‘எத்தனை கோயில் சுத்தியாச்சு, எல்லாப் பரிகாரமும் பண்ணியாச்சு. முகூர்த்த நாளெல்லாம் போயிட்டேயிருக்கே. வர்ற வரன் எல்லாம் தட்டிப் போயிட்டேயிருக்கே’ன்னு கவலைப்படற பெற்றோரா? கவலையை விடுங்க. கல்யாணமா, குழந்தை பாக்கியமா, எல்லாத் தடைகளையும், தோஷங்களையும் நீக்கி எந்தக் குறையானாலும் நிவர்த்தி செய்து நிறைவேற்றிவைக்கவே இருக்கிறார் மெய்யூர் வரப்ஸாதி ஆஞ்சநேயர். ஞாயிற்றுக்கிழமையில இந்த வரப்ரஸாதி ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சார்த்தி வேண்டிக்கிட்டா போதும். ஆனா ஒண்ணு, சுப காரியம் முடிஞ்சதும், இவர்கிட்ட வந்து சொல்லிட்டுப் போகணும்.

செங்கல்பட்டிலிருந்து பாலாற்றைத் தாண்டி வலது பக்கம் திரும்பினா, மூணு கிலோ மீட்டர்தான் இந்த மெய்யூர்.

– வி


'நடக்குமென்பார் நடக்கும்' பகுதி, வரும் தமிழ்ப் புத்தாண்டு முதல் புது வடிவம் பெறுகிறது. உங்கள் எதிர்காலம், தொழில், திருமணம், படிப்பு என்று எந்த சந்தேகமானாலும், எந்தக் குறையாயிருந்தாலும், எழுதியனுப்புங்கள். உங்கள் பெயர், விலாசம், தொலைபேசி எண் இவற்றுடன், உங்கள் ஜாதகத்தின் நகலையும் கட்டாயம் அனுப்ப வேண்டும். உங்கள் சந்தேகங்களுக்கு விடையும், குறைகளுக்கு நிவர்த்தியும் கூறத் தயாராக இருக்கிறார் ஜோதிடர் **தஞ்சை பரத்வாஜ்.**






திலேயும் முன்னேற்றம் கூடி வரும். பிரபு தனவான்கள் ஆதரவு கை கொடுக்கும். ஆபீஸில் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து சுமுகமான சூழல் நிலவும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பதவி உயர்வு, இடமாற்றம் சிலருக்குக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராளமான வரவும், முன்னேற்றமும் உண்டாகும். கூட்டுத் தொழில் முன்னேற்றம் காணும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை கூடும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

தனுசு : எதிர்பாராத பயணமும், சந்திப்புகளும் உங்களுக்கு உற்சாகத்தையும், முன்னேற்றத்தையும் கூட்டக் காத்திருக்கு. தாமதமாகி நின்ற முக்கியக் காரியங்கள் மளமளன்னு முன்னேறத் துவங்கும். தேவைக்கேற்ற பண வசதி உண்டாகும். ஆபீஸ்ல சிறு குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். செயல்ல நிதானமும், பேச்சில பொறுமையும் அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமுகமான சூழ்நிலைதான் நிலவும்னாலும், புதிய முதலீடுகள்ல எச்சரிக்கையா இருப்பது அவசியம். குடும்பத்தில ஏற்றமான நேரம். சுபகாரியங்கள் ஈடேறும். பெண்களுக்கு எதிர்பாராத பொருள் வரவு உற்சாகமூட்டும்.



மகரம் : தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு கூடி உங்களுக்குப் பக்கத்துணையா நின்னு சகல காரியங்கள்லேயும் வெற்றி தேடித்தரும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எதிர்ப்புகள் மறையும். ஆபீஸ்ல எல்லா வகையிலும் மேன்மையான வாரம். முக்கியமான காரியங்களும், உங்க கோரிக்கைகளும் நிறைவேறும். தொழில்; வியாபாரத்தில் பொருளாதார நெருக்கடி குறையும். குடும்பத்தில் சுபமங்கள காரியம் கை கூடும். ஒற்றுமையும், மகிழ்ச்சியும் கூடும். பெண்களுக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.



கும்பம் : எடுத்த காரியங்கள் எல்லாத்தையும் உங்க முழுத் திறமையையும் காட்டி வெற்றிகரமா முடிப்பீங்க. பிரச்னைகள் வந்து சிரமப்படுத்தினாலும் தளர்ந்து போகாம இருங்க. எல்லாம் சரியாயிடும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள். தொழில், வியாபாரத்தில கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. குடும்பத்தில மகிழ்ச்சியும், சுபகாரியமும் கூடும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சி கூட்டும்.



மீனம் : உற்சாகமான மனநிலையும், ஆரோக்கிய மேன்மையும் மகிழ்ச்சியைக் கூட்டும். எடுத்த காரியங்களெல்லாம் திட்டமிட்டபடி வெற்றிகரமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான வாரம். கூட்டுத் தொழிலில் தனலாபம் கூடும். குடும்பத்தில் குதூகலமும், ஒற்றுமையும் கூடும். சுபச் செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.



நீங்கள் கேட்டவை—தராசு

பப்பு யாதவ் பகவத் கீதை படிக்கிறாரே..?

• நிவேதிதா, சென்னை - 61

? அண்மையில் சில மாணவிகள் தங்கள் பாடப் புத்தகத்தை விற்று நடிகர் விஜய்யைச் சந்திக்க வந்ததாகப் பேப்பரில் படித்தேன். இத்தகைய சீர்கேடுகளுக்குத் திரைப்படங்கள்தானே காரணம்?

! திரைப்படங்களுக்கும் நடிகர்களுக்கும் நம் சமுதாயமும் மீடியாவும் கொடுக்கிற அளவுக்கதிகமான முக்கியத்துவம்தான் காரணம்.

• சம்பத், வேலாயுதம்பாளையம்

? கோயில்களில் பெண்களை அர்ச்சகர்களாக்குவது போன்ற புரட்சிகள் தேவைதானா...?

! வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படும் ஒரு புதிய விதிமுறை புரட்சியாகாது. அது வெற்றியும் பெறாது. மக்கள் உணர்வுகளைத் தொட்டு, அவர்கள் ஆதரவுடன் உருவாகும் மாற்றம்தான் புரட்சி.

• கே.வி.ராமன், சென்னை - 73

? ஹிந்து நாளிதழ் ஒவ்வொரு நாளும் மில்லியன் பிரதிகள் வெளியீடு செய்யும் அரிய சாதனை குறித்து...?

! மில்லியன் வாழ்த்துக்கள்!

• ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? தமிழ்நாட்டில், 2007ம் ஆண்டுக்குள் அனைத்துத் துறைகளிலும் மின் ஆளுகை முறையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக, தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் விவேக் ஹரி நாராயண் கூறியுள்ளாரே?

! கம்ப்யூட்டரை வைத்துக்கொண்டு நிர்வாகத்தைச் சீர்செய்துவிட முடியாது. அவற்றை உபயோகிப்போர் சீரான நிர்வாகம் தர உறுதி கொண்டால்தான் முடியும்.

• வெ.நீலா, கோபாலசமுத்திரம்

? அமரர் கல்கி நினைவாக எந்த தெருவுக்கும் பெயர் வைக்கப்படவில்லையே...?

! இருக்கிறதே! சென்னையில் அடையாறு பலகை வாராவதி சாலையின் ஒரு பகுதிக்கு, கல்கி நூற்றாண்டின்போது கல்கி



• பயணமும் இலவசமும்!

• வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி

? நடிகர் விஜயகாந்த் ஊர் ஊராகச் சென்று இலவசமாக மக்களுக்குப் பொருள்கள் வழங்குவது எதைக் காட்டுகிறது.

! அரசியல் கலப்பின்றிச் செய்தால் அறம். அரசியல் நோக்கில் செய்தால் தவறான முன்னுதாரணம்.



• சபையும் சாலையும்...

• கணே. சிவப்பிரகாசம், கடலூர்

? சட்டசபைக்குச் செல்லாத கருணாநிதி சாலை மறியலுக்கு மட்டும் சென்றது சரியா...?

! சட்டசபைக்குத்தான் போவதில்லை, சாலை மறியலுக்காவது போகலாமே என்று எண்ணியிருக்கக் கூடும்.

கிருஷ்ணமூர்த்தி சாலை என்று பெயர் மாற்றப்பட்டது.

● **ஆதினமிளகி, வீரசிகாமணி** ❒

? *பீஹார், ஜார்க்கண்ட் மாநிலங்களின் சட்டசபைகளை அமைக்க வகையின்றி, எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாமல் வாக்களித்து அரசியல்வாதிகளைத் திணறடித்து விட்டார்களே வாக்காளர்கள்... இது அவர்களது அரசியல் விழிப்புணர்ச்சியைத்தானே காட்டுகிறது?*

! விழிப்புணர்ச்சியை நோக்கிய முதல்படி எனலாம்.

● **கு.கணேசன், மறைமலை நகர்**

? *ஜார்க்கண்ட் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் தனது அதிகார வரம்பைக் கடந்துவிட்டதாக கம்யூனிஸ்டுகள் விமர்சிப்பது பற்றி...?*

! சட்டமன்றமும் நீதிமன்றமும் சமம் என்ற கோட்பாட்டின்படி பார்த்தால் அந்த விமர்சனம் சரியாக இருக்கலாம்; ஆனால், உச்சநீதிமன்றம் மட்டும் இவ்வாறு தலையிடாதிருந்தால் ஜார்க்கண்டில் ஜனநாயகம் செத்துப்போயிருக்கும். இப்போது என்.டி.ஏ. கூட்டணிக்கும் பெரும்பான்மை பிரச்னைதான். ஆனால், அப்பட்டமான தப்புக் கணக்கு தவிர்க்கப்பட்டது, உச்சநீதிமன்றத் தலையீட்டால் தான்.



• கேலியும் கவலையும்!

● **க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? *'என் தலைவிக்கு நான் வணக்கம் செலுத்துவதை எந்த நாய் கேலி செய்தாலும் கவலை இல்லை' என்று சட்டப்பேரவைத் தலைவர் காளிமுத்து பேசியிருப்பது பற்றி...?*

! கேலி செய்தால் கவலைப்படாதவர், கேலி செய்பவரை ஏன் நாய் என்று தூற்ற வேண்டும்!

● **பாக்கியலக்ஷ்மி வெங்கடேஸ்வரன், பாலக்காடு**

? *வேட்பாளரின் அடிப்படையில் இல்லாமல், கட்சியின் அடிப்படையில் தேர்தல் நடத்த வேண்டும் என்கிறாரே தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி?*

! தவறான கருத்து...



• கட்டதும்...



• ...கட்டதும்!

● **எஸ்.எம்.ஷாஜஹான், மேலப்பாளையம்**

? *சமீபத்திய ரிலீஸான 'மாயாவி' எப்படி...?*

! 'பிதாமக'னிலிருந்து ஒன் லைன் ஸ்டோரியைச் சுட்டு, திரைக்கதை அமைத்தாலும், சரியாகச் 'சுடப்'பட்டதால் டேஸ்ட் டபுள் ஓகே!



• சாலையும் சிக்கலும்!

● வேதகதிர்வேல், வேலூர் - 6

? தென்னாப்பிரிக்க டர்பன் நகரில் மகாத்மா காந்தியின் பெயர் சூட்டப்பட்ட தெருவில், விபசாரமும், போதைப் பொருள் விற்பனையும் கொடிகட்டிப் பறக்கிறதாமே..?

! அதனால் மகாத்மாவுக்கு இழுக்கு அல்ல; இதை அனுமதிக்கும் தென்னாப்பிரிக்க அரசுக்குத்தான் இழுக்கு.

மக்கள் மன்றத்தில் யார் நமது பிரதிநிதியாக நுழைவார்கள் என்று தெரியாமல், எப்படி வோட்டுப் போடுவதாம்!

● சாமு, சீர்காழி

? தமிழகத்தில் நாற்பதாயிரம் பேர் போலி உரிமங்களுடன் வாகனம் ஓட்டிக் கொண்டிருக்கிறார்களாமே...?

! போலி என்று தெரிந்தும் 'சம்திங்' கொடுத்து வாங்கிய 40,000 பேர் உள்ளனர் என்பது, நமது சமுதாயத்தின் 'நேர்மைப் பண்பு'க்கு அடையாளம்! இதற்கு வித்திட்ட அரசியல்வாதிகளுக்கு அவமானம்!

● வீ.முத்தையா, திருநெல்வேலி

? இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் பந்தயங்களைப் பார்க்க வாகா எல்லை வழியே ரசிகர்கள் வர ஏற்பாடு செய்யப்பட்டு, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளனவே...?

! அவர்களுள் சிலர் காணாமல் போயிருப்பதுதான் மர்மமும் அதிர்ச்சியும் ஏற்படுத்தும் விஷயம்.

● ஷ.சந்திரன், ஈரோடு

? பப்பு யாதவ் திஹார் சிறையில் பகவத் கீதை படிக்கிறாராமே?

! தவறாக அர்த்தம் பண்ணிக் கொள்ளாமலிருந்தால் பயன் பெறுவார்.

● ஆர். கர்ணன், தனக்கர்குளம் ✱

? தராசாரே! ஒரு மாநில கவர்னர் எப்படிச் செயல்பட வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?

! கட்சிக் கண்ணோட்டத்துடன் செயல்படக் கூடாது. இல்லாத அதிகாரங்களை இருப்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாது. இருக்கிற அதிகாரங்களை விட்டுக் கொடுக்கவும் கூடாது.



• தியாகமும் சோகமும்!

● சியாமளா ஈஸ்வரன், தேவூர் மேட்டுக்கடை

? சோனியா காந்தி தலைமையில் வெற்றி மேல் வெற்றி பெற்ற காங்கிரஸுக்கு, கோவா, ஹரியானா சம்பவங்கள் பின்னடைவைத் தந்து கொண்டிருக்கின்றனவே?

! பிரதமர் பதவியைத் தியாகம் செய்த சமயம் சோனியா காந்தி. இப்போது சோனியா! நாளை 'சோனி' ஆகி விடாமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டால் சரி.

● ஜி. மாரியப்பன், சின்னமனூர்

? 'பார்லிமெண்டை நடத்தவிடாமல் செய்வதால் மக்களின் வரிப்பணம் விரயமாகிறது' என்று பிரதமர் கவலை தெரிவித்துள்ளாரே...?

! இதைவிடவும் வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், இப்படி கூத்தடிப்பதால் பட்ஜெட் போன்ற முக்கியமான விஷயங்கள் சரியாக அலசப்பட்டு, மக்கள் கருத்து பிரதிபலிக்கப்படுவதில்லை. பட்ஜெட், தேவையான திருத்தங்கள் இன்றியே நிறைவேறும் போது மக்களுக்கு ஏற்படும் நஷ்டம் பல மடங்கு அதிகம்.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்: ஆதினமிளகி, செக்கடித் தெரு, வீரசிகாமணி - 627 862, சங்கரன்கோயில் வட்டம், நெல்லை மா.வ.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்: ஆர்.கர்ணன், பெத்தரெங்கப்புரம் தனக்கர்குளம் அஞ்சல், வடக்கன்குளம் - 627 116, நெல்லை மா.வ.

அருள்வாக்கு

இந்தக் காலத்தில் எல்லோரும் நோயும் நொடியுமாக அவஸ்தைப்படுகிற மாதிரி, நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முந்தியெல்லாம் இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அநேகருக்கு மனஸில் நெறியில்லாமல் இருப்பதும், அநேக துராசாரங்கள் வந்திருப்பதும்தான். "சாஸ்த்ராய ச ஸுகாய ச" என்பார்கள் - அதாவது சாஸ்த்ர ப்ரகாரம் நெறியோடு, ஆசாரத்தோடு இருப்பதுதான் ஸௌக்யமாக, ஆரோக்யமாக இருக்கவும் உதவுவது என்று அர்த்தம். இப்போது எச்சில் பார்க்காததாலேயே அநேக வியாதிகள், தொத்து நோய்கள் பரவிக்கொண்டு வருகின்றன. இப்படி வியாதிக்குக் காரணமாயிருக்கிற அநாசாரத்தை ஃபாஷன் என்ற பெயரில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

சரீர வியாதிதான் தொத்துகிறது என்றில்லை. எண்ணங்களும் பிறத்தியாரை பாதிக்கவே செய்கின்றன. இப்போது ஸயன்ஸில்கூடச் சொல்கிறார்கள். 'மூளை எண்ணங்களாக வேலை செய்வதுகூட ஒரு எலெக்ட்ரிக் கரண்ட்தான்; சிந்தனா சக்திக்கு (thought-power) பிறரையும் பாதிக்கிற தன்மை இருக்கிறது' என்று. அதனால் நாம் சரீரத்தையும், புத்தியையும் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதாலும் பிறரின் தேக மன ஆரோக்யங்களுக்கு உபகாரம் பண்ணியவர்களாக (அபகாரம் பண்ணாதவர்களாகவாவது) ஆகிறோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்





மாயாவி

ஒரு துரு துரு திரைக்கதை பின்ன, பிரம்மாண்டமான கதைக் கரு தேவையில்லை. சுவாரஸ்யம் குறையாத, சலிப்புத் தட்டாத சம்பவங்கள்தான் முதல் தேவை. மாயாவி இதற்கொரு கலர்ஃபுல் உதாரணம்.

ஒரு ஜாலி டூரிஸ்ட் கைடு, தனது சகாவுடன் இணைந்து பிரபல நடிகையைக் கடத்திச் செல்வதும், விடுவிப்பதும்தான் கதை.

பென்சில் மீசை, ஃபேன்சி சட்டைகள், ஜாலி சேஷ்டைகள், வாலிபாப் மனசு என, மாமல்லபுரத்தில் டூரிஸ்ட் கைடாக பிழைப்பு நடத்தும் லைவ்லி பாலைய்யாவாக சூர்யா. சுற்றுலா சீசன் மந்தமாகும் தருணங்களில், நண்பன் சத்தியராஜ் (சத்யன்) சகிதம் பசையான பங்களாக்களில் திருடி வயிற்றைக் கழுவி, பசியென்று வருகிறவர்களின் வயிற்றையும் கழுவும் பாலைய்யா பாத்திரத்துக்கு, ஒரு ரியல் லைஃப் கேரக்டர் போன்று உயிர் கொடுத்திருக்கிறார் 'ஜூனியர் சூப்பர்- ஆக்டர்' சூர்யா. திருடப்போன வீடு ஜோதிகாவுடையது என்று தெரிந்ததும், தூங்கிக் கொண்டிருக்கும் ஜோதிகா அருகில் நின்றுகொண்டு "மேகம் கருக்குது...! மின்னல் அடிக்குது" எனப் பாடி ஆடுவது, மிரட்டல் காமெடி!

நடனத்தில் விஜய்யைவிட ஒரு படி உயர்ந்துவிட வேண்டும் என்ற தீர்மானத்தோடு, ஒவ்வொரு பாடலிலும் 'இளமை எக்ஸ்பிரஸ்' ஆகிவிட்டிருக்கிறார். கீப் இட் அப். ஜோதிகாவுக்கு நடிகை ஜோதிகாவாகவே நடிக்க வேண்டிய சவால். சவாலில் ஜெயித்து விடுகிறார். சொந்தக் குரலில் தமிழ் பேசி நடித்திருக்கும் அவர், உற்சாகத்தில் அடிக்கடி டெசிபல் அளவுகளை அதிகமாக்கி கத்தி விடும்போது, காதில் உய்ய்ங்... ஆனால் அதையும் ரசிக்கலாம். முதலில் சூர்யாவை அடியோடு வெறுக்கும் அவர், பின்னர் அவரது மனிதாபிமானத்தைப் பார்த்து காதல் கொள்வது நெகிழ்ச்சி. 'சிம்ரன்தான் என்னோட தலைவி' என்று ஜோதிகாவை வெறுப்பேற்றும் சத்தியன், பாசி மாலை விற்கும் செகப்பி பாத்திரத்தில் மனவளம் குன்றிய பெண்ணாக வாழ்ந்திருக்கும் விஷ்ணுப்ரியா, வெளியே சிரித்து, உள்ளே வில்லனாய்த் திரியும் சினிமா மேனேஜர் சண்முகராஜ் ஆகிய மூன்று பேருக்கும் தியேட்டரில் அடிக்கடி ஸ்பெஷல் கிளாப்ஸ் விழுகிறது.

ஜோதிகாவைக் கடத்தி, மறைத்து வைக்கும் இன்ஸ்பெக்டர் வீடு செம லாஜிக் என்றால், பாதுகாவலர்களைத் தவிர, அந்த வீட்டில் சூர்யா - ஜோ அண்ட் கோ நடத்தும் ரகளைகள், பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக்கூடத் தெரியாமல் இருப்பது, காதில் பூ சுற்றும் மேஜிக்.

எனினும் துளிக்கூட ஆபாசம் இல்லாமல் ஜில்லென்று படத்தை இயக்கியிருக்கும் சிங்கப்புலியை பயப்படாமல் பாராட்டலாம். குழந்தைகளோடு குடும்பம் சகிதமாக கோடையைக் கொண்டாட மாயாவி ஒரு சூப்பர் சாய்ஸ்.

- விஷுவல்தாசன்

● அபவ் அவரெஜ்



அவசரம்!

காலையில் எழுந்த உடனேயே முரளிக்குக் கோபம் கோபமாக வந்தது. சுதந்திரமாய் டாய்லெட்கூட போக முடியவில்லையே என்கிற ஆதங்கம் தான் அப்படி உருமாறியிருந்தது. 'ஏண்டா இந்த வீட்டுக்குக் குடி வந்தோம்' என்று நொந்து போனான். இருக்கிற நான்கு வீட்டுக்கும் (ஹவுஸ் ஓனர் வீட்டையும் சேர்த்து) ஒரே பாத்ரூம், டாய்லெட்தான். எப்போது பார்த்தாலும் இரண்டு கதவுகள் முன்பும் கியூதான். இப்போதும் அப்படித் தான். அடுத்த போர்ஷன் பாலு வாளியோடு டாய்லெட்டின் வெளியே நின்று கொண்டிருக்க, உள்ளே யாரோ இருமிக் கொண்டிருந்தார்கள். கடுப்பை மனைவி மீது காட்டினான்.

''என்னடி காபி போட்டிருக்கே... ச்சே...'' எழுந்து வெளியில் வரவும், அடக்க முடியாமல் இயற்கை உந்தித் தள்ள, 'வேறு வழியில்லை... பொதுக் கழிப்பிடத்திற்குச் செல்ல வேண்டியது தான்...'

அடுத்த தெரு ஆரம்பத்திலிருக்கும் கட்டணக் கழிப்பிடத்தை அடைந்து ஓட்டமும் நடையுமாக உள்ளே செல்ல, அங்கேயும் கியூ. வெறுத்துப் போனான். வேறு வழியில்லாது மூன்று பேருக்குப் பின்னாடி போய் நின்று கொண்டான். பத்து நிமிடங்களாகியும் கியூ நகர்ந்த பாடில்லை.

முன்னால் சென்று ''யாருப்பா அது?'' என்று டாய்லெட் கதவின் மேல் பலமாகத் தட்டினான் முரளி.

உள்ளிருந்து 'ம்...ம்...' என்று குரல் மட்டும் வந்தது. ''வாய்யா வெளில... மனுஷனோட அவசரத்தப் புரிஞ்சுக்காம உள்ள என்ன கனா காணுறியா?''

உள்ளே இருந்தவருக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும்... சடாரென்று கதவைத் திறந்துகொண்டு பிரசன்னமானது...அட அவனது ஹவுஸ் ஓனர்! அவசரத்தையும் மறந்து முரளி சிரித்து விட, அவர் முகத்தில் அசடு வழிந்தது. ○

சென்னையிலிருந்து மு.மாறன்



சின்னான் செய்திகள்



'வாயால 'நாய்'னு சொல்ல முடியும்!

நாயால 'வாய்'னு சொல்ல முடியுமா?' அதான் வாழ்க்கை!

- எப்படி நம்ம 'பஞ்ச்' டயலாக். ஓ.கே. உள்ளே போலாம்.

திண்டுக்கல் தி.மு.க. மாநாடு. ஒவரா 'பாச மழை'யை வைகோ, கலைஞர் மீது பொழிய, 'பாசக்காரத் தம்பி, இந்த இயக்கத்தை இழந்தானா? இல்லை நான் அவனை இழந்தேனா? தெரியலையேப்பா...'ன்னு கலைஞரும் மொழிய, ரெண்டு பேர் கண்ணுலயும், 'கண்ணீர்' தண்ணி லாரியா தறிக்கெட்டு ஓடுச்சாம்! ஹலோ... வைகோ சார், கொஞ்ச தூரத்துல தேர்தல் தெரியுது. சன் டி.வி டாப் 10 மூவிஸ்ல கொடுக்கிற 'ரேட்டிங்' மாதிரியே, தப்புத் தப்பா தொகுதிப் பங்கீட்டுல உங்க 'ரேட்டிங்' கீழ இறங்கிடாம,. ஜாக்கிரதை! (பத்த வைச்சாச்சு!)

"வாங்க... வாங்க... புது சொக்கா, புது சேலை, புது பேண்ட்... எல்லாமே பாதிவிலை... போனா வராது... வந்தாப் போகாது..."ன்னு கூவிக் கூவி சென்னை பல்லாவரத்துல வித்துக்கிட்டு இருந்தவரை, போலீஸ் தாவிப் பிடிச்சுதாம். ஏன்? ஏன்னா நம்ம ஆளு, துணி பண்டலை, 'துணி'கரமா, 'சேலையூர்'ல' இருந்து திருடிக்கிட்டு வந்து வித்தாராம். இப்போ, மனுசன், 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்'னு கம்பி எண்ணிக்கிட்டு இருக்காராம்.

பி.எஸ்.என்.எல். போன் இருக்கு, செல் இருக்கு, வாய்ல 'சொல்' இருக்கு, 'பில்' கட்டணும்னு கவலையில்லைன்னு 'தில்'லா பேசுற ஆளா நீங்க! வேண்டாம் விட்டுருங்க. ஆக்ராவுல பி.எஸ்.என்.எல்.க்கு துட்டை வசூலிக்கற வேலையை தனியார் நிறுவனங்கள் கிட்ட ஒப்படைச்சிருக்காங்க. அதனால என்னன்னு அப்பாவியா கேட்காதீங்க. பொன்னம்பலம், பசுபதி ரேஞ்ச் தாதாக்கள் வீடு தேடிப் போய் மிரட்டி பணம் வசூலிப்பாங்களாம். அய்யய்யோ... 'அடி உதவுற மாதிரி'ன்னு இதைத் தான் சொல்றாங்களா?

பிரான்ஸ் பள்ளிகளில் சீக்கிய மாணவர்களுக்கு டர்பன் கட்ட போடப்பட்ட தடை, மத்த ஐரோப்பிய நாடுகளுக்கும் நீட்டிக்கப்படலாம்னு சீக்கியர்களெல்லாம், தாடியைச் சொறிஞ்சிக்கிட்டு இருக்காங்களாம். கூடிய சீக்கிரமே வழக்கு போடப் போறாங்களாம். ஏம்ப்பா, சர்தார்ஜின்னா நக்கலாப் போச்சா? சர்தார்ஜீ... தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுன்னு விட முடியாது... நீங்க விடாமப் போராடுங்க, ஓ.கேவா! ○



வட்டமேஜை

✉ 'நாங்களும் மனிதர்கள் தான்' கட்டுரை மனதை பாதித்தது. டான்ஸர்கள் மரியாதைக்குரியவர்கள்.
எ.பாளையம், பெ.அமல்ராஜ்

✉ குடும்ப அரசியல், சுயநலம், ஊழல் நிறைந்த மனிதர்களால் குட்டிச் சுவராகியுள்ள அரசியலை, விஜயகாந்த் போன்ற நடிகர்கள் வந்து புதிதாக ஒன்றும் சீரழித்துவிடப் போவதில்லை.
அறந்தாங்கி, பிரகதீஸ்வரி

✉ 'அம்மா Vs கண்ணம்மா!' செம கலாட்டா!
மதுரை, என்.பாலகிருஷ்ணன்

✉ கிரிக்கெட் போட்டி பற்றிய ராமதாசின் கருத்து சரியே. தராசாரின் கருத்து சிறுபான்மையான மாணவர்களுக்குத்தான் பொருந்தும். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது தேர்வு எழுதிய மாணவர்களின் தேர்ச்சி விகிதமே இதற்குச் சான்று!
திருவாரூர், வரதன்

✉ மத்திய பட்ஜெட்டை அக்குவேறு ஆணி வேறாக அலசி, 'இது ஒரு பகற்கனவு பட்ஜெட்' என்று கூறிய கல்கியின் தைரியத்தைப் பாராட்டுகிறோம்.
மயிலாடுதுறை, க.இராஜசேகரன்

✉ பெண்களை வியாபாரமாக்கும் பத்திரிகைகளுக்கு மத்தியில், உழைக்கும் பெண்களுக்காக சிறப்பிதழ் வெளியிட்டு உயர்ந்து விட்டீர்கள்!
கல்பூண்டி, பூ.சீனிவாசன்

செம கலாட்டா!

✉ ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தடாலென்று தடம் புரண்டது தன் பதவிக்காகவெனில், கட்சிக்கென முதல்வர் பதவியையே துறந்த காமராஜர் ஆட்சிக்கு, இனியும் அவர் கனவு காண்பது அர்த்தமற்றது.
மணவாள நகர், பொன். இளவேற்கோ

✉ ஆச்சி மனோரமாவின் ஆதங்கப் பேட்டி, நெஞ்சைச் சுட்டது. திரைத்துறையினர் உணருவார்களா?
முத்துப்பேட்டை, கே.சுப்பிரமணியன்

✉ பசுமைப் போராளி ரேவதியின் செயலுக்கு அரசும் மக்களும் ஒத்துழைத்தால், இந்தியா விஷமில்லா விவசாயப் புரட்சியைச் செய்யும்.
கரூர், க.குழந்தைவேல்

✉ ஆசிரியரின் 'வீடுபேறு' கவிதை வித்தியாசமாய் மிளிர்ந்தது.
மதுரை, இரா.கல்யாணசுந்தரம்

வாரம் ஒரு வாசகர்!

தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் என்று மூன்று திமிங்கலங்கள் இருக்கிற அரசியல் கடலில், விஜயகாந்த் கட்சி மிகச்சிறிய மீன். எல்லாவற்றையும் யோசித்து, ஆராய்ந்தறிந்து அவர் முடிவெடுக்க வேண்டும். அதுதான் எல்லோருக்கும் நல்லது.

- த.சத்தியநாராயணன்,
அயன்புரம்



இளமை கல்கி

“மாடலிங்க் டாட்டா!”

பிரார்த்தனா... தமிழ் சினிமா கொத்திச் செல்ல முடியாத நம்பர் ஒன் மாடலிங் பெண். கோடம் பாக்கத்துக்கு மட்டுமல்ல, பேட்டிகளுக்கும் ‘ந்நோ’.. என்று அலறுபவரை ஒருவழியாய் இளமை கல்கிக்காக வளைத்துப் பிடித்தோம். (ஆச்சர்யம், தேனாகத் தமிழ் பேசும் அரிதான மாடல்களில். ப்ரார்த்தனாவும் ஒருவர்.)

ஆமா, ஏன் பேட்டின்னா கூட அலர்றீங்க?

“இல்லைங்க. எனக்கு எந்த பப்ளிசிட்டியும் வேண்டாம். ஏன் இப்போ நான் மாடலிங்கிலேயே இல்லை தெரியுமா?”

அச்சச்சோ, என்னாச்சு?

“நான் இப்போ எம்.ஏ. பப்ளிக் ரிலேஷன்ஸ் படிக்கிறேன். காலேஜ், மாடலிங் இரண்டையும் ஒரே நேரத்துல பண்ண முடியலை. அதனால படிப்பு முடியற வரைக்கும் மாடலிங்குக்கு டாட்டா!”

முன்னணி மாடல் நீங்க... தமிழ் சினிமா ஆசை வரலையா?

“மாடலிங்கே இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். ஏதோ ஹாபியா பண்ணினேன். எல்லோரும் பாராட்டும்படி பிரபலமானேன். இவ்வளவு போதும். டைரக்டர் ஷங்கரிலிருந்து நிறையப்பேர் நடிக்கக் கூப்பிட்டாங்கதான். ‘கதை கேட்டுட்டு பிடிக்கலைன்னா ‘நோ’ன்னு சொல்லுங்க’ன்னாங்க.





இன்னொரு த்ரிஷா?

தமிழ்நாட்டில் ஆயிரம் அழகிப் போட்டிகள் நடக்கட்டுமே... 'மிஸ் சென்னை'க்கிருக்கும் மவுசும் பளபளப்பும் வேறெந்தப் போட்டிக்கு உண்டு!

விபா நிறுவனம் நடத்தும் கண்ணுக்குக் குளிர்ச்சியான இப்போட்டியில் இவ்வருடத்திலிருந்து சிறு மாறுதல் - அழகிகளின் அதிகபட்ச வயது 23லிருந்து 26ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 'அட, பெண்கள் வயதைக் குறைத்துத்தானே சொல்வார்கள்?' என்றால், "அப்படியில்லை கல்லூரிப் பருவம் முடித்த பின்புதான் இது போன்ற போட்டிகளில் கலந்துகொள்ள பெண்களுக்கு தத்தம் வீடுகளில் அனுமதி கிடைக்கிறது. அதனால்தான்" என்று சிறு குறிப்பு வரைந்தார் போட்டியை வருடா வருடம் சிறப்பாக நடத்தும் ஷோபா ரவிசங்கர்.

இறுதிச் சுற்றில் தேர்வாகியிருக்கும் 12 பேரில் கணிசமானோர் எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரி மாணவிகள். பீட்டரிங் விட்டுக் கொண்டிருந்த அத்தனை பேர் மத்தியிலும், தங்கிலீஷில் ரம்யா, ஜெயா சாட் செய்து கொண்டிருக்க, விசாரித்ததில் இருவரும் டீ.வி தொகுப்பாளினிகளாம். அதானே! சென்னைப் பெண் என்கிற ஒரே தகுதியோடு பிரான்சில் வசிக்கும் சிஜா, பறந்தோடி வந்து போட்டியில் இடம் பெற்றிருக்கிறார்.

'மிஸ் சென்னை' பட்டம் வென்று இன்னொரு த்ரிஷாவாக மாட்டோமா என்கிற எதிர்பார்ப்பு பன்னிரண்டு பேரின் கண்களிலும் ஒளிர்ந்தது!

- கௌதம் ராம்

நான் மசியலை. ஆனா என்னால கஷ்டப்பட்டெல்லாம் நடிக்க முடியாது. சினிமா எல்லாம் எனக்குத் தேவையே இல்லை."

எதிர்காலம்?

"என் உலகமே வேற. நேத்து கூட கல்லூரி சார்பா குடிசைப் பகுதிகளுக்குச் சென்று மார்பகப் புற்று நோய் சம்பந்தமான கேம்ப்ல என்னை ஈடுபடுத்திக்கிட்டேன். படிப்பு முடிந்த பின் கேமரா, லைட்டிங் போன்ற எந்த 'பளபள'ப்பான சூழலுமில்லாம ஒரு கம்பெனியில மனித வளத்துறை பணியில் (H.R) அமரப்போறேன்."

- ச.ந.கண்ணன்

படம் : **சந்தோஷ் ராஜ்**

இளமை கல்கி

"சூப்பர் குட் படம் பண்ணமாட்டேன்!"

'ராம்' ரகளையாகப் போவதில் ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கிறார் ஜீவா. சூப்பர் குட் ஃபிலிம்ஸ் அலுவலகத்தில் நாம் அவரைச் சந்தித்த போது குஷியாகப் பேசினார்...

ராம் சாதித்து விட்டான். எப்படி உணர்கிறீர்கள்?

"ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன். நாங்க எதிர்பார்த்ததைவிட படம் ரொம்ப நல்லா வந்திருக்கு... நல்லாவும் போயிட்டிருக்கு... இன்னொரு சந்தோஷம், மக்கள் விரும்பறதை கொடுத்துட்டோம்ங்கிறதுதான்."



ராம் கேரக்டருக்காக உங்களுடைய ஹோம் ஒர்க் எப்படி இருந்தது?

"ம்... ஒரு சீன்ல 'நான் சாமி புள்ளைடா'ன்னு சொல்வேன். ஒல்லியா உடம்பை வச்சுக்கிட்டு இப்படி டயலாக் விட்டா 'பல்லி புள்ளை மாதிரி இருக்கான்'னு கேலி பண்ணிடுவாங்க. ஸோ.. அதுக்கேத்த மாதிரி உடம்பை பில்ட் அப் பண்ணினேன். ஸ்கின் டோனையே மாத்தற அளவுக்குக் கடுமையான மேக்கப். செட்லயே படுத்து மண்ணுல உருள வேண்டியிருந்தது. இப்படி நிறைய ஹோம் ஒர்க்."

ஆர்ட் ஃபிலிம் சாயல் இருப்பதால் கமர்ஷியலாக வெற்றி பெறும் என்று நினைத்தீர்களா...?

"ஆரம்பத்துல அப்படித்தான் நினைச்சாங்க. ஆனா நான் அப்படி நினைக்கல. 'மக்கள் விரும்பறதை பக்காவா தந்தா நிச்சயம் ஏத்துப்பாங்க. கமர்ஷியலா வெற்றி கிடைக்கும்'னு நம்பினேன். இப்போ அது உண்மையாயிடுச்சு."

இன்றைய இளம் ஹீரோக்கள் காதல் கதைகளுக்கு முக்கியத்துவம் தரும்போது, ராம் மாதிரியான கதையில் நடிப்பது விஷப் பரீட்சையாக தோன்றவில்லையா...?

"விஷப்பரீட்சைதான். பத்தோடு பதினொண்ணா நான் இருக்க விரும்பல. இப்போ இருக்குற டிரெண்ட்ல ரிஸ்க் எடுத்துதான் நம்மை நிரூபிக்க வேண்டியிருக்கு. ஒருவேளை 'ராம்' கமர்ஷியலா வெற்றி பெறலைன்னாலும் எங்களுக்கு நல்ல பேர் வாங்கித் தந்திருக்கும். இது ரிஸ்க் எடுத்த தாலதானே கிடைச்சது!"

'ராம்'க்கு யார் இன்ஸ்பிரேஷன்...?

"யாரைப் பார்த்து காப்பியடிச்சீங்கன்னு கேட்கறீங்க.... ஓ.கே. இந்த கேரக்டர்ல யாரோட சாயலும், குறிப்பா விக்ரம் சாயல் இருக்கக் கூடாதுங்கறதுல ரொம்ப கவனமா இருந்தேன். முழுக்க முழுக்க அமீரால் வார்த்தெடுக்கப்பட்டவன்தான் இந்த ராம்."

ராசியில்லாதவர் என்று முத்திரை குத்தப்பட்ட கஜாலாவுடன் நடிக்க தயக்கம் இருந்ததா...?

"என்னோட முந்தின ரெண்டு படங்கள் கூடத்தான் சரியாப் போகல... இதே மாதிரி அவங்க நினைச்சிருந்தா என் கூட நடிச்சிருப்பாங்களா...? இந்த விஷயத்துல ராசி, அதிர்ஷ்டம்ங்கறதை விட டெடிகேஷன்தான் முக்கியம்."

அடுத்தடுத்த படங்களில் ஜீவாவை எப்படிப் பார்க்கலாம்...?

"இப்போ ரெண்டு படம் கமிட் ஆகியிருக்கு. 'ராம்' சீரியஸ் படம்ங்கறதால நிச்சயமா அடுத்த படம் என்டர்டெய்ன்மெண்ட் சப்ஜெக்ட்தான். வித்தியாசமான

கேரக்டர்கள் செய்ய ஆர்வமா இருக்கேன்."

சூப்பர் குட் ஃபிலிம்ஸுக்கு படம் செய்ய உள்ளீர்களா...?

"இல்ல... ஏன்னா எனக்கு இப்போதைக்கு வெளிப்படங்கள்தான் கமிட் ஆகியிருக்கு. அப்பாவும் தெலுங்குல பிஸியா இருக்கார்."

ஆர்.பி.சௌத்ரியின் மகனாக இருப்பதன் பலம், பலவீனம்...?

"அவரோட மகனா இருக்கறதாலதான் மூணு படம் நடிச்சி முடிச்சிருக்கேன். இல்லைன்னா கோடம்பாக்கத்துல ஏதோ ஒரு மேன்ஷன்ல இருந்து சான்ஸ் தேடிட்டு இருப்பேன். பலவீனம்னா, ஸ்பாட்ல என்கூட சகஜமா பழகாம, முதலாளி மகன் மாதிரியே நினைச்சு ஒதுங்கறாங்க."



–'ராம்' ஜீவா

உங்களுடைய ப்ளஸ், மைனஸ்...?

"தன்னம்பிக்கை தான் என்னோட ப்ளஸ்... சின்னச் சின்ன சென்டிமெண்ட்ஸ் உண்டு. அதுதான் என்னோட மைனஸ்."

உங்கள் லவ் மேரேஜ் எப்பொழுது?

"முடிவே பண்ணியாச்சா... இன்னும் ஒரு பிரதருக்கு கல்யாணம் ஆகல. ஆயிடுச்சின்னா நமக்கு லைன் கிளியர்..." (அப்படிப் போடு!)


- முத்து

படம்: ராஜன்

E = ஹிஹி^{2}

இந்த வருடம் முழுக்க ஐன்ஸ்டினைப் பற்றி உலகமே பேசிக் கொண்டிருக்கப் போகிறது. ஏன் தெரியுமா? ஐ.நா.சபை இந்த வருடத்தை உலக இயற்பியல் ஆண்டாக அறிவித்திருக்கிறது. அவரது இயற்பியல் சமாசாரங்களை ஓரங்கட்டிவிட்டு, இளமைக் கால குறும்புகள் சிலவற்றைப் பார்ப்போம்.

* "உங்கள் பையனைப் போல ஒரு மக்கை நான் இதுவரை பார்த்ததில்லை. என்னால் இவனுக்குப் பாடம் எடுக்க முடியாது. தயவு செய்து இவனைக் கூப்பிட்டுக் கொண்டு போய் விடுங்கள்" - ஐன்ஸ்டினின் பெற்றோரை அழைத்த அவரது ஆசிரியர் தான் இவ்வாறு புகழ்ந்திருக்கிறார்! கூடவே, "இவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால் நேரம், பணம் எல்லாம் வேஸ்ட்" என்றும் கூறியிருக்கிறார்.



* ஜாலியாக பாட்டு கேட்பது, சைக்கிளில் ரவுண்டு அடிப்பது... இவைதான் அவரது இளமைக்கால பொழுதுபோக்குகள்.

* 1885இல் டிப்ளமோ படிப்பிற்கான ஒரு முக்கிய நுழைவுப் பரீட்சையில் மிகவும் நன்றாக எழுதி 'கோட்' அடித்திருக்கிறார்.

* உயர்நிலைப் பள்ளியில் படித்த போது, தத்துபித்தென்று இவர் எழுதிய ஒரு கட்டுரைக்கு ஏதோ போனால் போகட்டுமென்று வெறும் பாதியே பாதி மார்க் போட்டிருக்கிறார்கள்.

* 'ம்ஹூம்... யூனிவர்சிட்டிக்கெல்லாம் போய் படிப்பேன் என்கிற நம்பிக்கை எனக்குக் கிடையாது' என்று தன் கைப்பட எழுதி வைத்திருந்தார் ஐன்ஸ்டின்.

* 'நீ அச்சு அசல் ஐன்ஸ்டின்தான்' என்று உங்களிடம் யாராவது சொன்னால், அவர் புகழ்கிறாரா இல்லை கிண்டல் செய்கிறாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமோ அவசியம்.

- மருதன்

யாருடைய கருத்துடனும் முரண்பட நமக்கு உரிமை உண்டு. ஆனால் அந்தக் கருத்தைச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. இந்த அடிப்படைப் பண்புதான் மக்களாட்சித் தத்துவத்தின் வேர். அதை மறவாமலும், அதே நேரம் தங்களது பத்திரிகைக்கு உரிய தர்மம் என்று முடிவு செய்த கொள்கையில் உறுதியாகவும் இருப்பது கல்கியின் சிறப்பு.

அண்மையில் சங்கராச்சாரியார் விவகாரத்தில்கூட அரசின் நிலை குறித்து தங்கள் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி, இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு மடம் இடம் கொடுத்திருக்க வேண்டாம் என்ற தார்மிக கோபகத்தையும் வெளிப்படுத்தியது பாராட்டுக்குரியது.

- வழக்குரைஞர் அருள்மொழி



கொள்கையில் உறுதி!

படம்: ஸ்ரீஹரி



மங்கையர் மலர்
மங்கையர் சக்தி
மகத்தான சக்தி
மங்கையர் மலர் வெள்ளிவிழா
சென்னையில் ஒரு வீடு வேண்டுமா?
முன்பணம் செலுத்த வேண்டாமா!?
EMI கட்ட வேண்டாமா!
ஏப்ரல் 2005 இதழ் வாங்கி,
போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள்!
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
நீங்களாகவும் இருக்கலாம்!
வீடு வழங்குவோர்
KGEYES
KGEYES RESIDENCY PVT LTD., CHENNAI.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

Happiness Starts at SIXTY

Earn upto 1% additional Interest

Special benefit for Senior Citizens. Earn upto one percent more interest on our deposit schemes



DOMESTIC TERM DEPOSITS

Period	For Deposits of less than Rs. 25 lakhs	For Senior Citizens Deposits of less than Rs. 25 lakhs
7 - 14 days (*)	4.50 %	5.50 %
15 - 45 days	4.50 %	5.50 %
46 - 90 days	5.50 %	6.50 %
91-179 days	5.75 %	6.75 %
180 days to less than 12 months	6.00 %	7.00 %
12 months to 3 years	7.00 %	7.50 %
Above 3 years and upto 5 years	6.75 %	7.50 %
Above 5 years	6.75 %	6.75 %

(*) For deposits of Rs.1 Lac and above (Rate % p.a.)

Note : 1) Additional rate of 0.25% is payable for a single deposit of Rs. 25 lacs & above and less than Rs.5 crores for 7 days to 179 days maturity.

2) Avail 6.75% on a single deposit of Rs.5 crore and above for 91 days to 364 days maturity.

High Interest Deposit Schemes

- TMB Visa
- Pearl Deposit
- Muthukuvial Deposit
- Cash Certificate
- Fixed Deposit
- Recurring Deposit
- Navarathnamala Deposit

TAMILNAD MERCANTILE BANK LTD.

Regd. Office : 57, V. E. Road, Thoothukudi - 628 002
Contact our nearest branch or Visit us at www.tnmbonline.com